அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 03-12-1993

# "இராணுவத் தீர்வு காண முயலுகையில் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை"

## – தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் தினச் செய்தி –

"இன்று சிறீலங்கா அரசாங்கம் இராணுவத் தீர்வு காண்பதிலேயே முனைந்துள்ளதால், தமிழீழ மக்களுக்குத் தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஈழப்போர் -2 ஆரம்பமான நாள் முதல் அமைதி வழித் தீர்வுக்கான எங்கள் விருப்பை, நாங்கள் பலமுறை வெளிப்படுத்திய போதிலும் சிறீலங்கா அரசாங்கம், பேச்சு வார்த்தையை முன்னெடுப்பதற்கான எங்கள் விருப்பைப் பொருட்படுத்தாது, இராணுவ நடவடிக்கைகளை அதிகளவில் நடாத்தி வருவதும் அல்லாமல், பொருளாதாரத் தடை மூலம் ஆக்கிரமிப்புச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றது. ஆயினும் எந்தச் சக்திகளினாலும் தமிழீழ விடுதலைப் போரட்டத்தை ஒடுக்க முடியாது. மாவீரர்களின் தியாகங்களால் எமது போராட்டம் வலிவு பெற்றுள்ளது. அத்துடன் எம் தியாகிகள் மூலம் தமிழர்கள் தம்மைத் தாமே ஆள்வதற்கான ஒரு நாட்டை அமைப்பதில் கொண்டுள்ள விருப்பும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இந்த நாட்டில் சிங்கள இனவாதம் தொடர்ந்தும் கோலோச்சி வருமேயானால், எங்களுக்குள்ள ஒரே வழி தமிழீழமே தவிர வேறு எதுவுமில்லை." எனத் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் மாவீரர் தினத்தையொட்டி விடுத்துள்ள செய்தியில் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

தொடர்ச்சி 15ம் பக்கம் ....



மாவீரர்களுக்கு மரியாதை செய்யும் தமிழீழத் தேசியத் தலைவர்

# யுத்தமே சிறீலங்காவின் ஒரே நோக்கு

## ☆ 113 கோடி 71 இலட்சம் மேலதிக பணம் ஆயுதத்திற்கு

## ☆ வடபகுதி இராணுவத் தலைமைகளில் மாற்றம்

"தமிழினப் படுகொலையை யுத்தத்தின் மூலம் நிகழ்த்துவது" என்பதே சிறீலங்கா அரசாங்கத்தின் ஒரே நோக்கமாக உள்ளது. பூநகரியில் படுதோல்வியடைந்த சிறீலங்கா அரசாங்கம் அந்தத் தோல்வியின் பின்னும்கூட, தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான எத்தகைய சாத்தியக்கூறுகளையும் வெளிப்படுத்தவில்லை. மாறாக சிறீலங்கா அரசாங்கம் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் 61 கோடியே 31 இலட்சம் ரூபாவை சிறீலங்கா இராணுவத்திற்கும், 52 கோடியே 40 இலட்சம் ரூபாவை சிறீலங்காக் கடற்படைக்கும் அவசரம் அவசரமாக, மேலதிக நிதியாக ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த 113 கோடியே 71 இலட்சம் ரூபா பெறுமதியுடைய ஆயுதத்துக்கான மேலதிக நிதி ஒதுக்கீட்டுக்கான பிரேரணையை, சிறீலங்கா ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவே சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

### இராணுவத் தலைமைகளில் மாற்றம்

வடபகுதிக்கான இராணுவத் தலைமைகளில் அவசர மாற்றங்களை சிறீலங்கா அரசாங்கம் செய்துள்ளது. வடபிராந்திய யுத்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக, சிறீலங்கா இராணுவத்தில் அதிகாரிகளின் தலைவராக இருந்த ஜெரி டி. சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். இராணுவத்தில் இரண்டாவது பதவி நிலையில் இருந்த ஒருவருக்கு, அதுவும் இவ்வருடத்துடன் பதவிக் காலம் முடிவடைய இருந்த இவருக்கு, சிறீலங்கா ஜனாதிபதி பதவி நீடிப்பு செய்து, பதவி உயர்வு அளித்தமை, சிறீலங்கா ஜனாதிபதிக்கு மற்றைய இராணுவ அதிகாரிகளின் மீதுள்ள நம்பிக்கையின்மையைப் பிரதிபலிப்பதாக இராணுவ வட்டாரங்களில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

யாழ். பொறுப்பதிகாரியாக இருந்து படுதோல்விகளைத் தழுவிய நம்முனி, தண்டனை இடமாற்றத்துக்கு உள்ளாகி கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்கு அசோக ஜயவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளார். ஆயினும்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# வழக்கு தாக்கல் செய்யாத நிலையில் 1007 தமிழர்கள் 3 வருடமாக சிறையில்

சிறீலங்கா அரசாங்கம் தமிழர்களை எவ்வாறு சர்வதேச ஜனநாயகச் சட்டங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் நடாத்துகிறது என்பதை, மனித உரிமைகள் செயலணிக்குழு வெளியிட்டுள்ள புள்ளி விபரம் மேலும் தெளிவாக்குகின்றது. சிறீலங்கா அரசாங்கத்தின் பொலிஸ் -இராணுவப் படைகளின் காவலில் 2,500 தமிழர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர் எனவும், இவர்களில் 1007 தமிழர்கள் மூன்று வருடத்திற்கும் மேலாக எவ்வித வழக்கும் தாக்கல் செய்யப்படாத நிலையில் சிறை வைக்கப்பட்டுள்ளனர் எனவும் மனித உரிமை செயலணிக்குழு செய்தி வெளியிட்டுள்ளது.

### தென் தமிழீழத்தில் காரணமில்லாத கைதுகள்

மட்டக்களப்பு, திருமலை பிரதேசங்கள் உட்பட தென் தமிழீழம் எங்கும் கடந்த மூன்று வருடங்களில் ஐயாயிரத்துக்கு மேலானவர்கள் காணாமல்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# உயிரிழப்புகளை விட டாங்கிகளை புலிகளிடம் இழந்தமை பேரிழப்பு

## – சிறீலங்கா இராணுவத் தளபதி

"நானூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரை நாம் இழந்ததைவிட, இரண்டு முக்கிய யுத்த தாங்கிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் எம்மிடம் இருந்து கைப்பற்றியிருப்பது, எமக்குப் பேரிழப்பு மட்டுமல்ல பெரும் அவமானமுமாகும்"

இவ்வாறு சிறீலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ண ஆத்திரத்துடன் கூறியதாக, சிறீலங்காவின் தலைநகரான கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறீலங்கா இராணுவமும், அரசாங்கமும் சிங்கள மக்களை எவ்வாறு தமது ஆதிக்க வெறிக்குப் பலியாக்கி வருகிறார்கள் என்பதற்கு, சிறீலங்கா இராணுவத் தளபதியின் இக்கூற்று சிறந்த சான்றாக உள்ளது.

### 'போர் மூலம் தீர்க்க முடியாது'


இதற்கிடையில் சிறீலங்காவின் முன்னாள் வான்படைத் தளபதி ஹரி குணதிலகா, "பூநகரித் தோல்வியின் பின்னராவது, போர் மூலம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை அனைவரும் உணர வேண்டும். சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளுக்கு ஏற்படும் தொடர்ச்சியான தோல்விகளைப் பார்க்கையில், சிறீலங்கா அரசாங்கத்தின் நிலப்பரப்புக்களைக் கூட சிறீலங்காப் பாதுகாப்பு படைகளால் பாதுகாக்க முடியுமா? என்பது சந்தேகத்திற்கு இடமாகி வருகிறது. இராணுவத்தின் ஆற்றல் குறித்து அதிருப்தியும், சந்தேகமும் நிலவுகிறது. இந்நிலையில் யுத்தம் தொடருமானால், சிறீலங்கா இராணுவத்தின் இறப்பு வீதமே அதிகரிக்கும் நிலை காணப்படுகிறது" எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

### தீர்வின் மூலம் யுத்தத்தை நிறுத்தலாம் - வாசுதேவ நாணயக்கார

"யுத்தத்தின் மூலமாக தீர்வை நாடுவதை விட தீர்வின் மூலமாக யுத்தத்தை நிறுத்துவதே சிறீலங்கா படுதோல்விகளைத் தவிர்ப்பதற்கான வழி" என சிறீலங்காவின் நவசமசமாஜக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார சிறீலங்காப் பாராளுமன்றத்தில் கருத்து வெளியிட்டுள்ளார். "பூநகரியிலும் கிளாலியிலும் பல மில்லியன் ரூபா பெறுமதியான ஆயுதங்களை சிறீலங்கா புலிகளிடம் இழந்துள்ளது. பூநகரியில் ஏற்பட்ட தோல்வி சிங்கள மக்களுக்கு அல்ல. சிறீலங்கா அரசுக்கே அவமானத்தை தோற்றுவித்துள்ளது. பேச்சு வார்த்தைக்கு வந்தால், ஒரு மருந்து வராவிட்டால் வேறு மருந்து இருக்கிறது என்று சொல்பவர்கள் தான், பிரச்சினைகளை வளர விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அரசியல் யதார்த்தத்தை இவர்கள் உணரவில் என்றே கூறத் தோன்

தொடர்ச்சி 14ம் ...

புலிகளின் தாகம் தமிழீழத் தாய...



# ஆறாயிரம் சுடர்கள்

தமிழீழ மண் மீது ஆறாயிரம் உயிர்ச் சுடர்கள். காலத்தை வென்று மரணமில்லா மனித குலமாக, மாவீரர்களாக மண்ணுக்காய் மரணித்த மறவர் பெருங்கூட்டம். காலம் அவர்களுக்கொரு கட்டளையிட்டது. களத்தினில் வாவென்று. நஞ்சு மாலை தரித்தொரு தேதி குறித்தனர் மானம் பெரிதென்று. "தடைகள் கோடி என்றாலும், படைகள் தேடி வந்தாலும், விடைகள் எங்கள் தோள்களில் உண்டு. விடிவை நாங்கள் உருவாக்குவோம். நாளை மலரும் ஈழத்திலே சுதந்திர மலர்கள் மொட்டவிழும். இன்றைய எங்கள் போராட்டம் முடிவாய் இதற்கொரு பதில் சொல்லும்' என்று தமிழர்க்கு நடக்கும் அத்தனை கொடுமைகளுக்கும் முடிவுரையை தம்பியின் தலைமையிலே எழுதி வைக்கப் புறப்பட்ட பெருமக்கள் இவர்கள். 'ஆடவர், மகளிர் என்ற பேதமற்ற யுத்தமம்மா, தர்மமா? இல்லை அதர்மமா? என்ற கேள்வியம்மா. தமிழர் கைகளில் ஏந்தும் துப்பாக்கி விடை சொல்லுமம்மா. வீரமரணத்தை நான் அடைந்த களம் வாருமம்மா வீரசபதம் கொண்டு நீ எதிரிப் படைகளை விரட்டிடம்மா' என்று தாயையும் தமிழர் தன்மானம் காக்க அழைப்பு விடுக்கும் இளம் மொட்டுக்கள்; சுதந்திரச் சிட்டுக்கள் இந்த வீரர்கள். மாசற்ற நெஞ்சத்தைக் கொண்டவன் தன்மானத்தை உயிராய்க் கண்டவன் -வீசிடும் புயலாய் களம் ஆடுவான் -பகை வீழ்த்தியே புலியாய் வாழுவான், எனப் புதியதொரு மக்கள் இராணுவத்தை உலகுக்கு இனங்காட்டியது இவர்களது தன்னலமற்ற பண்புகள். 'படையணி நகரும் எங்கள் படையணி நகரும்; அலை கடல் என எதிரி வரினும் -பல்லாயிரம் பகைவர் எனினும் வீறு கொண்டு எழுந்த எங்கள் படையணி வெற்றியுடன் நகரும் என இவர்கள் தம் உடலால் உயிரால் நடத்திய படையணிதான் இன்று தமிழீழ விடுதலைப் போராட்டம் என்றொரு போராட்டத்தை உலகு இனங்காண அதன் குணம் காண வழிவகுத்தது. வீரர்கள் என்றும் சாவதில்லை. சாவுக்குப் பயந்தவர் வீரரில்லை என்று மண்ணுக்காய் மண்ணை முத்தமிட்டுச் சென்றனர்.

சாவே வாழ்வின் உதயம் என்றனர். நாளை எங்கள் சந்ததிக்கு நாங்கள் தானே தீபம்; வேளை வரும்போது நாட்டின் விழுதுகளாய் ஆவோம் என்றனர். சொல்லேருழவர் அல்ல செயலேருழவர் எனத் தம் சாவினால் சான்று தந்தனர். சந்ததிக்காய் நடத்திடும் சமரினிலே சந்ததிக்கான சாவாகி சரித்திரம் எழுதி நின்கின்றார்கள் வீரத்தின் விளைநிலங்கள்; ஈழத்தின் ஒளிர்வதனங்கள். விடுதலை வானத்து வீழ்ச்சியில்லா விண்மீன்கள் இவர்கள் தான் எங்கள் ஆறாயிரம் மாவீரர்கள்.

இந்த மாவீரர்களால் ஒரு கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. "இந்த மண் யாருக்கும் பணியாது -தமிழ் ஈழ மண் எதிரிக்கு குனியாது" என்பதே அக்கொள்கை. இக்கொள்கை அவர்களின் சதைகளால் அச்சாக்கப்பட்டு அவர்களது உயிர்களால் ஒப்பமிடப்பட்டுள்ளது. "பாசத்தை மறந்து பந்தத்தைத் துறந்து மண்ணில் புதைந்த மாவீரரே -தேகத்தை மறந்து தேசத்தை நினைந்து எங்களில் வாழும் செல்வங்களே" என நாம் பாசமுடன் மாவீரர்களைப் போற்றும்போது, அவர்கள் கொள்கை எம் கொள்கையாகின்றது. ஒவ்வொரு தமிழ் மகனினதும் தன் மானத்துக்காக -தமிழ்த் தேசியத்துக்காக -தமிழர் நல்வாழ்வுக்காக -பிறர் வாழ தம் வாழ்வு தந்த தன்னலமற்ற தமிழ்ப் பிறப்புக்கள் நம் மாவீரர்கள். "அம்மா தமிழோ மிகவும் இனியவள். அண்ணா, அக்கா மாபெரும் வீரர்கள். தமிழரெல்லோரும் எங்கள் உறவினர். நாங்கள் தமிழீழ நாட்டின் செல்லக் குழந்தைகள்" என்று விடுதலை நெருப்பினுள் நின்று எங்கள் பிஞ்சு உள்ளங்கள் பாடும்போது, தமிழர் ஒவ்வொருவருமே இந்த மாவீரரின் இனத்தில் நாமும் வந்தோமெனப் பெருமிதம் கொண்டு இறுமாப்பு எய்துவர். அவ்வாறாயின், அவர்கள் பெருமையில் உரிமை கொள்ளும் ஒவ்வொரு தமிழனுக்கும், அவர்கள் கடமையில் பங்குமுண்டு என்பதை மறக்கக் கூடாது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது ஒரு அரசியல் போராட்டம் அல்ல. தமிழரின் வாழ்வா, சாவா என்ற கேள்விக்கான வேள்வி. இதில் தமிழர் பெறும் ஒவ்வொரு வெற்றியும் உலகெங்கும் வாழும் தமிழர் ஒவ்வொருவரது வாழ்வுக்கும் கிடைக்கும் உத்தரவாதங்கள். தமிழர் என்றொரு இனம் உலகில் நிலைபெறவேண்டுமானால், தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெறவேண்டும். இதற்கான அரசியல் காரணங்களை எந்த ஒரு அரசியல் விமர்சகனும் நன்கறிவான். ஆதலால் மாவீரர்கள், தமிழீழ மக்களின் சொத்துக்கள் மட்டுமல்ல, தமிழர் அனைவரதும் சொந்தங்கள். எனவே அனைத்துத் தமிழரும் மாவீரர் கொள்கை மண்மீது வெற்றி பெற உழைக்க கடமைப்பட்டுள்ளனர்.

சிறப்பாகத் தமிழ் மக்களாகிய நாம், புலிகளின் வீரம் தன்னை உலகெங்கும் உரைத்து, மாவீரர் தியாகத்தின் தேவையை உலகுக்கு உணரச் செய்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உலக அங்கீகாரத்தை வளர்ப்போம். பெருகும் உழைப்பும் அளித்து மாவீரர் பட்டியல் நீளாது, மாவீரர் கனவு விரைவு பெற உழைப்போம். தன்னலமற்ற மாவீரரை நெஞ்சிருத்தி, எம் தன்னலங்கள் மறந்து நாட்டு நலத்தில் இணைவோம். செல்லுமிடமெங்கும் எங்கள் தேசியத் தலைவன் பிரபாகரன் தலைமையில் நடக்கும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை எடுத்துரைத்து, சிங்கள பௌத்த பேரினவாத சிறீலங்கா அரசின் இன அழிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கும்படி உலகைக் கேட்போம். என்று, தமிழீழத் தேசியக் கொடி நம்மண்ணில் சுதந்திரக் கொடியாய் எழுகிறதோ அன்றுதான் மாவீரர் கனவு நனவாகும். அதுவரை நாமும், "சங்கொலிக்க எங்கள் கொடி விண்ணில் ஆடிடும், சந்ததிக்கு வென்ற கதை சாற்றிப் பாடிடும். எங்கள் வாழ்வின் விளக்கொளிர எண்ணெயானவர், எண்ணிலாத தியாகவழி கால்கள் நாடிடும்" என அசைக்க முடியாத நம்பிக்கையுடன் பாடலிசைத்து தலைவன் பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றிபெற எம் மாவீரர் நாளில் திடசங்கற்பம் செய்வோம். ஆறாயிரம் உயிர்ச் சுடர்களின் ஒளியினால் அகலட்டும் அடிமையின் மனோபாவமும் தமிழீழ மண்ணின் அடிமை இருளும். ■

# சிங்கள மக்களுக்கு எதிராகவும் சிறீலங்கா யுத்தக் குற்றம்

தமிழ்த் தேசிய இனமக்களுக்கு எதிராக எத்தனையோ யுத்தக் குற்றங்களைச் செய்து, சர்வதேச யுத்த விதிகளைப் புறக்கணித்து வரும் சிறீலங்கா அரசாங்கம், தனது சிங்கள தேசிய இன மக்களுக்கு எதிராகவும் யுத்தக் குற்றச் செயல் புரிவதாக சிங்கள அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இராணுவப் பயிற்சிக்கு என தேர்ந்தெடுக்கப்படும் ஒருவரை, பயிற்சி நிலையினராக இருக்கையில் யுத்த முனையில் முன்னணிக்கு அனுப்பக்கூடாது என்பது சர்வதேசச் சட்டம். ஆனால், சிறீலங்கா இராணுவம் பூநகரிப் பகுதியில் இழந்த ஆயிரம் இராணுவத்தினரில் 292 பேர் பயிற்சி நிலை இராணுவத்தினர் என்பது வெளியாகியுள்ளது.

இதனால், ஆத்திரமடைந்த இவர்களின் பெற்றோர்களும், உறவினர்களும் தங்கள் பிள்ளைகளை சிறீலங்கா இராணுவம் வேண்டுமென்றே சர்வதேச இராணுவச் சட்ட நியதிகளுக்கு முரணான முறையில் கொலை செய்துள்ளது எனக் குற்றம் சாட்டியுள்ளனர்.

**புலிகளின் முன்மாதிரிக்குப் பாராட்டு**

இதற்கிடையில், யுத்த முனையில் காயப்பட்டவர்களை சிகிச்சைக்கு என எடுத்துச் செல்லும் பணியில் ஈடுபட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் படுகாயமடைந்திருந்த ஐந்து சிங்கள இராணுவத்தினரையும் யாழ் போதனா வைத்தியசாலையில் மனிதாபிமான அடிப்படையில் சேர்த்துள்ளனர். சர்வதேச யுத்தச் சட்டங்களையும் மனிதாயத்தையும் மதிக்கும் புலிகளின் இச்செயல் பல மனிதாய, மனித உரிமை அமைப்புக்களால் பாராட்டுப் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. ■

# மூன்று இராட்சத உலங்குவானூர்திகளை வாங்க சிறீலங்கா முடிவு

■ கிழக்கு ஐரோப்பிய நாடுகளிடம் மலிவு விலையில் ஆயுதங்கள்

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து பல நவீன ஆயுத தளபாடங்களை மலிவு விலையில் கொள்வனவு செய்ய சிறீலங்கா அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இவ்வாயுதக் கொள்வனவில், நவீன ரக இராட்சத உலங்குவானூர்திகளிலிருந்து அதிவேக பீரங்கிப் படகுகள் வரை பெறப்படும் எனவும் தெரியவருகிறது. இதன் முதல் கட்டமாக எம்.ஐ.-17 IV ரக இராணுவப் போக்குவரத்து உலங்குவானூர்திகள் மூன்று உடனடியாகப் பெறப்பட உள்ளதாகவும் அறியமுடிகிறது.

இது குறித்து, கொழும்பில் சிறீலங்காப் பாதுகாப்புப் படை உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்; கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தயாரிக்கப்பட்ட நவீன உலங்குவானூர்திகளையும்இராணுவ உபகரணங்களையும் கொள்வனவு செய்ய அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டின் இறுதியில் புதிய மூன்று எம்.ஐ.17 IV ரக இராணுவ போக்குவரத்து உலங்குவானூர்திகள் கொள்வனவு செய்யப்படும் என்றும் எதிர்காலத்தில் மேலும் கிழக்கு ஐரோப்பிய இராணுவ தளபாடங்கள் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

புதிதாக கொள்வனவு செய்யப்படவுள்ள பாரிய இராணுவப் போக்குவரத்து இரட்டை எஞ்சின் உலங்குவானூர்திகள், தற்பொழுது பல நாட்டு விமானப் படைகள் பயன்படுத்தும் பெரிய போக்குவரத்து இயந்திரம் எனக் கூறப்படுகிறது. புதிதாக வரும் மூன்று எம்.ஐ.17 IV உலங்குவானூர்திகளுடன் விமானப்படை பயன்படுத்தும் இந்த ரக உலங்குவானூர்திகள் ஆறாக அதிகரிக்கும்.

ரஸ்யா மற்றும் முன்னாள் சோவியத் குடியரசுகள் உட்பட பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கைத்துப்பாக்கியிலிருந்து கடற்படைப் படகுகள் வரை குறைந்த விலையில், ஆயுதங்களை விற்க முன்வந்துள்ளன. இது சிறீலங்கா படைகளின் ஆயுத தேவையைப் பூர்த்தி செய்யும் என இராணுவ வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. ■

# ஆட்சியாளரைக் காக்க படையினர் உயிரிழப்பு

■ பிரேமச்சந்திர ரணவீர குற்றச்சாட்டு

"அதிகாரத்தில் தொடர்ந்து இருக்க விரும்பும் ஆட்சியாளர்களுக்காகவே, இராணுவத்தினர் தமது உயிர்களை இழக்கின்றனர். நாட்டுக்காக அல்ல" இவ்வாறு மேல் மாகாண சபையின் உறுப்பினர் பிரேமச்சந்திர ரணவீர தெரிவித்துள்ளார்.

'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின் போது, உயிரிழந்த சிங்களப் படைப் பிரிவைச் சேர்ந்த ரி.ஏ. மானெல்ல புஸ்பகுமார என்பவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; "அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதற்காகவே ஆட்சியாளர்கள் வடக்கு கிழக்கு யுத்தத்தை தொடர்ந்து நடத்துகின்றனர். யுத்தத்தில் இறக்கும் இராணுவத்தினரில் பெரும்பாலானவர்கள் கிராமப் புறங்களைச் சேர்ந்த வறிய இளைஞர்களே" என்றார்.

இதேவேளை போர்முனையில் உயிரிழக்கும் படையினர் ஆட்சியாளர்களின் அதிகாரத்தைக் காப்பதற்காகவே, உயிரிழப்பதாக ஒரு கருத்து வேகமாகப் பரவி வருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது. கிளாலியைப் படையினர் கைப்பற்றியதாக அறிவித்திருந்த போதிலும், கிளாலிப் படகுச் சேவை தொடர்ந்து நடைபெறுவதாக வெளியான செய்தியை அடுத்து, சிங்கள மக்கள் மத்தியில் படைகள் மீதும் ஜனாதிபதி மீதும் வைத்திருந்த நம்பிக்கை சிதறடிக்கப்பட்டு விட்டதாகவும் அவர் கூறினார். ■

# தமிழர்களுக்கு தனித்துவமான வைத்திய மரபு சித்த மருத்துவமாகும்

■ துணைவேந்தர் அ. துரைராஜா

"இன்றைய போர்க் காலச் சூழ்நிலையில் மேல்நாட்டு முறை வைத்தியர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள். சித்த வைத்தியர்களே ஊரில் மக்களுக்குக் கூடுதலான சேவையாற்றி வருகின்றார்கள். மூலிகைத் தோட்டம், ஆராய்ச்சி, உற்பத்தி என்பவற்றிலும் சித்த வைத்தியம் வளர வேண்டும். எவ்விதமான ஆராய்ச்சிகளையும் இங்குள்ள ஆராய்ச்சியாளர்கள் திறம்படச் செய்வார்கள் அதற்கு ஆண்டவன் கட்டாயம் அருள் புரிவார்" என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தெரிவித்தார்.

அருள்மிகு நாச்சிமார் ஆலய வழிபாட்டுடன் சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் இவ்வாறு அவர் தெரிவித்தார். யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார். வைத்தியப் பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பேராசிரியர் துரைராஜா அவர்கள் தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழினத்துக்குத் தனித்துவமான மொழி, கலை இருப்பது போல வைத்தியமும் தனித்துவமாக ஒன்றுண்டு. அது சித்த வைத்தியமாகும். தமிழ் வைத்தியம் தான் சித்த வைத்தியம். தமிழ் மொழியில் எழுதப்பட்ட கலையாகும். அந்நியராட்சியில் எமது வைத்தியம் அழிக்கப்பட்டது. நாம் எமது வைத்தியத்தை முன்னுக்குக் கொண்டு வந்து உலகறியச் செய்ய வேண்டும் என்றார்.

வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியன் பேசுகையில், மேல் நாட்டு வைத்தியர்கள் சித்த மருத்துவம் வளர்ந்து மீண்டும் உன்னத நிலைக்கு வரவேண்டும் என்றே விரும்புகின்றார்கள். சில சித்த வைத்தியர்கள் அதை அழியும் பாதையில் இட்டுச் செல்கிறார்கள். எங்களுக்குக் கைகொடுத்து உதவக் கூடிய சித்த வைத்திய முறையை வளர்த்து வைப்பது, எமது எல்லோருடைய கடமையாகும். மனித குல மேம்பாட்டுக்கு இச் சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு உதவ வேண்டும். அதற்கு எல்லோரும் உதவ வேண்டும் என்றார். ■

# தமிழினத்திற்குள்ள ஒரே வழி தனி அரசுதான் !

சில மாதங்களுக்கு முன் திரு. டி. பி. - விஜயதுங்கா ஜனாதிபதியாகப் பதவியேற்ற உடன், விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேசி தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதாகச் சூளுரைத்திருந்தார். அத்துடன், தலைவர் பிரபாகரனுடன் பேசுவதற்கு உதவுபவர்களை வரவேற்பதாகவும் அறிக்கை விட்டார்.

ஆனால், இப்போது, "இனப்பிரச்சினையென்ற ஒன்று இங்கில்லை. இங்கிருப்பது பயங்கரவாதப் பிரச்சினையே" என்று உத்தியோகபூர்வமாக அறிக்கை விட்டதுடன் அதைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார்.

ஒப்பந்தங்கள், மகாநாடுகள், தீர்வுத் திட்டங்கள், யுத்த நிறுத்தங்கள் என்று நாற்பது வருட கால வரலாற்றைக் கொண்ட தமிழரின் தேசிய இனப்பிரச்சினை, திடீரென 'பயங்கரவாதப் பிரச்சனை'யாகியது எப்படி?

மண்கிண்டிமலை முகாம் தகர்ப்புடன் புலிகள் இயக்கம் இராணுவ மேல்நிலையை அடைந்திருந்தபோது, நோபல் பரிசு பெற்ற நான்கு மேதைகளின் சமாதானத் திட்டமொன்று சிங்கள அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. ஐ. நா. மத்தியஸ்தத்துடன் தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்க்க புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடாத்தி, சமஸ்டி அமைப்பிலான ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டுமென அந்த மேதைகள் குழு சிறீலங்கா அரசுக்கு சிபார்சு செய்திருந்தது.

இராணுவ மேல்நிலையில் புலிகள் இயக்கம் இருக்கும்போது அதனுடன் தீர்வு தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தினால், தமிழருக்குப் பல அரசியல் உரிமைகளை வழங்க ஒப்புக் கொள்ள வேண்டிவந்துவிடும் என்ற அச்சம் ஒருபுறமும்; மறுபுறத்தில், ஐ. நா. வின் மத்தியஸ்தத்தில் நடைபெறும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் தமிழருக்குச் சார்பாக அமைந்துவிடுமோ என்ற பயத்தின் காரணமாகவும், "இனப்பிரச்சினை என்ற ஒன்று இங்கில்லை" என்று கூறுவதன் மூலம் புலிகள் உடனான பேச்சு வார்த்தையையும் ஐ. நா. வின் தலையீட்டையும் தவிர்த்து விடலாம் என டி. பி. விஜயதுங்காவின் பேரினவாத மூளை சிந்தித்திருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையிலேயே நோபல் பரிசு பெற்ற மேதைகளின் சமாதான யோசனைகளுக்குப் பதிலளிக்கும் போது, "இனப்பிரச்சினை என்ற ஒன்று இங்கில்லை; இங்கிருப்பது பயங்கரவாதப் பிரச்சினை தான். அதைச் சிறீலங்கா அரசே கையாண்டு கொள்ளும்; அதற்கு ஐ. நா. வின் தலையீடு தேவையில்லை" என்று சிறுபிள்ளைத் தனமாக திரு. விஜயதுங்கா பிரகடனப்படுத்தியிருந்தார்.

விஜயதுங்காவின் இந்த அறிவிப்பு, தமிழீழ மக்களைப் பொறுத்தளவில் அதிர்ச்சி தரும் ஒரு விடயமோ அல்லது கவலை தரும் செய்தியோ அல்ல. ஒரு நாட்டின் ஜனாதிபதி என்ற அதியுயர் பதவியில் -பொறுப்பில் இருந்தபடி சர்வதேச மயப்பட்டுவிட்ட தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை -உலகிலேயே அதிக வளர்ச்சி கண்டுவிட்ட தேசிய விடுதலைப் போராட்டங்களில் முதன்மை நிலையில் உள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்தை -ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என்று கூறியதன் மூலம், டி. பி. விஜயதுங்கா தனது 'தலைமைத்துவப் பண்பையும்', 'அரசியல் விவேகத்தையும்' முழு உலகிற்கும் நிரூபித்துள்ளார்.

ஆனாலும், விஜயதுங்காவின் இந்த அரசியல் நிலைப்பாட்டுக்கு ஒரு சுயநல நோக்கமும் உண்டு. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக வந்துவிட வேண்டும் என்பதில், விஜயதுங்கா தீவிர கவனம் செலுத்துகின்றார்.

சிங்கள மக்களை ஒன்று திரட்டி அவர்களைத் தன் பக்கம் ஈர்க்க விஜயதுங்காவிடம் எந்த ஒரு திறமையும் இல்லை. அல்லது ஒரு சிறந்த அரசியல் -பொருளாதாரத் திட்டமும் இல்லை. அல்லது அவ்வாறான திட்டங்களுக்கு [illegible] தீட்டி நடைமுறைப்படுத்தக்கூடிய பொருளாதாரச் சக்தியும் விஜயதுங்கா அரசிடம் இல்லை.

இந்நிலையில், அரசியல் சித்து விளையாடி, சிங்கள மக்களைக் கவர வேண்டிய அவசியம் திரு. விஜயதுங்காவுக்கு உண்டு.

அதற்கு ஒரே ஒரு வழி, தமிழருக்கு எதிரான பேரின வெறியைக் கிளறி, அதற்குப் பகிரங்கமாகவே தலைமை கொடுத்துத் தன்னை ஒரு சிங்கள இனத்தின் காவலனாகக் காட்டுவதுதான்.

விஜயதுங்கா இந்த வழியையே தேர்ந்தெடுத்து விட்டார்.

மண்கிண்டி மலை, கிளாலி, பருத்தித்துறை, புலோப்பளை, பூநகரி என்று புலிகள் இயக்கம் அடுத்தடுத்து பெற்றுவரும் இராணுவ வெற்றிகளால், சிங்களப் பேரினவாதம் கடும் சீற்றம் அடைந்துள்ளது. இந்தச் சீற்றத்தை சிங்கள தேசத்தின் பத்திரிகைகளும் மற்றும் தொடர்புச் சாதனங்களும் புத்திஜீவிகளும் மேலும் வளர்த்து, சிங்கள தேசத்தில் ஒரு பேரினவாதப் புயலைக் கிளப்பித் தமிழினத்தைப் பூண்டோடு அழிக்க முயல்கின்றார்கள்.

இப்பேரினவாத வெறிக்கு தலைமை கொடுத்து, சிங்கள மக்களின் வாக்குகளைத் திரட்டி விட விஜயதுங்கா காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார். தனது அரசின் வேலைத் திட்டங்கள் அல்லது கொள்கை விடயங்கள் அல்லது இனப்பிரச்சினைக்கான அணுகுமுறைகள் எதுவாக இருந்தாலும் சரி தனது சொந்தக் கருத்து தீர்க்க தரிசனமான பார்வை என்று இல்லாமல், அரசியல் முதிர்ச்சி அற்று -பேரினவாதக் குரல்களுக்கு தலையாட்டிப் பொம்மையாக இருந்து, எண்ணிக்கையில் அதிகமானோரின் கருத்தைப் பிரதிநிதித்துவப் [illegible] தன்னைப் பலப்படுத்தும் சந்தர்ப்பவாதத்தையே திரு. விஜயதுங்கா [illegible]டுக்கின்றார்.

மண்கிண்டி மலை முகாம் வீழ்ச்சிக்காக அரசைக் குற்றஞ்சாட்டி அரசியல் லாபம் தேடும் நோக்கில், "பாதுகாப்பு அமைச்சு என்று ஒரு தனி அமைச்சு இல்லாதது தான் இராணுவத் தோல்விகளுக்குக் காரணம்" என்று சிறிமாவோ அம்மையார் அறிக்கை விட்டார். இதை ஒரு பேருண்மை என, பேரினவாதப் பத்திரிகைகளும், புத்திஜீவிகளும் சேர்ந்து 'ஆமா' போட, ஆட்களை மாற்றாமல் அமைப்பு மாற்றம் ஒன்றைச் செய்து விஜயதுங்கா பேரினவாதிகளைத் திருப்திப் படுத்தியுள்ளார்.

இதேபோன்றுதான், ஐ. நா. வின் மத்தியஸ்தம் வேண்டும் என்ற நோபல் பரிசு பெற்ற மேதைகளின் சமாதானத் திட்டத்திற்கு நாடளாவிய ரீதியில் சிங்களப் பேரினவாதிகள் எதிர்ப்புத் தெரிவிக்க, அந்த எதிர்ப்புணர்வுக்கு தலைமை கொடுத்து சிங்கள மக்களை தன் பக்கம் ஈர்க்க விஜயதுங்கா முயன்றுள்ளார்.

அதனால்தான் உலகத்தின் பார்வையில் இது ஒரு கேலிக்கூத்தாக இருந்தாலும், அல்லது அரசியல் முதிர்ச்சி அற்ற குறுகிய வாதக் கண்ணோட்டமாக இருந்தாலும், அவற்றை எல்லாம் பொருட்படுத்தாது விஜயதுங்கா அவர்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வெற்றியிலேயே குறியாக இருக்கின்றார்.

இனப்பிரச்சினை தொடர்பான விஜயதுங்கா அரசின் இந்த அரசியல் நிலைப்பாட்டில் இருந்து தமிழினம் இறுதிப் பாடத்தைப் படித்துக் கொள்ள வேண்டும்.

அதாவது பேச்சுக்கள் மூலமோ, அல்லது சமரசப் பாதை மூலமோ தமிழினத்துக்கு உரிமைகள் கிடைக்கும் என்ற கனவை, இத்துடன் நிரந்தரமாகவே கலைத்துவிட வேண்டும்.

தமிழ் மக்கள் உரிமை பெற்று சுதந்திரமாக, பாதுகாப்பாக, கௌரவமாக வாழ வழி ஒன்றுதான் உண்டு.

அது ஆயுதம் ஏந்துவதுதான்.

வயது வேறுபாடின்றி ஆயுதப் பயிற்சி பெற்று, அழிக்க வரும் சிங்களப் படையை அடித்துவிரட்டி, எமது தாயக பூமியை மீட்டு தனியரசு ஒன்றை நிறுவுவதுதான் தமிழினத்துக்குள்ள ஒரே வழி.

இல்லையேல் தமிழினம் அழிந்துவிடும். ■

நன்றி: 'விடுதலைப் புலிகள்'

# தமிழர்களுக்கு சிறீலங்காவில் பாதுகாப்பு இல்லை

## – சாண்ட் லாண்ட் (ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்)

தமிழர்களுக்கு சிறீலங்காவில் பாதுகாப்பு இல்லாத நிலை காணப்படுவதால், ஜேர்மன் அரசாங்கம் தமிழ் அகதிகளை திருப்பியனுப்ப மாட்டாதென, ஜேர்மனியின் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. - டெட்லெவ் சாண்ட்லாண்ட் (Mr. Detlev Sandland) தெரிவித்துள்ளார். ஜேர்மனியில் முப்பதாயிரம் தமிழ் அகதிகள் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாகவும் இவர்களில் பன்னிரெண்டாயிரம் பேருக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனையோர்களின் விண்ணப்பங்களை பொன் அரசாங்கம் பரிசீலித்து வருவதாகவும், ஜேர்மனியின் வழமைப்படி ஏனைய விண்ணப்பதாரிகள் அரசியல் தஞ்சம் பெற பல வருடங்கள் எடுக்கும் எனவும் கூறினார்.

### புலிகளைப் பயங்கரவாதிகள் எனக் கூற மறுப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளெனக் கூற முடியாது எனக் கூறிய சாண்ட் லாண்ட், ஐரோப்பிய பாராளுமன்றம் அயர்லாந்து விடுதலை இராணுவத்தைப் பொறுத்தமட்டில் என்ன கொள்கையைக் கொண்டுள்ளதோ, அதே கொள்கையே விடுதலைப் புலிகளைப் பொறுத்தமட்டிலும் கொண்டுள்ளது எனத் தெரிவித்தார்.

### இந்தியாவிலிருந்து சிறீலங்கா திரும்பிய அகதிகள் கைது

தமிழ்நாட்டிலிருந்து, சிறீலங்காவுக்குத் திரும்பிய இரு அகதி மாணவர்கள், தாம் தமிழகத்தில் படித்தமைக்கான போதிய சான்றுகளைக் காட்டிய போதும், சிறீலங்கா குடிவரவு அதிகாரிகள் அவர்களைக் கைது செய்து சிறீலங்காப் பாதுகாப்புப் படையிடம் விசாரணைக்காக ஒப்படைத்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

## மண்மீட்புப் போருக்கென

# மனமுவந்து மக்களை இணைக்கும் பெற்றோர்

மண்மீட்புப் போரில் தமது பிள்ளைகளை பெற்றோரே மனமுவந்து இணைத்து வரும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

நாவாந்துறை ஒஸ்மானியா வீதியைச் சேர்ந்த ராஜேந்திரன் அவரது சகோதரி விஜயா ஆகிய இருவரும், தமது பெற்றோரின் சம்மதத்துடன் போராட்டத்தில் இணைந்து கொண்டனர். இவர்களின் குடும்பத்தில் மூவர் ஏற்கனவே போராளிகளாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் மாணாவளை மட்டுவிலைச் சேர்ந்த மகேஸ்வரி செல்லையா என்னும் தாயார், தனது மகன் சுரேசை போராட்டத்தில் இணைத்துள்ளார். மேலும் புங்குடுதீவைச் சேர்ந்த அலறிண்டா என்பவரை, அவரது தந்தையார் அல்பிரட் கடற்புலிகள் முகாமில் வைத்து போராட்டத்தில் இணைத்துள்ளார். ■

# யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முதலிரண்டு வழக்குகள் தீர்ப்பு

யாழ் கோவில் வீதியில், - யாழ்ப்பாணம் தமிழீழ மாவட்ட நீதிமன்றம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நீதிமன்றத் திறப்பு வைபவத்தில் "பாண்ட்" இசை முழங்க மங்கள விளக்கை தமிழீழ போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. செந்தாளன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அவர்கள் ஏற்றிவைத்தார். அதனையடுத்து யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பருதி நாடாவை வெட்டி திறந்துவைத்தார்.

இந் நீதிமன்றம் திறந்து வைக்கப்பட்டவுடன், இந்த நீதிமன்றத்தில், இரண்டு வழக்குகள் உடன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ்விரண்டு வழக்குகளின் குற்றவாளிகளும் ஏகமனதாக குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, திரு. [illegible]ரன், திரு. [illegible], திரு. [illegible] முதன் ஆகிய மூன்று நீதிபதிகளாலும் தீர்ப்புகள் வழங்கப்பட்டன. ■

# உலக உணவு விவசாய நிறுவனத்தில் கொலைகார "சிறீலங்கா"

கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக, பொருளாதாரத் தடை மூலம், பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழீழ மக்களது உணவு விநியோகத்தோடு, விளை நிலங்களின் மேல் குண்டு வீச்சுக்களைச் செய்து அபிவிருத்தியினையும் சீர்குலைத்து இனப்படுகொலைக்கு முயற்சிக்கும் கொலைகார சிறீலங்கா அரசாங்கம், உலக உணவு விவசாய நிறுவனத்தின் சபைக்குத் தெரிவாகியுள்ளது. இத்தெரிவில் சிறீலங்காவிடம், இந்தியா தோல்வி கண்டமை இந்தியாவின் தலைமைகளின் தீர்க்கதரிசனம் அற்ற போக்கைக் காட்டுகிறது. அதேவேளை, தரப்படுத்தல், கல்வித்தடைகள், மின்சாரமின்மை, எரிபொருள் இன்மை என்பவற்றால் தமிழீழ மாணவர்களின் கல்வியை அழிக்கும் சிறீலங்கா அரசாங்கம் யுனெஸ்கோ கல்வி நிறுவனத்தின் சபைக்குத் தெரிவாகியுள்ளது. இவற்றைப் பார்க்கும் போது, 'சாத்தானே வேதம் ஓதுகிறது' என்ற பழமொழிதான் ஞாபகத்திற்கு வருகிறது. ■

# மட்டக்களப்பில் இராணுவ ஆட்சி; காட்டுக் கந்தோரில் ஒரு கொலைக் கூடம்

மட்டக்களப்பு நகரையும், வாழைச்சேனை முதல் கல்லாறு வரையான கரையோரப் பகுதியை (எழுவான் கரை)யும் ஆக்கிரமித்துள்ள சிறீலங்காப் படைகள் அப்பகுதியல் 'சிவில்' நிர்வாகம் நடைபெற்று வருவதாகக் கூறி வருகின்றன. அரசாங்கமும் பத்திரிகைகளும் அங்கு 'அமைதி' நிலவுவதாகவும், 'இயல்பு' நிலைக்குத் திரும்பி விட்டதாகவும் பிரசாரம் செய்து வருகின்றன.

மட்டக்களப்பு நகரிலுள்ள காட்டிலாகா கந்தோர்தான் 'சிவில்' நிர்வாகத்தின் மையம். விசாரணைக்கென அங்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள் எவரும் திரும்பி வருவதில்லை. 'காட்டுக் கந்தோர்' என மக்களால் அழைக்கப்படும் இவ் அலுவலகத்தில் உண்மையில் புலனாய்வுப் பரிவினரே உள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் மக்கள் விசாரணைக்காக இங்கு கொண்டு வரப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும் சாதாரண நிகழ்வு. புலிகள் என, ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்பட்டு இக்காட்டுக் கந்தோருக்கு கொண்டுவரப்பட்ட எவரும் இதுவரை விடுதலையானதில்லை. யுத்தத்தின் போது கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்க படிவங்கள் வழங்கும் போது கொல்லப்பட்டவர்கள் புலிகள் உறுப்பினர்கள் இல்லை என உறுதிப்படுத்த வேண்டும். நிவாரணப் படிவத்துடன் போகும் விதவைப் பெண்களில் அநேகர், பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதாக அங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

ஆனால், இவ்வாறு காட்டுக் கந்தோருக்குப் போய் நிவாரணம் பெற்ற விதவைப் பெண்களின் எண்ணிக்கை மிகச் சொற்பம். காட்டுக் கந்தோர் எனப்படும் இவ்விடம் இன்று பயங்கரப் பலிக்களமாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு நகரில் பஸ் நிலையத்திற்கு முன் இயங்கும் பொலிஸ் நிலையத்தில் அனைத்துப் பயணிகளும் அவர்களுடைய பொதிகளும் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன. அங்கிருந்து புறப்படுகின்ற அனைத்துப் பாதைகளிலும் முன்னைய இந்தியப் படைகளின் சென்றிகள் புதுப்பிக்கப்பட்டு, ஒவ்வொருவரும் அங்கு மீண்டும் சோதிக்கப் படுகின்றனர். சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் அவற்றை உருட்டிக் கொண்டு சென்று சோதனைக்காக நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டும்.

நகரப் பகுதியை விட கிராமப் பகுதிகளுக்குச் சென்றால் நிலைமை அங்கு படுமோசமாக உள்ளது. கிராமங்களின் நிர்வாகம் முழுவதும் அங்குள்ள காவல் நிலையங்கள் மூலமே செய்யப் படுகின்றன. கிராமத்திலுள்ள மக்கள் கிராமத்தை விட்டு வெளியே செல்லும்போதும், உள்ளே செல்லும்போதும் அவற்றினூடாகவே செல்ல வேண்டும். கடைக்காரர்கள் தமக்கு வேண்டிய பொருட்களைக் கொள்வனவு செய்ய நகருக்குச் செல்ல முன்னர் தேவையான பொருட்களின் பட்டியலை காவல் நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும். தேவையான பொருட்களின் அளவை காவல் நிலையத்தினரே தீர்மானிக்கின்றனர். நகரிலிருந்து திரும்பும் போது பட்டியலும் பொருளும் சரி பார்க்கப்பட்டே அனுமதிக்கப்படுகிறது. தமக்குத் தேவையானவற்றை படையினர் எடுத்துக் கொள்வர்.

ஏறத்தாழ கிராமத்துக்கு ஒரு முகாம் என்ற அளவில் அமையவில்லை. கிராமங்கள் முழுவதும் சிறீலங்கா இராணுவத்தினரும், விசேட அதிரடிப் படையினரும், பொலிசாரும் குவிக்கப்பட்டு உள்ளனர். எந்தக் கிராமம் எப்பொழுது சுற்றி வளைக்கப்படும் என்று யாருக்கும் தெரியாது. முதல் நாள் நள்ளிரவே கிராமத்தைச் சுற்றிவளைத்து பதுங்கியிருக்கும் படையினர் காலையில் வயது, பால் வேறுபாடின்றி அனைவரையும் திறந்த வெளி ஒன்றுக்கு அழைத்துச் சென்று சோதனை இடுகின்றனர். இதன் போது, கைது செய்யப்படுகின்றவர்கள் கடும் சித்திரவதைக்கு உள்ளாகின்றனர். வாழைச்சேனை முதல் கல்லாறு வரையான கரையோரப் பகுதி -எழுவான்கரை கிராமங்களில் நிகழும் அன்றாட சம்பவம் இது.

சுற்றிவளைப்பின் போது கைது செய்வதற்கு முகம் மூடிகள் பயன்படுத்தப்படுவர். அல்லது தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்கள். படையினருடன் கூட வருவர். ஒவ்வொரு சுற்றி வளைப்பின் போதும் அம்முக மூடிகள் ஒரு சிலரையாவது காட்டிக் கொடுக்க வேண்டும். அல்லது படையினரால் தாக்கப்படுவர். படையினரின் சித்திரவதைக்குப் பயந்து தனது தனிப்பட்ட எதிரிகளையோ அல்லது தனக்குத் தெரிந்தவர்களையோ அவர்கள் காட்டிக் கொடுத்தே தீருவர்.

> மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்போதைய நிலை குறித்து கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ்ப்பத்திரிகை ஒன்றில் வெளியான கட்டுரையின் [illegible] வாகும்.

இச் சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்ட பலரது விபரங்கள் இன்றுவரை தெரியாது. இவர்களின் சித்திரவதைகள், அடிகள் சொல்லுந்தரமன்று. சுற்றிவளைப்பின்போது அடையாளம் காணக் கொண்டுவரப்படும் பெண்களில் சிலரை படையினர் வேண்டுமென்றே முகமூடிகளைக் கொண்டு தலையாட்டுவித்து கைது செய்து கொண்டு செல்லுகின்றனர்.

கொம்முந்துறை வாசி ஒருவர் சொன்னார்:

"நான் கைது செய்யப்பட்டபோது என்னுடன் எனது ஊரைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரையும் கைது செய்தனர். முகாமின் பக்கத்து அறையில் இருந்து அலறல் வராத இரவுகளே இல்லை. மூன்று வாரத்தின் பின் விடுதலையானபோது அவள் என்னிடம் சொன்னாள், இதற்குப் பின்பும் வாழத்தான் வேண்டுமா? என்று".

படையினரால் கைது செய்யப்பட்ட தனது கணவனை விடுவிக்கத் தானும் சேர்ந்து முகாமுக்குள் நுழைந்த ஒரு பெண்ணிற்கு நிகழ்ந்ததை ஒரு கிராம வாசி விபரித்தார்: "ஒருமாத காலம் அளவில் முகாமில் தடுத்து வைக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்ட அப்பெண் சித்தப்பிரமை பிடித்தவராக காணப்படுகிறார். இவருக்கு என்ன நடந்ததென்று யாருக்கும் தெரியாது. அவரது கணவன் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. அவருக்கு என்ன நடந்தது என்பதும் இதுவரை தெரியாது.

படுவான்கரைப் பகுதி மக்களுக்கு எதுவித உதவியும் வழங்கப்படுவதில்லை. அவர்களுடைய வயல்கள் விதைக்கப்படவில்லை. வாவியிலோ, கடலிலோ மீன்பிடிக்கத் தடை. எதுவித வருமானமும் அற்ற நிலையில் உணவுக்கே திண்டாட வேண்டியுள்ளது.

எழுவான்கரை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர், படுவான்கரையில் வயல் விதைத்திருந்தார். ஆனால் அறுவடை செய்ய படையினர் அவரிடம் காணி உறுதியைக் கேட்டனர். அவரிடம் உறுதி இருக்கவில்லை. எனவே படையினர் அவரது வயலுக்குத் தீ வைத்துவிட்டனர். இவ்வாறு படையினர் தீ வைத்த வயல்கள் ஏராளம்".

கிழக்கு மாகாணத்தில் இருபதுக்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளன. இதுதவிர சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் புள்ளி விபரம் திரட்டும் வேலையில் ஈடுபட்டுள்ளது. இவையனைத்தும் பிரதானமாக இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட எழுவான்கரையிலேயே இயங்குகின்றன. படுவான்கரையில் இயங்க இவற்றுக்கு இராணுவம் அனுமதிக்காது. படையினரால் நடாத்தப்படும் கைதுகள், சித்திரவதைகள் குறித்தோ பாதிக்கப்பட்ட மக்கள் சார்பிலோ இவர்களில் எவரும் குரல் கொடுப்பதில்லை என மக்கள் கூறுகின்றனர்.

இராணுவ ஆக்கிரமிப்பு பகுதியில் சிவில் நிர்வாகம் உட்பட அனைத்தும் பிரிகேடியர் ரொகான் குணவர்த்தனவின் கையில் உள்ளது. இதனால் தங்களது நிலைமையை எடுத்துக் கூற மக்களுக்கு எதுவித வழியும் இல்லை.

மட்டக்களப்புக் கச்சேரி, மாநகர சபை என்பனவற்றை இராணுவத்தினர் பொறுப்பேற்று அங்கு பெரிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. நீதிமன்றக் கட்டடத்திலுள்ள இராணுவத்தினரை அகற்றி நீதிமன்றத்தை இயக்குவதே அதன் நோக்கம் எனச் சொல்லப்படுகிறது.

உண்மையில் கோட்டையையும், மாநகர சபையையும் இணைத்து பெரிய முகாமை அமைப்பதே படையினரின் நோக்கம். இதனைச் சுற்றி 'பாரிய பாதுகாப்பு வலயம்' ஒன்றும் அமைக்கப்பட இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது மட்டக்களப்பு நகரின் கணிசமான பகுதியை உள்ளடக்குவதாக அமையும் என்றும் சொல்லப்படுகிறது. இதன் மூலம் மட்டக்களப்பு வாவியின் மேற்குப் புறம் முகாமின் பாதுகாப்புக்கு என்ற போர்வையில் மீன் பிடிக்க தடை செய்யப்படும். இதனால் இதனை நம்பியுள்ள ஆயிரக்கணக்கான மீனவர் தொழில் இழப்பர் எனவும் அஞ்சப்படுகிறது ■

நன்றி: ஈழநாதம்

# அதிகளவு மாணவர்களை பல்கலைக்கு அனுமதிக்குக

> 1992/93 பல்கலைக் கழக அனுமதிக்கு, யாழ். மாவட்டத்திற்கு அறிவிக்கப்பட்ட வெட்டுப் புள்ளிகளால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சிறீலங்கா ஜனாதிபதி விஜயதுங்கவிற்கு அனுப்பிய மகஜர் இது.

அண்மையில் யாழ். மாவட்டத்திற்கு அறிவிக்கப்பட்ட பல்கலைக் கழக வெட்டுப் புள்ளிகளால் நாம் மிகவும் ஏமாற்றமும், விரக்தியும் அடைந்துள்ளோம். எம்மில் சிலர் மருத்துவம் பயில விரும்பினார்கள். ஆனால் அவர்களுக்கு வேறு கற்கை நெறிக்குத்தான் அனுமதி கிடைக்கும். அதேபோன்று பொறியியல் நெறியைப் பயில விரும்பிய எம்மில் சிலர் வேறு கற்கை நெறிக்குத்தான் அனுமதி பெறுவர். மற்றும் உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் அல்லது கலை கற்கை நெறி அல்லது வர்த்தகம், முகாமைத்துவம், சட்டம் பயில விரும்பிய மாணவர்கட்கு பல்கலைக் கழகத்திற்குச் செல்லாதவாறு கதவடைக்கப்பட்டு அவர்கள் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளனர்.

எனவே, 1992/93 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழகக் கல்விக்கு அனுமதிக்கப்படும் தமிழ் மாணவர்கள் தொகை வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பது புலனாகின்றது. கடந்த ஐந்து ஆண்டுகளிலே பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் தொகையிலும் பார்க்க 92/93 ஆம் ஆண்டு அனுமதி பெறும் மாணவர்கள் மொத்தத் தொகை மிகவும் குறைவானது. இது மிகவும் அசாதாரணமான ஒரு நிலை என்றே நாம் கருதுகின்றோம்.

இந்த அசாதாரண நிலைக்கு 1991/92 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் நிலவிய சூழலே காரணம் என்பது யாவரும் அறிந்த விடயம். மாணவர்கள் எத்தனையோ கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி இருந்தது. ஒரு புறம் மின்சாரம் இல்லை. மறுபுறம் மண்ணெண்ணெய் விநியோகம் வரையறுக்கப்பட்டிருந்ததுடன் விலையும் அதிகமாகக் காணப்பட்டது. உணவுப் பற்றாக்குறையால் மாணவர்கள் கடினமாகப் படிக்க வேண்டியதற்குத் தேவையான உடல்நிலையைப் பெற்றிருக்க முடியவில்லை. விமானத் தாக்குதலால் அடிக்கடி பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. அத்துடன் இடம்பெயர்ந்த மாணவர்களால் பாடசாலைகளில் மேலதிக மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். போக்குவரத்து வசதிகளின்மையால் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்குப் பல சிரமங்களை எதிர் நோக்கினர். அத்துடன் தமது வீடுகளில் இருந்தும், கிராமங்களிலிருந்தும் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. இவையாவற்றிற்கும் மேலாக எந்நேரம் விமானத் தாக்குதலோ, எறிகணைத் தாக்குதலோ நடத்தப்படலாம் என்ற பீதியினால் மாணவர்கள் மனோ நிலை பெருமளவு பாதிக்கப்பட்டு இருந்தது. எனவே மாணவர்கள் என்ற ரீதியில் எம் வாழ்க்கை துயர் நிறைந்ததாக இருந்தது. இவற்றைத் தவிர தமிழ் மாணவர்களுக்குத் தான் வினாத் தாள்கள் கடினமானதாகவும், வினோதமானதாகவும் இருந்ததாக பெரும்பான்மையான மாணவர்கள் கருதுகின்றனர். வினாத் தாள்களைத் திருத்துவதிலும் வேண்டும் என்றே சில கெடுபிடிகள் இருந்தனவோ என்று மாணவர்கள் கருதுகின்றனர். இக்காரணங்கள் எல்லாவற்றின் இணைப்புத்தான் எமது மாணவர்கள் சோதனையில் திறமையாக செயற்பட முடியவில்லை என நாம் கருதுகின்றோம்.

எமது மாவட்டம் ஒரு யுத்தப் பிரதேசமாக இருப்பதை மனதில் கொண்டு வெட்டுப் புள்ளிகளைக் குறைத்து எமக்கு சில விசேட சலுகைகளை வழங்குமாறு நாம் தயவாக உங்களை வேண்டிக் கொள்கின்றோம். கடந்த ஐந்து ஆண்டுகளிலே பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட சராசரி மாணவர் எண்ணிக்கையை விடவும் இவ்வாண்டில் கூடுதலான தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்பது நிச்சயம்.

1985 ஆம் ஆண்டிலே அறிவிக்கப்பட்ட வெட்டுப் புள்ளிகள் பின்னர் இலங்கை ரீதியாகக் குறைக்கப்பட்டதை நாம் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். ஏனெனில் அவ்வாண்டில் மாணவர்கள் பரீட்சையில் தமது பூரண திறமையைக் காட்டியிருக்க முடியாமையினால் ஆகும். இதனை ஒரு முன் உதாரணமாகக் கொண்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது பகுதிகளுக்கான வெட்டுப் புள்ளியை விசேட சலுகை அடிப்படையில் குறைக்குமாறு உங்களைத் தயவாகக் கேட்கிறோம்.

மருத்துவம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்

தொடர்ச்சி 13ம் பக்கம்.....

# குடாநாட்டைப் பாதுகாத்த புலோப்பளைச் சமர்



சிங்களப் படைவீரனை வீழ்த்தி ஆயுதம் எடுக்கும் புலி வீரன்

**புலிகள் இயக்கம் பெற்றுவரும் போரிடும் ஆற்றலின் ஒரு படிவளர்ச்சியை, இந்தச் சமர், துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளது. இது, மரபுவழிச் சண்டை முறையில் இடம்பெற்றுவிட்ட ஒரு முக்கிய சாதனை.**

**29. 09. 1993**

நான்கு மணி நேரத்தில் நடந்து முடிந்த மாபெரும் சமரைக்கொண்ட மறக்க முடியாத நாள்.

மரபுவழிச் சண்டை முறையில், எமது போராட்ட வரலாற்றில், முக்கிய இடம் பெற்றுவிட்ட ஒரு சாதனை நாள்.

வெட்டவெளியூடாக நன்கு திட்டமிட்டு நகர்ந்த எதிரியின் கவச வாகனப் படையை, புலிகளின் மனிதக் கவசம் உடைத்தெறிந்து காவியம் படைத்த நாள்.

யாழ். குடாநாட்டுக்கு ஏற்படவிருந்த பேரழிவைத் தற்காலிகமாகத் தடுத்த இந்த வரலாற்றுச் சமரில், 125 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் -284 பேர் படுகாயமடைந்துள்ளனர் என, சிங்கள அரசே அறிவித்துள்ளது. அத்துடன் சிங்களப் படை இந்தச் சமரில் ரி -55 ரக டாங்கிகள் இரண்டையும் 'பவல்' கவச வாகனம் ஒன்றையும் முற்றாக இழந்துவிட்டது. அதேவேளை மேலும் இரண்டு கவச வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

வெட்டவெளியில் நடந்து முடிந்த இந்த புலோப்பளைச் சமர், புலிகள் இயக்கம் பெற்றுவரும் போரிடும் ஆற்றலின் ஒரு படிவளர்ச்சியைத் துல்லியமாக வெளிப்படுத்தியிருப்பதுடன், இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஒரு திருப்புமுனையையும் கொடுத்துள்ளது.

இந்தச் சமரைச் சிங்களப் படைத்தரப்பில் நின்று வழிநடாத்திய -அதில் காயமடைந்த -கேணல் சரத் பொன்சேகா கூறினார்; "விடுதலைப் புலிகள் எம்மைச் சுற்றிவளைத்து கடுமையாகத் தாக்கினர்".

இந்தச் சாதனைச் சமரில், புலிகளின் சேனைக்கு தலைமை தாங்கி வழி நடாத்திய படைத்துறைத் துணைத் தளபதி பால்ராஜ் விபரிக்கின்றார்...

"இந்தச் சமரில் மூன்று விடயங்கள் எதிரிக்குத் திகைப்பையும் -அச்சத்தையும் கொடுத்திருக்கும். ஒன்று, மிகக் குறைந்த நேரத்தில் சிங்களப் படை சந்தித்த பாரிய ஆள் -ஆயுத இழப்பு. இரண்டு, சிங்களச் சிப்பாய்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிவரும் கவசவாகனப் படை, புலிவீரர்களால் சிதறடிக்கப்பட்டதுடன், அவர்களின் கண்முன்னாலேயே -பட்டப்பகலில் -டாங்கிகளையும் கவச வாகனங்களையும் இழந்தது. மூன்று, சிங்களப் படைக்குச் சாதகமான இந்த வெட்டவெளிச் சமரில் புலிகள் வெளிப்படுத்திய அபாரத் துணிச்சலும் தாக்குதல் தந்திரோபாயங்களும்". இவ்வாறு இந்தச் சாதனைச் சமரைத் தளபதி பால்ராஜ் மதிப்பிடுகின்றார்.

'ஒப்பரேசன் யாழ்தேவி' எனப் பெயரிட்டுவிட்டு -பெரியதொரு எதிர்பார்ப்புடன் 28. 09. 1993 அன்று ஆனையிறவில் இருந்து, ஏறக்குறைய 5000 பேர்கொண்ட சிங்களப் படையணிகள் கிளாலி நோக்கி நகரத் தொடங்கின.

புலிகளின் தந்திரோபாய விலகல் காரணமாக -ஆனையிறவிலிருந்து நீரேரிக் கரையோரமாகப் புலோப்பளை வீதி வரை உள்ள -சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்தைச் சிங்களப் படைகள் சுலபமாகக் கடந்து சென்றன. அன்றிரவு புலோப்பளையில் தரித்து நின்ற படையினர், 29 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு எறிகணைகளைச் சரமாரியாக வீசிக்கொண்டு, கவச வாகனப் படையின் உதவியுடன் அல்லிப்பளை நோக்கி நகரத் தொடங்கினர். சில நூறு மீற்றர்கள் கடந்தபின், அந்த வெட்டவெளிப் பகுதியில், திடீரென நிலத்துள் இருந்து முளைத்தெழுந்த புலிவீரர்கள், ஆச்சரியமூட்டும் வகையில் தாக்குதலைத் தொடுத்தார்கள்.

இந்தத் திடீர்த் தாக்குதலைத் தொடக்கிவைத்த அணிகளுக்குத் தலைமை வகித்த, வன்னி மாவட்ட சிறப்புத் தளபதி தீபன் கூறுகின்றார்...

"ஒரு திடீர்த் தாக்குதலைத் தொடுத்து எதிரிப் படையைச் சிதைக்கும் நோக்குடன், இரவோடிரவாகத் தகுந்த இடத்தைத் தேர்வு செய்ய முயன்றோம். மணற்பாங்கான நில அமைப்புடன் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறுசிறு பற்றைகளையும், புற்கள் அற்ற வரப்புகளையும் தவிர துப்பாக்கிச் சண்டைக்குத் தேவையான அரண்களோ (கவர்) அல்லது உருமறைப்புச் செய்வதற்குரிய பொருட்களோ கிடைக்கவில்லை. நேரமும் விடிந்து கொண்டிருந்தது. எனவே, வரப்போரங்களிலும் பற்றைக் கரைகளிலும் கைகளாலும் தடிகளாலும், உடலை மறைக்கக் கூடிய பள்ளங்கள் தோண்டி, எதிரியின் விமானங்களுக்குப் புலப்படாமலும் நகர்ந்து வரும் படையினரின் கண்களுக்குத் தெரியாமலும் உருமறைப்புச் செய்தோம். விடிந்த பின்பும் எதிரி எமக்கருகில் வரும்வரை நாம் பொறுமையுடன் காத்திருந்தோம்". இவ்வாறு தளபதி தீபன் தனது அனுபவத்தைக் கூறினார்.

இந்தச் சமரில் பங்குகொண்ட ஏனைய போராளிகள் சொல்லுகின்றார்கள்...

புலோப்பளை வீதியிலிருந்து அல்லிப்பளை நோக்கி முன்னேறி வந்த படையினர், அங்கிருந்த வீடுகள் எல்லாவற்றையும் தீமூட்டி எரித்தபடி முன்னேறிக் கொண்டிருந்தனர். எறிகணை வீச்சுகளுக்கு மத்தியில் எதிர்த் தாக்குதலுக்குத் தயாராக நிலத்தில் புதைந்து கிடந்த புலிகளின் அணி ஒன்றுக்கு மிக அருகில், 15 -20 மீற்றர் தூரத்தில் -சிங்களப் படைகள் வந்ததும், புலிகளின் இலகு இயந்திரத் துப்பாக்கி ஒன்று, இந்த வரலாற்றுச் சமரைத் தொடக்கிவைத்தது. இந்த நிலையில், சிங்களப் படையின் 'சலாடின்' ரக கவச வாகனம் ஒன்று, மிக அருகில் வைத்து போராளிகளின் இயந்திரத் துப்பாக்கித் தாக்குதலுக்கு உள்ளான போது, அக்கவச வாகனம் பின்வாங்கிப் பாதுகாப்புத் தேடி ஓட, பின்னாலிருந்த டாங்கி சண்டையின் முன்முனைக்கு வந்தது.

ரி-55 ரக டாங்கி தனது தாக்குதலைத் தொடங்க முன்னர், புலிகளின் ஆர்.பி.ஜி ஒன்று டாங்கியைத் தாக்கியது. இதனால் அதிர்ச்சியடைந்த டாங்கி [illegible] சற்றுப் பின்வாங்கி தன்னை நிலைப்படுத்தி, மீண்டும் தாக்குதலைத் தொடங்க முயன்றது.

ஆனால் இன்னொரு முனையிலிருந்து மீண்டும் புலிகளின் ஆர்.பி.ஜி. ஒன்று டாங்கியைத் தாக்கிய அதேவேளை, தத்தமது நிலைகளிலிருந்து எழுந்த புலிவீரர்கள், கவசவாகனப் படையுடன் நின்ற எதிரிப் படையைப் பாய்ந்து சென்று தாக்கத் தொடங்கினர். ஆச்சரியமூட்டும் விதத்தில் -வேகமாக நடந்த புலிகளின் படை நகர்த்தலைக் கண்ட சிங்களப் படை அதிர்ச்சிக்குள்ளாகியது. இந்த அதிர்ச்சியிலிருந்து சிங்களப் படை மீளமுன்னர் பல முனைகளிலிருந்து எதிரிப் படைக்குள் நுழைந்த புலிவீரர்கள், கவசவாகனங்களுடன் சேர்த்து சிங்களப் படையை வேட்டையாடத் தொடங்கினர். "சமர் முனையில் டாங்கிகள் பின்னோக்கி ஓட்டமெடுத்த காட்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாக இருந்தன" என, ஒரு புலிவீரன் மகிழ்ச்சியுடன் தெரிவித்தான்.

இந்தப் பலமுனைத் தாக்குதல்களில், வன்னி மாவட்டச் சிறப்புத் தளபதி தீபனது அணியுடன், மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி ஜானினது அணி ஒரு முனையூடாகவும், மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி ஜெனாவின் தலைமையிலான அணி இன்னொரு முனையாலும் உள்நுழைந்து, சிங்களப் படையைச் சிதைத்து அவர்களுக்குப் பேரழிவை உண்டுபண்ணினார்கள்.

காலை 8.30 மணியளவில் தொடங்கிய இந்தச் சமர், மதியம் 12.30 மணியளவில் ஓய்வுக்கு வந்தது. அப்போது சிங்களப் படைகள் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை -புலோப்பளை வீதிவரை -பின்னோக்கி அடித்து விரட்டப்பட்டன.

அதன் பின் மேலும் இரண்டு நாட்கள் அதே இடத்தில் தரித்து நின்று காயமடைந்த, இறந்த சிப்பாய்களை அப்புறப்படுத்தி அதற்குப் பதிலாக புதியவர்களைச் சேர்த்துப் படையை புனரமைத்துவிட்டு, கிளாலியை நோக்கி சிங்களப் படை முன்னேறியது. கிளாலியைச் சென்றடைந்ததும் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி மேலும் இரண்டு வாகனங்களை சிங்களப் படை இழந்ததுடன், உயிர்ச் சேதத்தையும் சந்தித்தது. இந்த நிலையில், 04.10.1993 அன்று அதாவது 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை தொடங்கிய 6 ஆம் நாள், தனது இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டு பலத்த ஏமாற்றத்துடனும் -சோகத்துடனும் ஆனையிறவுத் தளத்திற்கே சிங்களப் படைகள் திரும்பிச் சென்று விட்டன.

இந்த இராணுவ நடவடிக்கையின் தோல்வியை ஏற்றுக் கொள்ள விரும்பாத சிங்களப் படைத்துறைத் தலைமை, நகைப்பிற்கிடமான விளக்கங்களையும் -வியாக்கியானங்களையும் ஒன்றுக்கொன்று முரணாகக் கொடுத்தது.

"இடத்தைக் கைப்பற்றுவதல்ல; புலிகளை இயன்றளவு கொல்லுவதே இந்த படை நகர்த்தலின் நோக்கம்" என, ஒரு இராணுவ உயர் அதிகாரி கூறியிருந்தார்.

"வெட்ட வெளியில் சண்டை பிடித்தபடியால்தான் படையினர் தரப்பில் அதிக இழப்பு ஏற்பட்டுள்ளது" என, ஒரு இராணுவ அதிகாரி சமாதானம் சொன்னார்.

ஆனால் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் [illegible], "வெட்ட வெளிக்குப் புலிகளை இழுத்து வருவதுதான் எமது பிரதான குறிக்கோள். அப்போதுதான் புலிகளைக் கொன்று இடங்களைக் கைப்பற்ற முடியும்" என விளக்கமளித்தார்.

இதேவேளை, இப் பின்வாங்கலுக்குப் படைத்துறைத் தலைமை விளக்கமளித்து அறிக்கை விடுத்துள்ளது.


கிளாலிப் போக்குவரத்துப் பாதையை மூடுவதுதான் இராணுவ நடவடிக்கையின் நோக்கம். அதைப் படையினர் சாதித்துவிட்டனர். கிளாலி இறங்குதுறையை அழித்து, புலிகளின் முகாம்களைத் தகர்த்து கடற்பயணத்தைத் தடுத்துவிட்டதாக அந்த அறிக்கை கூறுகின்றது.

கொழும்புத் துறைமுகத்தைப் போன்றுதான் கிளாலி இறங்குதுறையும் இருக்கும் என்று நம்பும் சிங்கள மக்களை, படைத்துறைத் தலைமையின் அறிக்கை திருப்திப்படுத்தியிருக்கும்.

ஆனாலும் படைத்துறைத் தலைமை இந்த அறிக்கையை எழுதத் தொடங்க முன்னரே, புலிகளின் விசைப்படகுகள் கிளாலிக் கடல் நீரேரியில் நீரைக் கிழித்தபடி பயணம் போய்க்கொண்டிருந்த காட்சிகளை, நாகதேவன்துறையிலிருந்த கடற்படைத்தள ராடர்கள் அழகாகக் காட்டிக் கொண்டிருந்திருக்கும். ஆனால் அது சிங்கள தேசத்துக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லைத்தானே! அப்படித் தெரிந்திருந்தாலும் அது கிளாலிக் கடலில் செல்லும் படகல்ல; தொண்டமானாறு கடலேரியில் செல்லும் படகெனப் பதிலறிக்கைவிட்டு சிங்களப் படைத்துறைத் தலைமைக்கு அதிக நேரமெடுக்காது.

ஆனாலும் இந்த 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....



# சிறீலங்கா கடற்படையின் பலம்


**1990** யூன் 10 ஆம் திகதி தொடங்கிய போருடன் சிறீலங்கா அரசு தனது கடற்படையின் ஆட்பலத்தை, அப்போதிருந்ததைவிட, ஏறக்குறைய இரண்டு மடங்காக அதிகரித்தது ஆட்தொகையில் மட்டுமல்ல அதிவேகப் படகுகள், பீரங்கிப் படகுகள், பாரிய ரோந்துக் கப்பல்கள் என்று கடற்படையின் ஆயுத பலத்தையும் அதிகரித்தது.

1950 ஆம் ஆண்டு சுமார் இருநூறு மாலுமிகளுடன் இருந்த சிங்களக் கடற் படையின் ஆட்தொகை 1993 இல், பத்தாயிரத்து நானூறாக (10,400) அதிகரித்துவிட்டது (வரைபடத்தைப் பார்க்கவும்).

15. 11. 1992 அன்று கொழும்பில் நடந்த ஒரு மனிதக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட, அப்போதைய கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோவுக்குப்பதிலாக, சிறீலங்கா கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் D. A. M. R. சமரசேகரா பதவியேற்றுள்ளார்.

கடற்படைத் தளபதியின் தலைமையின் கீழ் சிங்களக் கடற்படை நான்கு நிருவாகப் பிரிவுகளாக இயங்கி வருகின்றது.

1. பிரதம அதிகாரி (Chief Of Staff).
2. கிழக்குப் பிராந்திய கடற்பகுதி (Com. East).
3. வடபிராந்திய கடற்பகுதி (Com. North).
4. கடல் நடவடிக்கைகளின் இயக்குனர் சபை (Dire. Of. Ops.).




இவை ஒவ்வொன்றுக்கும் 'கொமடோர்' தரத்திலான அதிகாரிகள் பொறுப்பாக உள்ளனர். ('பிரிகேடியர்' என்ற தரைப்படைப் பதவிநிலைக்கு இது ஒப்பானது).

பிரதம அதிகாரி என்ற பதவி நிலையில் கொமடோர் D. K. தசநாயக்க,

கிழக்குப் பிராந்திய கடற்பகுதிப் பொறுப்பதிகாரியாக கொமடோர் D. W. சந்தசிறி,

வடபிராந்திய கடற்பகுதி அதிகாரியாக கொமடோர் J. T. G. சுந்தரம்,

கடல் நடவடிக்கையின் இயக்குனர் சபைப் பொறுப்பதிகாரியாக கொமடோர் H. R. அமரவீர ஆகியோர் பதவி வகிக்கின்றனர்.

சிங்களக் கடற்படையின் கப்பற்பலத்தை பின்வரும் வகைகளுக்குள் அடக்கலாம்.

## 1. கட்டளையிடுவதும் துணையுமான கப்பல் (Command and Support ship)

இந்த வகைக் கப்பல்கள் கடற்படையிடம் மூன்று உண்டு. அபிதா, எடித்தாரா, விக்கிரம என்ற பெயருடன் களத்தில் உள்ளன. இவை மூன்றும் வடபிராந்திய கடற் பகுதியிலேயே சேவையில் உள்ளன. இவற்றின் பணி சதா கடலைக் கண்காணித்து, புலிகளின் படகுகள் தென்படுகின்றனவா என்று பார்ப்பதும். அவ்விதம் தென்பட்டால் அந்தத் தகவலை பீரங்கிப் படகுகளுக்கு அல்லது விசைப் படகுகளுக்கு அறிவித்து, குறித்த படகுகளை மூழ்கடிப்பதுதான். அத்துடன் ஏனைய கடற்படைக் கப்பல்களுக்கு நீர் -எரிபொருள் என்பவற்றை வழங்குவதுடன், வழிகாட்டியாகவும் செயற்படும். 150 -175 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்ட இக் கப்பல்கள், மணித்தியாலத்திற்கு 9 -12 கடல் மைல் வேகத்தில் செல்லக் கூடியவை.

இந்த வகைக் கப்பல் ஒன்றில் 60 -65 மாலுமிகள் பணியாற்றுவர். தேவை ஏற்பட்டால் 1000 சிப்பாய்களை ஏற்றிச் செல்லும் சக்தி இதற்குண்டு. இக் கப்பல்கள், 'கப்டன்' தரத்திலான அதிகாரிகளால் வழிநடாத்தப்படும். (இந்த பதவியை 'கேணல்' என்ற தரத்திலான தரைப்படைப் பதவிக்கு இணையானதாகக் கொள்ளலாம்).

இந்த மூன்று கப்பல்களில் 'எடித்தாரா' கப்பல் மீது 10. 07. 1990 அன்றும், 'அபிதா' கப்பல் மீது 04. 05. 1991 அன்றும் கரும்புலித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. சேதமடைந்த இக்கப்பல்கள் பின்னர் கொழும்பு 'டொக்யாட்' நிறுவனத்தினால் திருத்தியமைக்கப்பட்டு, இப்போது மீண்டும் வடபிராந்தியக் கடலில் சேவைக்கு விடப்பட்டுள்ளன.

இக்கப்பல்களில் பொருத்தப்பட்டுள்ள 'செலஸ்மார்' வகை ராடர்கள், 85 மைல் தொலைவீச்சுக் கொண்டவை. இந்த ராடர் மூலம் ஒரு படகு அல்லது கப்பல் எந்தத் திசையில் சென்று கொண்டிருக்கின்றது, அதில் என்னவகையான ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன, அப்படகினது அல்லது கப்பலினது வேகம் என்ன, குறித்த படகு அல்லது கப்பல் இந்தக் கடற்படையின் கப்பலிலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதையும் அறிந்துகொள்ள, அந்த ராடர்கள் உதவும். அத்துடன் 14.5 மி.மீ. ரக விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் மூன்று அல்லது 25 மி.மீ. ரக பீரங்கி ஒன்றும், 14.8 மி.மீ. ரக துப்பாக்கி இரண்டும் பொருத்தப்பட்டிருக்கும்.

## 2. பாரிய ரோந்துப் படகுகள் (Large Patrol Craft)

இந்த வகைக் கப்பல்கள் கடற்படையிடம் இரண்டு உண்டு. ஜெயசேகர, சாகரவர்த்தன என்ற பெயர்களுடன் களத்தில் உள்ளன. ஏறக்குறைய 132 அடி நீளமும் 35 அடி அகலமும் கொண்ட இவை, 25 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடியவை. இதில் முன்னுக்கும் பின்னுக்கும் ஒவ்வொரு 25 மி.மீ. ரக பீரங்கிகள் பொருத்தப்பட்டிருக்கும். இவை தவிர இயந்திரத் துப்பாக்கிகளும் உண்டு. இந்த ரோந்துப் படகில் 35 -40 மாலுமிகள் பணியாற்றுவர். இதனுடைய பணி ஆழ்கடலில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் -வேவு பார்த்தலும் - கடற்சண்டையில் பங்குபற்றுவதும் ஆகும். இந்த வகைப் படகுகள் 'கொமாண்டர்' தரத்திலான அதிகாரிகளால் வழி நடாத்தப்படும். (தரைப்படையில் இப்பதவியை லெப். கேணல் என்ற தரத்திற்கு இணையானதாகக் கொள்ளலாம்).

## 3. மோட்டார் பீரங்கிப் படகுகள் (Motor Gun Boats)

**'சங்காய் வகை - 2'**

வீரயா, சூரயா என்று மக்கள் அறிந்து வைத்திருக்கும் பீரங்கிப் படகுகள் இந்த வகையைச் சாரும். இந்த வகைப் படகுகள் ஒன்பது கடற்படையிடம் உண்டு.

('சங்காய் வகை - 2' இல் ஐந்து படகுகளும், 'சங்காய் வகை -3' இல் நான்கு படகுகளும் உண்டு.)

சங்காய் வகை - 2 ஐச் சேர்ந்த தலை சூரயா, வீரயா, ரணகாமி, தக்சயா, பாலவந்த என்று பெயரிடப்பட்டுள்ளன. இந்த ஐந்து பீரங்கிப் படகுகளின் ஆங்கில முதல் எழுத்துக்களை எடுத்தால் (S. W. R. D. B.) அவை பண்டாரநாயக்காவை ஞாபகப்படுத்தும் வகையில் சிங்களக் கடற்படையால் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பீரங்கிப் படகுகள் 70 -80 அடி நீளமும் 30 -35 அடி அகலமும் கொண்டவை. இவை மணிக்கு 20 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடியவை. இதில் 37 மி.மீ. பீரங்கிகள் இரண்டும், 25 மி.மீ. ரக பீரங்கிகள் இரண்டும் பொருத்தப்பட்டிருக்கும். இப்பீரங்கிப் படகுகளில் 30 -35 மாலுமிகள் கடமையாற்றுவர். இதன் பணி பாரிய கப்பல்களுக்கு பாதுகாப்பளிப்பதும், கடற்சண்டையில் ஈடுபடுவதும், தரைப்படைக்கு ஆதரவாக கடலிலிருந்து குண்டுகளை வீசுவதும், கடலைக் கண்காணிப்பதும் ஆகும். இந்தப் பீரங்கிப் படகுகள் 'லெப். கொமாண்டர்' தரத்திலான அதிகாரிகளால் வழிநடாத்தப்படும். (இப் பதவியை 'மேஜர்' என்ற தரைப்படைப் பதவி நிலைக்கு இணையானதாகக் கொள்ளலாம்).

## 4. தரையிறக்கும் கலங்கள் (Landing Craft)

இந்த வகைக் கலங்கள் நான்கு சிங்களக் கடற்படையிடம் உண்டு. கந்துல, ரணகல, பப்பத்த, பந்துல என்ற பெயர்கள் இவற்றிற்குச் சூட்டப்பட்டுள்ளன. 100 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்ட இக்கலங்கள், மணிக்கு 7 கடல் மைல் வேகத்தில் செல்லக் கூடியது. இதன் பணி கடலிலிருந்து துருப்புக்களைத் தரையிறக்குவதுதான். கடற்கரை வரை வந்து துருப்புக்களை இறக்கக் கூடிய வசதி இதற்குண்டு. வெற்றிலைக்கேணியில் இவ்வகைக் கலங்கள் தான், கடலிலிருந்து படையினரைத் தரைக்குக் கொண்டுசென்று, சிங்களப் படைக்கு பெரிதும் உதவின. ஒரே தடவையில் சுமார் 600 படை வீரர்களை இது கொண்டு வந்து இறக்கும். இந்தக் கலங்களின் கட்டளை அதிகாரிகளாக லெப். கொமாண்டர் தரத்திலான அதிகாரிகள் பணியாற்றுவர். இக் கலங்களில் 20 மி.மீ. ஓலர்லிக்கன் ரக பீரங்கிகள் இரண்டும், 12.7 மி.மீ. ரக விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் மூன்றும் மற்றும் இயந்திரத் துப்பாக்கிகளும் இருக்கும்.

கடல்வழி தரையிறக்க நடவடிக்கைகளில் இக் கலத்தினது பங்கு மிக முக்கியமானதாக இருக்கும்.

## 5. அதிவேக ரோந்துப் படகுகள் (Fast Patrol Craft)

இந்த வகைப் படகுகளில் பதினைந்து சிங்களக் கடற்படையிடம் உண்டு. 'டோரா' வகைப் படகுகள் பத்தும், 'டாபுர்' வகைப் படகுகள் இரண்டும், தென்கொரியாவில் செய்யப்பட்ட படகுகள் (பெயர் அறியமுடியவில்லை) மூன்றும் அடங்கின்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....



சிறீலங்கா கடற்படையிடமுள்ள 'சங்காய் - 2' வகையைச் சேர்ந்த ஒரு மோட்டார் பீரங்கிப் படகு.

# கடற்புலிகளின் வளர்ச்சியும் போரில் திருப்புமுனைகளும்

சிங்கள தேசத்து படைத்துறையின் முதுகெலும்பாக இன்று விளங்குவது, அதன் கடலாதிக்கம்தான். வடதமிழீழத்தில் கடற் கரையோரமாக அமைக்கப்பட்டிருக்கும் படைமுகாம்களுக்கான சகல விதமான விநியோகங்களையும், ஆபத்துக் காலகட்டங்களில் அவசர உதவிகளையும் கடற்படையே வழங்கி, படைமுகாம்களைப் பாதுகாத்து, பராமரித்து வருகின்றது.

சிங்களப் படைத்துறைக்கும் வடதமிழீழக் கரையோரமுள்ள படைமுகாம்களுக்குமிடையே தொப்புள் கொடிபோல நின்று செயற்படும் சிங்களக் கடற்படையின் பலம் சிதைக்கப்பட்டால், எமது விடுதலைப் போராட்டம் பாரிய திருப்பு முனை ஒன்றைச் சந்திக்கும். ஈழத் தமிழினம் ஆவலுடன் எதிர்பார்க்கும் இத்திருப்புமுனைக்குரிய காலம் கனிந்து வருவதைத்தான், அண்மையில் வெற்றிகரமாக நடந்து முடிந்த கிளாலிக் கடல் நீரேரித் தாக்குதலும், பருத்தித்துறைப் பெருங்கடல் தாக்குதலும் கோடிகாட்டியுள்ளன.

கடற்புலிகளின் வளர்ச்சியால் ஏற்பட்டுவரும் இத்திருப்புமுனை, எமது விடுதலைப் போரின் பரிமாணத்தை -தமிழினத்துக்குச் சார்பான முறையில் -மாற்றியமைக்கும் என்பது திண்ணம்.

எமது விடுதலைப் போரில் ஒரு முக்கிய பாத்திரத்தை வகித்துக்கொண்டிருக்கும் கடற்புலிகள் அமைப்பைக் கட்டி வளர்ப்பதில், தலைவர் பிரபாகரன் அவர்கள் பேரார்வம் காட்டிவருகின்றார்.

சிங்களக் கடற்படையுடன் ஒப்பிடும்போது, பலமும் -வளமும் குறைந்த நிலையிலும், எதிரியை வெற்றி கொள்வதற்குரிய தந்திரோபாயங்களையும் -தாக்குதல் திட்டங்களையும் வரைந்து கடற்புலிகளின் பலத்தைப் பெருக்க, தலைவர் தீவிர கவனம் செலுத்துகின்றார்.

ஆனையிறவுச் சமரையடுத்து 1991 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் என்ற பெயர் மாற்றத்துடன் வேகங்கொண்ட கடற்புலிகளின் செயற்பாடுகள், இந்த இரண்டு வருடத்தில் போரின் போக்கையே தீர்மானிக்கும் அளவுக்கு ஒரு நிர்ணய சக்தியாக வளர்ந்துவிட்டது.

அதுவும் கடந்த மாதம் கிளாலிக் கடலேரியிலும், பருத்தித்துறைப் பெருங்கடலிலும் -நான்கு நாள் இடைவெளிக்குள் -கடற்புலிகள் மேற்கொண்ட இரண்டு தாக்குதலின் வெற்றிகளும், அத்தாக்குதல்களின் தன்மைகளும், கடற்புலிகளின் பலத்தை எடுத்துக் காட்டியுள்ளன.

இலங்கைத் தீவில் இரண்டு இராணுவங்கள் என்ற கருத்துடன், இரண்டு கடற்படைகள் என்றும் மதிப்பிடத் தூண்டும் அளவுக்கு, கடற்புலிகள் ஒரு சக்தியாக உருவாகிவிட்டனர்.

கடற்புலிகளின் இந்த வளர்ச்சி, சிங்களப் பேரினவாதிகளைக் கலக்கமடையச் செய்துவிட்டது. அவர்களது கலக்கத்திற்கு காரணமுண்டு.

ஈழப்போர் - 2 சிங்கள அரசுக்குப் போதித்த பாடங்களுள் ஒன்று, கடல் வழித் தொடர்பு இல்லாத படைமுகாம்கள் (எல்லைப் புறங்கள் தவிர) நிலைத்திருக்க முடியாது என்பதுதான். (கொக்காவில், மாங்குளம், ஆனையிறவு அதற்கு உதாரணங்கள்)

ஆனால், இன்று அந்தக் கடல் வழித் தொடர்புக்கு ஆதாரமாக இருந்துவரும் சிங்களக் கடற்படைக்கே, சோதனைக் காலம் தொடங்கிவிட்டது.

ஆனையிறவுச் சமரின் பின், குடாநாட்டுடனான சகல தரைப் பாதைகளையும் துண்டித்து, யாழ்குடா நாடு மீது ஒரு முழுமையான இராணுவ முற்றுகையை இட்டு, பொருளாதாரத் தடையைப் பூரணமாக அமுல்படுத்தி -பொதுமக்களைப் பட்டினி போட்டு, அவர்களின் உறுப்பாட்டை உடைப்பதுடன் புலிகள் இயக்கத்தையும் அழித்து, விடுதலைப் போராட்டத்தையும் ஒடுக்க அரசு பெருமுயற்சி செய்தது. இதனைக் கண்ட குடாநாட்டு மக்களில் ஒரு பகுதியினர் இடிந்துபோய் பீதியில் இருந்தனர். புலிகள் இயக்கத்தின் இறுதிக்காலம் நெருங்கிவிட்டதென பேரினவாதிகள் அகமகிழ்ந்திருந்தனர். அப்போதுதான், கடற்புலிகள் கடலிலே காவியம் படைக்கத் தொடங்கினர். கிளாலிக் கடல் நீரேரி பிரதான பொருது களமாகவும், போராட்டத்தின் தலைவிதியையே தீர்மானிக்கக் கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் மாறத் தொடங்கியது.

படையினரின் பயமுறுத்தல்களையும் அரசின் தடைச் சட்டங்களையும் புறந்தள்ளிவிட்டு கடல்நீரேரியினூடாக மக்கள் பயணம் போகத் தொடங்கியபோது, அதனைத் தடுக்க சிங்களக் கடற்படை செயலில் இறங்கியது. கடல் நீரேரியைக் கட்டுப்படுத்துவதற்கென சங்குப்பிட்டி இறங்குதுறைக்கருகில் உள்ள நாகதேவன்துறையில் (ஞானிமடம்), ஒரு கடற்படைத் தளத்தை அது அமைத்துக் கொண்டது. '50 கலிபர்' துப்பாக்கியுடன் 'ராடர்' கருவிகள் பொருத்தப்பட்டிருந்த விசைப்படகுகளைக் கடற்படையினர் கடல் ரோந்துக்குப் பயன்படுத்தினர். உல்லாசப் பயணம் போவதுபோல, நாகதேவன்துறையிலிருந்து ஆனையிறவு இராணுவத் தளத்திற்கு, கடல் நீரேரி வழியாக அடிக்கடி கடற்படையினர் ரோந்து சென்றனர்.

இவ்விதம் பல விசைப்படகுகள் சேர்ந்து கடல் நீரேரியில் ரோந்து போகத் தொடங்கின.

இத்தகைய ரோந்துத் தொடர் ஒன்றை 29-12-91 அன்று தாக்கிய கடற்புலிகள் 9 கடற்படையினரைக் கொன்று, அவர்களது ஆயுதங்களையும் கைப்பற்றினர். இவ்வாறான தாக்குதல்கள் கடல் நீரேரியில் தொடர்ந்தன.

அதன் பின் ஆனையிறவுக்கான கடல்ரோந்து தடைப்பட்டது.

அதன்பின், இரவு வேளைகளில் மக்களின் படகுப் பயணத்திற்கு பாதுகாப்பளித்து வந்த கடற்புலிகளின் விசைப்படகுகளுக்கும் சிங்களக் கடற்படையின் விசைப் படகுகளுக்கும் இடையே, நேரடிக் கடற்சண்டைகள் நடைபெறத் தொடங்கின. இந்தச் சண்டைகளில் கடற்புலி வீரர்கள் காட்டிய வீரமும் அபாரத் துணிச்சலும் சிங்களக் கடற்படையைக் கதிகலங்கச் செய்தன. இறுதியில், 26-08-93 அன்று நடந்த கடற்சண்டையும், கரும்புலித் தாக்குதலும் கடல் நீரேரியில் சிங்களக் கடற்படையைத் தூர விலகியிருக்கச் செய்துவிட்டது.

இவ்விதம் கிளாலிக் கடல் நீரேரியூடாக ஒரு போக்குவரத்துப் பாதையைத் திறந்த கடற்புலி



சண்டைக்குத் தயாராகும் கடற்புலிகளின் படகொன்றில், தாக்குதல் வழிமுறையை விளக்கப்படுத்துகிறார் தளபதி நுசை

**தமிழீழக் கடலன்னை, தியாகத்தாலும் சோகத்தாலும் உருவான ஒரு மகத்தான காவியத்தை தன்னுள் கொண்டிருக்கின்றாள்.**

கள், சிங்களக் கடற்படையுடன் இடைவிடாது மோதி, வீரச்சாதனைகள் பல புரிந்து, இறுதியில் கிளாலிக் கடல்நீரேரியில் மேலாதிக்கம் பெற்றுவிட்டனர். இந்த வகையில் கிளாலிக் கடல் நீரேரியில் கடற்புலிகள் நிகழ்த்திய கடற்சண்டைகள், எமது போராட்ட வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொள்ளும்.

கடற்சண்டைகளைப் பொறுத்தவரையில், கிளாலிக் கடல் நீரேரியைப் போன்ற ஆழங்குறைந்த கடல்களில் நடைபெறும் படகுச் சண்டைகள் ஒரு பரிமாணத்திலும், ஆழ்கடலில் நடைபெறும் கடற்சண்டைகள் இன்னொரு பரிமாணத்திலும் இருக்கும். ஆழங்குறைந்த கடலில் அலைகள் குறைவாகவே இருக்கும். எனவே சாதாரண படகுகளையும் சண்டைப் படகாகப் பயன்படுத்த முடியும். அத்துடன் 'டோரா' போன்ற சக்தி வாய்ந்த பீரங்கிப் படகுகளை ஆழங்குறைந்த கடலில் ஓடமுடியாது. இவை கடற்புலிகளுக்குச் சாதகமான விடயங்கள். ஆனால் ஆழ்கடலில் பாரிய அலைகள் இருக்கும். அந்த அலைகளுக்கு ஈடுகொடுக்கக் கூடிய அளவுக்கு படகுகளும் பாரம்கூடியதாகவும் -பாரியதாகவும் -வலிமை உடையதாகவும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் பொங்கும் அலைகளின் மத்தியிலும் குறிபிசகாது எதிரிகளின் படகுகளுடன் மோத முடியும். இவ்விதமான பாரிய படகுகளைக் கொள்வனவு செய்யும் வசதிகளோ அல்லது கட்டும் வசதிகளோ தற்போது கடற்புலிகளிடம் இல்லை. இதற்கு நிறைந்த தொழில் நுட்பத்துடன் பெருமளவில் பணமும் தேவை. ஆனாலும் ஆழ்கடலிலும் அதிரடித் தாக்குதல் செய்வதற்குரிய சக்தியுடனேயே கடற்புலிகள் உள்ளனர். அவ்விதம் பல அதிரடித் தாக்குதல்களைச் செய்து, சிங்களக் கடற்படைக்கு கணிசமான இழப்புக்களையும் -இடைவிடாத தலையிடியையும் கொடுத்து வருகின்றனர்.

சிங்களக் கடற்படையைப் பொறுத்தளவில், ஆழ்கடலிலும் புலிகள் ஆதிக்கம் பெற்றுவிடுவார்களோ என்ற அச்சம்தான், தற்போது மேலோங்கியுள்ளது. ஆயினும் சிங்களக் கடற்படைக்குச் சவாலாக ஆழ்கடலில் நேரடிச் சண்டைகளில் ஈடுபடக் கூடிய அளவுக்கு கடற்புலிகளின் சக்தி பெருகினாலே போதும். அது போரின் போக்கையே தலைகீழாக மாற்றிவிடும் என்பது இராணுவ ஆய்வாளர்களின் எதிர்பார்ப்பு.

இன்றைய நிலையில், வடதமிழீழத்தில் உள்ள அனைத்துப் படைமுகாம்களின் பாதுகாப்பும் (எல்லைப் புறத்தைத் தவிர) சிங்களக் கடற்படையின் பலத்திலேயே தங்கியுள்ளது. கடற்படையின் உதவியில்லாமல் வடதமிழீழத்தின் படைமுகாம்களைப் பராமரிப்பது என்பது, சிங்கள அரசுக்கு இயலாத ஒன்று. படைமுகாம்களுக்குத் தேவையான உணவு, ஆயுதத் தளபாடங்கள் மற்றும் அனைத்துப் பொருட்களும் கடற்படை மூலமே விநியோகிக்கப்படுகின்றன. அத்துடன் படைமுகாம்கள் புலிகளினால் தாக்கப்படும்போதும், கடல் வழியேதான் சிங்களப் படைகளுக்கு உதவிகள் வந்து சேருகின்றன.

இந்த விநியோகங்களுக்கும், உதவிகளுக்கும் ஊறுவிளைவிக்கக் கூடிய அளவுக்கு, கடற்புலிகளின் நடவடிக்கைகள் ஆழ்கடலில் தொடர்ச்சியாக அமையுமாயின், கரையோரப் படைமுகாம்களில் சிலவற்றை அகற்ற வேண்டிய நிர்ப்பந்தம் சிங்கள அரசுக்கு எழலாம்.

பருத்தித்துறைப் பெருங்கடலில் 29-8-93 அன்று 'டோரா' சண்டைப் படகு மூழ்கடிக்கப்பட்டபின், இந்த அச்சம் சிங்களப் படைத்துறையினரின் மத்தியில் எழுந்துள்ளது. கடற்கரும்புலிகளின் பாய்ச்சலுக்கு சிங்களக் கடற்படையின் பாரிய கப்பல்களும் உள்ளாகலாம் என்ற பயம் சிங்களக் கடற்படையையும் ஆட்கொண்டுவிட்டது. அத்துடன் கடற்படையிடம் இருக்கும் ஒவ்வொரு சண்டைப் படகும் பல கோடி ரூபா பெறுமானமுள்ளது. பருத்தித்துறைக் கடலில் மூழ்கடிக்கப்பட்ட 'டோரா' சண்டைப் படகின் பெறுமதி 30 கோடி ரூபா என சிங்கள தேசத்துப் பத்திரிகை ஒன்று கூறியுள்ளது.

இவ்விதமாக பெருங்கடலிலும் சிங்களக் கடற்படை தொடர்ச்சியான இழப்புக்களைச் சந்தித்து, தனது கடலாதிக்கத்தை இழக்குமாக இருந்தால், படைமுகாம்களுக்கான விநியோகங்களை கடற்படை முழு அளவில் செய்ய முடியாது போக வாய்ப்புண்டு. இந்தப் பொறுப்பை சிறீலங்காவின் வான் படையால் பிரதியீடு செய்ய முடியாது. எனவே படைமுகாம்களில் ஆட்குறைப்புச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் படைத்துறைத் தலைமைக்கு ஏற்படலாம். இதன் பொருள், ஒன்றில் படைமுகாம்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும். அல்லது சிங்களப் படைகள் தாம் கைப்பற்றி வைத்திருக்

**தொடர்ச்சி 15ம் பக்கம் ....**

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# கடலோடு கரைந்த கடற் கரும்புலிகள்

'மகனைப் பார்த்துஎவ்வளவு காலமாகிவிட்டது! இப்ப எப்படி இருப்பானோ?"

அம்மாவுக்கு ஏக்கம். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, திரும்பவும் சிங்களவர்கள் தாக்கத் தொடங்கியபோது, "புலிக்கு....." என்று புறப்பட்டுப் போனவன் தான். அதன் பிறகு அவர்கள் ஒருநாள் கூடக் காணவில்லை.

இடையில் ஒருநாள் - சண்டையொன்றில், மைன்ஸ் வெடித்து பிள்ளைக்குக் கால் போய்விட்டதாம் என்ற துயரச் செய்தி அம்மாவுக்கு எட்டியது.

அம்மாவின் கண்களில் அருவி. வேதனையால் துடித்துக் கொண்டிருப்பானோ......? "அம்மா.... !" என்று அழுவானோ.....? அவள் மகனையே நினைத்துக் கொண்டிருப்பாள். கொஞ்ச நாட்களாக அம்மாவின் இரவுகள் தூக்கமற்று நீண்டு கழிந்தன.

காலம் அசைந்தது - "பிள்ளை இப்ப, யாழ்ப்பாணத்திலேயாம்.... கடற் புலியாக கிளாலியில் நிற்கிறானாம்..... சிங்கள நேவியிட்ட இருந்து சனங்களைக் காப்பாத்துகிற வேலையாம்..... " அவர்கள் அறிந்தார்கள்.

'எவ்வளவு காலமாகிவிட்டது...? எப்படி இருக்கிறானோ....? மகனைப் பார்க்க அம்மா ஆசைப்பட்டாள். பாசமும், ஆவலும் அவளை அவசரப்படுத்தியது.

சோதனைச் சாவடிகள். இராணுவக் கெடுபிடிகள். கொச்சைத் தமிழில் துளைத்தெடுக்கும் கேள்விகள். கிரானில் துவங்கி தாண்டிக்குளத்தில் முடிந்த துயரப் பயணத்தின் இறுதியில் அம்மா யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தாள்.

மட்டக்களப்பு தொடர்பகத்தில் பெயரைப் பதிந்து, பிள்ளைக்குத் தகவல் அனுப்பிவிட்டு ஆவலோடு காத்திருந்தாள். தங்கியிருந்த வீட்டின் வாசலையே பார்த்துக் கொண்டிருக்க, ஒரு நாள் கடந்து போனது; ஆனால், மகன் வரவில்லை. கிளாலியில் நேவிக்கு கரும்புலித் தாக்குதல் நடந்ததாம்..... கனக்க நேவியும் முடிஞ்சுதாம்....." என்று ஒரு செய்தி மட்டும் வந்தது. எல்லோருக்கும் சோகம் கலந்த மகிழ்ச்சி. அம்மாவுக்கும்தான். மாலையானதும் பரபரப்பாகப் பேசப்பட்ட அந்தச் செய்தியைத் தாங்கி, 'ஈழநாதம்' விசேட பதிப்பு அம்மாவின் கைகளுக்கு வந்தபோது.... அந்தப் படங்கள்......! அந்தப் படம்! அம்மா உற்று உற்றுப் பார்த்தாள்.... கண்கள் இருண்டன.....! உடல் விறைத்துப் போனது. நம்பவே முடியவில்லை. அம்மாவின் பிள்ளை .... வரதன்...! அவன் தானா என்று பெயரை மீண்டும் மீண்டும் பார்த்தாள். ஆம்! அது அம்மாவின் பிள்ளையேதான். அள்ளி அணைத்து முத்தமிட ஆசையோடு ஓடோடி வந்தானே.... அதே பிள்ளைதான்.

கறியில்லாமல், காசுமில்லாமல் அடுப்பெரியாத நாட்களில், "சோறு காய்ச்சனை கறியோட வாறன்" என்று, தூவக்கெடுத்துக் கொண்டு காட்டுக்குப் போவானே ...... அதே மகன்!

வீதியில் சிங்களப் படை மறித்து, கிரனேட்டைக் கையில் கொடுத்து "வாயுள்ளே போடடா...." என்றபோது "விருப்பமெண்டால் உன்ர வாய்க்குள்ளே போடு...." என்று துணிவோடு திருப்பிக் கொடுத்துவிட்டு வந்தானே.... அந்த மகன்!

சோகத்தோடு அணைத்து நிற்கும் தலைவனுக்கருகில், பூரிப்போடு சிரித்து நின்றான் அந்தக் கரும்புலி.



தலைவர் அவர்களுடன் கடற்கரும்புலி மேஜர் வரதன்

தாங்கமுடியாத பெரும் சுமையாய், துயரம் நெஞ்சை அழுத்த அம்மா அழுதாள். கவலையைத் தீர்க்க கண்ணீர் தீரும்வரை அழுதாள்.

. . .

கந்தசாமி ஐயாவுக்கும், அம்மாவுக்கும் பிறந்த 9 குழந்தைகளுக்குள், நான்காவது வரதன். இராமச்சந்திரன் என்பது இயற்பெயர்.

1973 ஆம் ஆண்டு பிறந்தவன். ஒவ்வொரு வருடமும் தமிழ்ப் புத்தாண்டிற்கு இரண்டு நாள் முன்னதாக வரதனின் பிறந்த நாள் வந்து போகும்.

கல்வியிலும், விளையாட்டுத்துறையிலும் ஆர்வம் மிகுந்தவனாக துடிப்புடன் பள்ளிக்குப் போனவனை, அப்பாவோடு வயலுக்குப் போகவைத்தது குடும்பநிலை.

குடும்பச்சுமை பகிர்ந்து, உழைத்து, பதினாறு வயதுவரை வீட்டோடு இருந்தவனை இயக்கத்திற்குப் போகவைத்தது நாட்டு நிலை.

மன்னம்பிட்டிக்குக் கிழக்கே பதினைந்து மைல் தூரத்திலுள்ள கள்ளிச்சை வடமுனைதான் ஊர். ஆக்கிரமிப்பின் கொடிய வலியை அனுபவிக்கும் எங்கள் தாயகத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்று.

மட்டக்களப்பில் பயிற்சியை முடித்தவனுக்கு, அங்கு கண்ணிவெடிப் பிரிவில் பணி.

சிங்களப் படையுடன் மீண்டும் போர் தொடங்கி வெடியோசைகளால் நிறைந்து, தகர்ந்து கொண்டிருந்த நாட்களுள் ஒன்று, கள்ளிச்சை வடமுனைக்கும் வெண்டுகல் சேனைக்குமிடையில் எதிரி விதைத்துவிட்டுப் போயிருந்த மிதிவெடிகளில் ஒன்று, விறுவிறுப்பான வேலைகளில் ஈடுபட்டிருந்த வரதனின் வலது காலைப் பிய்த்தது.

காட்டு முட்கள் கீறிக் கிழிக்க, நரக வேதனைக்கு நடுவில் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டான் வரதன். சிகிச்சை முடிய புகைப்படப் பிரிவில் பணி.

. . . .

கிளாலியிலிருந்த கடற்புலிகளின் தளம். எங்கள் அன்புக்கினிய மக்களை, இரத்தப் பசி கொண்டலையும் இனவாதப் பேய்களிடமிருந்து காத்து நிற்கும் உன்னதப் பணியில் அவர்கள்.

இரவில் விழித்திருந்து அலை மடியில் காவல். பகலை இரவாக்கித் தூங்க முயலும் வாழ்வு.

முகாமில் எப்பொழுதும் கலகலப்பை நிறைத்திருப்பவன் மதன் தான். துடிதுடிப்பான சுபாவம் அவனுடையது.

வரதனும், மதனும் உற்ற நண்பர்கள். புகைப்படப் பிரிவில் ஒன்றாக வேலை செய்தபோது மெல்ல அரும்பிய உறவுதான் - இன்று உயிருக்குயிரான சிநேகிதமாக இறுக்கம் பெற்றிருந்தது.

ஒன்றாகத் தலைவருக்குக் கடிதம் எழுதி, ஒன்றாகக் கடற்புலிகளுக்கு வந்து ஒன்றரைக் கால்களோடு நீந்திப் பழகி, பயிற்சி பெற்று, படகேறிக் களமாடி, ஒன்றாகக் கிளாலியிலும் பணி செய்தவர்கள் ஒன்றாகக் கரும்புலிக்கும் பெயர் கொடுத்து, இறுதியிலும் ஒன்றாகவே போனார்கள்.

. . .

மதன் துடிதுடிப்பானவன். ஒன்றரைக் காலில் நின்று கூத்தாடி... ஊன்று தடியோடு துள்ளியோடி.... கும்மாளம் அடித்து நடந்து திரிந்து.... அவன் ஓய்ந்ததே இல்லை.

திருமலைக் காட்டில் மிதிவெடி ஒன்றில், கழட்டிவிட்ட இடது காலுக்குப் பதிலாக மதனுக்கு, ஜெய்ப்பூர்க்கால் பொருத்தப்பட்டிருந்தது. பொய்க்காலைக் கழற்றி விட்டு, ஒன்றரைக் காலில் மரத்தில் ஏறி மாங்காயும், இளநீரும் பிடுங்கித்தந்து எங்களோடு சேர்ந்திருந்து சாப்பிட்டு மகிழ்ந்த உயர்ந்த நண்பன் அவன்.

இரவெல்லாம் படகோடு, கடலில் சமராடிவிட்டு பகலில் ஓய்வெடுத்துத் தூங்கமுயலும், தோழர்களை ஊன்று தடியால் தட்டிக் குழப்பித் தொந்தரவு செய்துவிட்டுத் துள்ளியோடி, அவர்களுடைய அன்பான சினப்பிற்கும் ஆளாகின்றவன் அந்தக் குழப்படிக்காரன். அவன்கூட, தானும் இரவு சண்டைக்குப் போயிருப்பான்; ஆனால், பகலிலும் ஓடித்திரிவான்.

சண்டைக்குத் தயாரான எடுபொருட்கள் இல்லாத ஓய்வான ஒரு மாலைப் பொழுதில் மதன் ஒரு தென்னைமர அடியில் சாய்ந்திருப்பான். கடல் காற்றோடு கலந்து ஒரு பாடல் விரியும். தன்னுடையது பாடுவதற்கு ஏற்ற ஒரு குரல் இல்லை என்பது தெரிந்திருந்தும் அவன் பாடுவான். அதில் ஒரு கவர்ச்சி இருக்கும். அருகில் இருப்பவர்களை ஈர்க்கும்.

எப்போதும், எதிலும் கவலையில்லாத ஒருவனைப் போல பகிடி சொல்லித் திரிகின்ற மதன், தனது திறமையை வேலைகளின் போது செயலில் காட்டுவான்.



கடற்கரும்புலி கப்டன் மதன்

எங்களால் செய்ய முடியாமல் போகிற சில வேலைகளை, ஒரு காலை இழந்தவனாக இருந்தும் அவன் செய்து முடிப்பான். பெரும்பாலும், தவறுகள் செய்யாமலே இருக்கின்ற மதன், சக தோழர்கள் தவறு செய்யும்போது சொல்லித் திருத்துகின்ற போராளி.

மதனுக்கிருந்த இயல்பான குழப்படித் தனத்தால், வரதனோடு தொடங்கிய பகிடிச் சண்டை கடைசியில் சீரியசாக முடிந்தது. அந்த உயிர் நண்பர்கள் கதைக்காமல் பிரிந்துபோய் விட்டார்கள். அடுத்த 24 மணி நேரம் வெறுப்புட்டுவதாகக் கழிந்தது. வரதன் குளிக்கப் போனான். எப்போதும் இருவரும் சேர்ந்தே போவார்கள். இப்போது வரதன் தனியே. முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு மதன் ஒரு மரக்குத்தியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். "போ" என்று நட்புத் தாண்டவும் தன்மானம் தடுத்தது. ஆனாலும், அன்பே வென்றது. ஊன்று தடியுடன் துள்ளிக் கொண்டு முந்தி ஓடிப்போய்

தொடர்ச்சி 10ம் பக்கம் ...



வெடிமருந்துப் படகில் கரும்புலி மேஜர் வரதன்

'இலங்கைத் தீவில் இரண்டு இராணுவங்கள்' என்ற கருத்துடன், 'இரண்டு கடற்படைகள்' என்றும் மதிப்பிடத்தூண்டும் அளவுக்கு உருவாக்கம் பெற்று, போரின் போக்கையே தீர்மானிக்கும் அளவுக்கு ஒரு நிர்ணய சக்தியாக கடற்புலிகள் வளர்கின்றனர்

# கடலன்னையின் புதல்வர்கள்

புவீந்திரன்! அவன் ஒரு குழந்தை.

வயதுதான் பதினெட்டேயன்றி, மனதால் அவன் பாலகன்.

மனித வாழ்வின் நெளிவு, சுழிவுகள் அவனுக்குத் தெரியாது. சமூக அமைப்பின் ஏற்றத் தாழ்வுகள் அவனுக்குப் புரியாது. அவனுக்குத் தெரிந்ததெல்லாம் யாரோ -எவரோ -அடுத்தவர்களுக்காகப் பாடுபட வேண்டும். எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும் என்பது மட்டும்தான்.

சின்ன வயதிலிருந்தே அவன் அப்படித்தான். இரக்க சிந்தையும் -உதவும் குணமும் அவனது உயிரோடு ஒட்டியிருந்த இயல்புகள்.

பக்கத்து வீட்டு அம்மா வந்து "தம்பி ஒருக்கா அந்தக் கடைக்குப் போட்டு வாறியா அப்பன்" என்றால், சொந்த வீட்டு வேலையைப் பாதியிலேயே போட்டு விட்டு எழுந்து போய் விடுகிறவன் அவன்.

ஊரில் எவருடைய வீட்டிலாவது, ஒரு நல்லது கெட்டது என்றால், அங்கு அந்தச் சிறுவன் ஏதாவது எடுபிடி வேலைகள் செய்து கொண்டிருப்பான்.

சப்பாத்து கட்டாயம் அணிய வேண்டிய அவனது பள்ளிக்கூடத்தில் -ஏழை நண்பனொருவன் "அம்மா காசுக்குக் கஸ்டப்படுறா ..." என்று மனவேதனைப் பட்டபோது, அப்பா ஆசையாக வாங்கித் தந்த சப்பாத்தைக் கழற்றிக் கொடுத்துவிட்டு வெறுங் காலோடு வீட்டுக்கு வந்தவன் அவன்.

குடும்பத்தின் ஏழ்மை நிலையைச் சொல்லி, "காலையில கூடச் சாப்பிடேல மச்சான்..." என்று விம்மிய உற்ற நண்பனிடம் -அவன் அடியோடு மறுக்க மறுக்க -கையில் கிடந்த தங்கச் சங்கிலியையே கழற்றிக் கொடுத்துவிட்டு வந்தவன்தான் புவீந்திரன்.

ஒரு மென்மையான உள்ளம் அவனுடையது. அவன் கோபமடைந்ததை நாங்கள் கண்டதில்லை. அப்படித்தான், சுயகட்டுப்பாட்டை மீறிக் கோபம் வந்தாலும் அது வினாடிக் கணக்கில் கூட நீடித்ததில்லை. அவனுடைய உதடுகள் கெட்ட வார்த்தைகளை உச்சரித்ததை ஒரு நாள் கூட நாங்கள் கேட்டதில்லை.

வீட்டில் அக்கா, தம்பியோடு என்றாலும் சரி, பிற்காலத்தில் இயக்க நண்பர்களோடு என்றாலும் சரி, சாதாரண சிறு சச்சரவுகள் வந்தாலும்கூட அவன் தன்னைத் தானே நொந்து கொள்வானே தவிர, மற்றவர்களை அல்ல. சரி எது பிழை எது என்று எல்லாம் அவனுக்குத் தெரியும்; ஆனால், நியாயம் கதைக்க மாட்டான். போய் ஒரு மூலையில் இருந்து விக்கி விக்கி அழுது கொண்டிருப்பான்.

அது பாசத்தால் பிணைந்திருந்த ஒரு குடும்பம். அக்காவிலும் தம்பிலும் அன்பு நிறைந்த சகோதரனாக அவன் இருந்தான். அப்பாவுக்கு எல்லாமே குழந்தைகள் தான். குழந்தைகளுக்கு எல்லாமே அம்மாதான்.

அவனுக்கு 12 வயதாக இருக்கும் போது அந்தத் துயரம் நடந்தது. திருகோணமலையிலிருந்த உறவினரிடம் போன அம்மா திரும்பி வரவில்லை; அந்தக் குழந்தைகள் பார்க்க முடியாத இடத்திற்கு இந்தியர்கள் அம்மாவை அனுப்பிவிட்டார்கள். இனி எப்போதும் அவள் வரமாட்டாள்.

புவீந்திரன் அழுதான். அப்போது அவனுக்கு அது மட்டும்தானே தெரியும். ஆனால், அம்மாவின் இழப்பு அந்தப் பிஞ்சு உள்ளத்தில் ஆழமான ஒரு வடுவை ஏற்படுத்தியது.

ஓய்வாக இருக்கும் கருக்கல் பொழுதுகளில், அப்பா குழந்தைகளுக்கு ஆங்கிலப் படக் கதைகள் சொல்லுவார். சுதந்திரத்தை நோக்கிய எழுச்சிகளைத் தழுவியதாக அவை இருக்கும். வியட்நாம், கியூபா, தென்னாபிரிக்கா என அது நீளும். புவீந்திரன் மட்டும் ஆர்வத்தோடு இருந்து கேட்பான். ஏற்கனவே ஏழைகளுக்காகவும், பாதிக்கப் படுபவர்களுக்காகவும் இரங்குகின்ற அந்த மனம், படக் கதைகளைக் கேட்கும் போது ஒடுக்கப்படும் மக்களினங்களை நினைத்துப் பரிதாபப்படும். அவர்களின் அவலங்களை மனத் திரையில் போட்டுப் பார்த்துக் கொதிக்கும். அந்தப் போராட்டங்களின் நியாயத் தன்மையைப் புரியும். அடக்குகின்றவர்கள், அழிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை உணரும். அந்த மக்களோடு எங்களினத்தை ஒப்பிட்டுப் பார்த்து விழிக்கும் எங்கள் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் தானும் ஈடுபட வேண்டுமென இறுகும்.

இந்த விழிப்புணர்வோடும் -மனஉறுதியோடும், இதயத்தைப் பிழியச் செய்கின்ற அம்மாவினுடைய நினைவுகளும் சேர்ந்துதான் -அவனை இயக்கத்திற்குப் போகவும் உந்தியிருக்கக் கூடும். புவீந்திரன் ஒரு நாள் வீட்டிற்கு வந்திருந்தான். உறவினர் ஒருவரும் வந்திருந்தார். ஒரு தந்தைக்கு இயல்பாகவே இருக்கின்ற பிள்ளைப் பாசம் வெளிப்பாடு கண்டபோது -வந்தவர் அப்பாவிடம் சொன்னதை அப்பா மகனிடம் கேட்டார். "இனி ... வெடிபட்டு ... ஏலாது ... இனி விட்டிட்டு வந்து ... வீட்டோட நிக்கலாம் தானே..." அப்பா இழுக்க, மெல்லியதொரு சிரிப்போடு, விழிகளை உயர்த்தி ஒரு அரசியல் மேதையைப் போல அவன் விளக்கினான்;

"இயக்கத்திற்குப் போனது, விலத்திக் கொண்டு வாறதுக்கில்லை. நான் போனது நாட்டுக்காகப் போராட .... திரும்பி வீட்டுக்கு வாறதுக்கில்லை. இந்தப் போராட்டத்திலை நான் சாகவும் கூடும். அதைப் பற்றி நான் கவலைப் படவும் இல்லை....." வந்தவரும் அப்பாவும் மௌனித்துப் போனார்கள்.



தலைவரோடு புவீந்திரன்

சோகம் பரவிய முகத்தோடு, உள்ளனைக் கைதொட்டுத் தடவி, "எந்தக் காலிலையப்பன் வெடி பிடிச்சது___?" என்று, அக்கறையோடு தலைவர் விசாரித்தபோது, மெய்சிலிர்த்து நின்று சிரித்தாயாம்.

கூடித்திரிந்த பழைய நண்பர்கள் நீண்ட காலத்தின்பின் சந்தித்தார்களாம். ஏதோவெல்லாம் கதைத்தபின் பிரிகின்ற நேரத்தில், "நீ இப்ப நொண்டிதானேடா.... இனி உனக்கு ஏன் மச்சான் இயக்கம்... விட்டிட்டு வாவன்ரா...." கேலி செய்தார்களாம்.

ஒரு மணித்துளி திகைத்துப் போனவன் -நின்று திரும்பி, நிதானமாகச் சொன்னானாம் :

"எனக்கு கால்தான் நொண்டி. என்ர மனம் நொண்டியாகேல்லை. ஒரு உறுப்புத்தான் ஊனமாகப் போச்சுதே தவிர இல்லாம, உள்ளம் எப்பவும் உறுதியாகத்தான் இருக்கிது. அங்கங்கள் போறதைப் பற்றி எனக்குக் கவலை இல்லையடா.. மன சில உறுதிதான் வேணும். எனக்கு அது நிறைய இருக்கு. நான் சும்மா இருந்து சாகமாட்டன். பெரிய சாதனையொன்றைச் செய்துதான் சாவன்....."

அந்த நண்பர்களுக்கு அப்போது அது புரியவில்லை. சிரித்துக் கொண்டு போனார்கள். ஆனால், இப்போது விக்கித்து நிற்கின்றார்கள்.

"பிரபல கரும்புலி போறார்" -இப்படித்தான் தோழர்கள் அவனுக்குப் பகிடி சொல்லுவார்கள்.

ஆனையிறவில் வெடிபட்டு நரம்பு அறுந்து தும்பிப் போனதால் 'பெல்ட்' போட்டுக் கட்டியிருக்கும் இடது காலை இழுத்து இழுத்து, ஒரு புன்சிரிப்போடு புவீந்திரன் போவான்.

அவனை ஒரு 'கரும்புலிப் பைத்தியம்' என்று சொல்லலாம். அவனது நினைவுகள் கனவுகள் எல்லாமே, ஒரு கரும்புலித் தாக்குதலைச் சுற்றித்தான் இருந்தன.

எவருமில்லாத தனிமையொன்றில் :

ஏதாவது ஒரு கடற்கரையோர வரைபடத்தை விரித்து வைத்து விட்டு, நீண்ட மெல்லிய ஒரு தடியோடு புவீந்திரன் அருகில் நிற்பான். தன்னைத் தளபதியாகவும், அருகில் வீரர்கள் நிற்பதைப் போலவும் உருவகப் படுத்திக் கொண்டு வரைபடத்தைத் தடியால் தொட்டுக் காட்டி, அவன் காற்றுக்கு விளங்கப்படுத்திக் கொண்டிருப்பான்.

"..... போனா இதாலதான் வரும்....."

"..... உங்கட வண்டியள் இந்த மாதிரி வியூகத்தில அதைக் குறுக்கால வழிமறிச்சு அடிக்கும்....."

தொடர்ச்சி 11ம் பக்கம் ....



கடற் கரும்புலிகள் மேஜர் புவீந்திரன், கப்டன் மணியரசன்

'இது எங்களின் கடல். இது தமிழீழத் தாயகத்தின் இணைபிரியாத அங்கம். தரையோடு, இந்தக் கடலும் மீட்கப்பட்டே ஆகவேண்டும்.'

# கடலன்னையின் புதல்வர்கள்...

"....... அந்த நேரம் - இந்த விதமாகப் பக்கவாட்டில், உச்ச வேகத்தில வந்து புவீந்திரன் இடிப்பான்..."

".... டோரா புக்கையாகும்..."

ஒளித்திருந்து பார்த்துக் கொண்டிருக்கும் எங்களுக்கு, அவனைப் பார்க்க சிரிப்புத்தான் வரும்.

புவீந்திரன்!

அவன் வித்தியாசமான போராளி மட்டுமல்ல; வித்தியாசமான மனிதனும்கூட.

அவன் அமைதியானவன்; ஆனால் சோம்பேறியல்ல. உற்சாகமானவன்; ஆனால், குளப்படிகாரனல்ல.

அவனோடு வாழக்கிடைத்த நாட்கள் எங்களுக்கு வரப்பிரசாதம்.

அவனுக்கு மட்டுமே உரிய சில உயர்ந்த பண்புகள் இருந்தன. இவற்றை அவனிடத்தில் மட்டும் தான் காணமுடியும்.

இயல்பாகவே அவனுக்கிருக்கின்ற இரக்க குணம். அடுத்தவர்கள் அவனில் இரக்கப்படும் விதமாக அவனை இயக்குவிக்கும்.

இயலாத காலோடும் கூட சில சமயங்களில் எங்கள் மனம் உருகும்விதமாக அவன் வேலை செய்வான்.

கிணற்றடியில் உடுப்புத் துவைத்துக் கொண்டிருக்கும் நண்பன், அவசர வேலையொன்றிற்கான அழைப்பின் பேரில், துவைப்பதைப் பாதியில் விட்டு விட்டு அவதிப்பட்டுப் போனானென்றால், அவன் திரும்பி வரும் போது அவனது உடுப்புக்கள் முற்றத்து வெயிலில் உலர்ந்து கொண்டிருக்கும். அப்படிப்பட்டவன்தான் புவீந்திரன்.

முகாமிற்கு யாராவது வெளியாட்கள் வந்துவிட்டால் -அவர்களை உபசரிக்க, அன்றைய முறை ஆட்களைத் தேடித்திரிந்து, பின் மூலையில் போய்ப் பிடித்துவந்து விடுவதற்கிடையில் -வந்தவர்களுக்குத் தேநீர் கொடுத்து விட்டு, அவன் பேணிகளைக் கழுவிக் கொண்டிருப்பான். அதுதான் புவீந்தரன்.

ஆனையிறவில் வெடிபட்டு காயம் மாறிவந்தவனுக்கு, யாழ் மாவட்ட நிர்வாகச் செயலகத்தில் தட்டச்சுப் பொறிப்பது பணி. அங்கொன்றும், இங்கொன்றுமாக எழுத்துக்களைத் தேடித்தேடிக் குத்திக் கொண்டிருந்தவன் - கொஞ்ச நாட்களில், மற்றவர்கள் மெச்சக்கூடிய அளவுக்கு அதில் தேர்ச்சி பெற்றான்.

அறிக்கைகள், கடிதங்கள், விபரக் கோவைகள், அது இது என்று, நாளாந்தம் அவனுக்கு வேலைகள் குவிந்துபோய்க் கிடக்கும். அப்படி இருக்கும் போதும் -கவிதை, கட்டுரைகள் எழுதிக் கொண்டுவந்து, "இதையும் ஒருக்கால்...." என்று கெஞ்சுகின்ற நண்பர்களிடமும் முகம் சுளிக்காமல் வாங்கி சட்டைப் பைக்குள் மடித்து வைப்பான். காலை, மாலை, இரவு என இழுபட்டு நள்ளிரவு கடந்து 1, 2 மணிவரை இருந்துகூட தனக்குரிய வேலையை முடிக்கின்ற அந்தப் போராளி, அதன் பிறகும் விழித்திருந்து -நண்பர்களுடையதையும் அடித்துக் கொடுக்கின்ற நண்பன்.

புவீந்திரன்!

புலிவீரர்களின் வாழ்வுக்கு நீ ஒரு பாடம்.

உன்னோடு வாழ்ந்த நாட்கள், எக்காலத்திலும் தேயாத பசுமையான நினைவுகள்.

சூம்பிக் கிடக்கும் காலோடும் உன்னைத் தூக்கிக் கொண்டு போய் கடலில் இறக்கும் போதெல்லாம் -சிறுபிள்ளை மாதிரி தத்தளித்துத் தத்தளித்து கையைக் காலை விசுக்கி விசுக்கி ஓயாத முயற்சியோடு அலைகளோடு போராடி நீ நீந்திப் பழகினாய்.

"பயிற்சிக் காலம் போதாது. ஒருத்தன் கூட சரியாக அடிக்கமாட்டான்..." என்று, சொன்னவர்களிடம் சவால் விட்டு, பயிற்சி முகாமிலிருந்த அத்தனை பேருக்கும் சாள்ஸ் அண்ணன் 'ரச்' தந்தபோது -வெடிபட்ட காலை அவரே சரியாய் எடுத்துவிட்டு, ரைபிள் பிடித்துச் சொல்லித் தர -நீ மட்டுமே ஒரு 'புல்'லும், ஒரு 'நைனும்' அடித்து, சாள்ஸ் அண்ணனின் பெயரைக் காத்தாய்.

ஏதுவுமே தெரியாத அப்பாவிக் குழந்தையான உன்னிடம், நல்லதற்ற வார்த்தையைச் சொல்லி, "இன்னாரிட்டைக் கேட்டுப் பார் அர்த்தம் சொல்லுவார்....." என்று அனுப்பிவிட்டால், அங்குபோய் நல்ல கிழி வாங்கிக் கொண்டு வந்து, விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கும் எங்களுக்கு முன்னால் அசடு வழிய நிற்பாய்.

கால் இல்லாமல் இருந்தும், மெல்ல மெல்ல படகோட்டிப் பழகி -கிளாலிக் களத்தில் எதிரிகளைக் கலைத்து விரட்டும் சண்டைகளில், அலைகளைக் கிழித்துச் செல்லும் எங்களது சண்டைப் படகுகளுக்கு ஓட்டியாய் இருந்தாய்.

இன்னும் .... இன்னும்........

இவையெல்லாம், எக்காலமும் ஓயாமல் எங்கள் இதயங்களில் நினைவலைகளாய் மோதும்.

புவீந்திரன்!

சாதனையொன்றைச் செய்து தான் சாவேன் என்றாயா? சாகும் போது நீங்கள் படைத்தது ஒரு சாதனையல்ல; அது சாதனைகளின் ஒரு குவியல்.

'கனன்' எடுத்தது ஒரு சாதனை. அது இரண்டாக இருந்ததும் ஒரு சாதனை. ஒரே தாக்குதலில் இரண்டு 'பிப்ரி' எடுத்தது இன்னொரு சாதனை. டோரா ஒன்றை முழுமையாக நொருக்கியது அடுத்த சாதனை. ஒரு கடற் தாக்குதலில் அதிக படையினர் கொல்லப்பட்டது வேறொரு சாதனை.

"ஆசிரில ட்ரெயினிங் தரேக்கை நீங்கள் ஒரு டோரா அடிக்க வேணும் என்டு சாள்ஸ் அண்ணன் சொல்லுகிறவர்...." என்று அடிக்கடி கூறும் நீ, "இப்ப நாங்கள் அடிக்கப் போறம். ஆனால், அதைப் பாக்கிறதுக்கு அவர்தான் இல்லை" என்று கவலைப்பட்டாய்.

அந்தத் தாக்குதல் திட்டம் உருவாக்கப்பட்டது.

கட்டைக் காட்டிலிருந்து - பலாலிக்கு ரோந்து செல்லும் டோராவை, பருத்தித்துறைக்கு மேலே இடைமறித்து மூழ்கடிக்க வேண்டும். கட்டைக்காட்டில் இருந்த 18 மைல் தூரத்திலும், காங்கேசன்துறையிலிருந்து 16 மைல் தூரத்திலும் அந்தத் தாக்குதல் மையம் இருந்தது.

மணியரசனும், நீயும் தலைவரிடம் போனீர்கள்.

உங்கள் வாழ்வின் உச்ச உயர் நாள் அதுவாகத்தான் இருந்திருக்கும்.

உள்ளப் பூரிப்பின் சிகரங்களைத் தொட்டிருக்கக் கூடிய அந்த நாளில், உங்கள் மனவுணர்வுகள் எப்படியிருந்திருக்கும் என்பதை, வார்த்தைகளில் வடித்தெடுக்க முடியாது.

சோகம் பரவிய முகத்தோடு, உன்னைக் கைதொட்டுத் தடவி, "எந்தக் காலிலையப்பன் வெடி பிடிச்சது?...." என்று, அக்கறையோடு தலைவர் விசாரித்த போது -மெய் சிலிர்த்து நின்று சிரித்தாயாம்.

எல்லாமே தயார்.

சக்கை வண்டி; சண்டைப் படகுகள்; தாக்குதற் கருவிகள்; தாக்கும் வீரர்கள்; மணியரசன் நீ.... எல்லாமே.

ஏறக்குறைய பதினைந்து நாட்கள். அவனுக்காக கடல் மடியில் நீங்கள் காத்திருந்தீர்கள்.

நள்ளிரவிலே நிலைக்குப் போய் விட வேண்டும். இருளை ஊடறுத்து உங்கள் விழிகள் பகைவனைத் தேடிக் கொண்டிருக்கும்.

மறுநாள் மதியமோ, மாலை வரையோ அந்தத் தேடல் நீடிக்கும், எதிரி வரமாட்டான். ஒவ்வொரு நாளும் ஏமாற்றத்தோடு திரும்பி வருவீர்கள்.

உற்சாகம் குன்றாமல், உறுதி குலையாமல் நீங்கள் மீண்டும் மீண்டும் போனீர்கள்.

29-08-93. நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவன் கடலில் வந்தான்.

பொங்கியெழும் எங்கள் கடலில் எதிரி உலா வரவா?

காத்திருந்த வேங்கைகளின் ஆவேசமான பாய்ச்சல்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தனியறையில் - வரைபடத்தை விரித்து வைத்து, நீ காற்றுக்கு விளங்கப்படுத்துகிற அதே தாக்குதல் திட்டம் -எங்கள் கண்ணெதிரே கடலில் நடந்து முடிந்தது.

அப்போது நாங்கள் சிரித்தோம். இப்போது.....

இரண்டு 'கனன்' பீரங்கிகளையும், 2 'பிப்ரி கலிபர்'களையும் மூழ்கிக் கொண்டிருந்த டோராவில் இருந்து தோழர்கள் எடுத்துக் கொண்டு வந்தார்கள்.

புவீந்திரன் வரமாட்டான்.....!

மணியரசனும் வரமாட்டான்....!

* * * * *

மணியரசன்!

"பதினைந்தும் நிரம்பாத பாலக வயதில், தாயகத்துக்காய் தனையீந்த கரும்புலி; என்று கருவில் விளைந்த பிள்ளை" என்று தமிழீழத் தாயை தலைநிமிர்ந்து சொல்ல வைத்த அடலேறு அவன்.

அந்தத் துடிப்பாட்டமும், துடுக்கான பேச்சுக்களும், எங்களது நெஞ்சக் கூட்டுக்குள் அவனது நினைவுகளைப் புதைத்து விட்டுப் போய்விட்டன.

இந்தச் சின்ன வயதிலும் - பிறைச் சந்திரன் போல ஒரு மெல்லிய மொட்டை, அகவைக்கு ஏற்ற அளவில் குழந்தை வளர்ச்சி, குறும்புச் சிரிப்போடு ஓர் உருண்டை முகம், திமிர்ந்த -லாவகமான -திடகாத்திரமான உடல்வாகு. எங்கள் கண்ணெல்லாம் அந்த வண்ணக்கோலம்.

மணியரசன் குறுகுறுத்தவன்.



பருத்தித்துறையில் கரும்புலித் தாக்குதலில் மூழ்கி- 'டோரா' பீரங்கிப் படகிலிருந்து கைப்பற்றிய ஆயுதங்களைத் தலைவர் பார்வையிடுகின்றார்.

பஜூரோவில் வருகின்றவர் வீட்டிற்குள் போய் அலுவல் முடித்துவிட்டு, போன வேகத்திலேயே திரும்பி வந்தால்கூட, பஜூரோ அடுத்த பக்கமாக திரும்பி நிற்கும். "ஆரடா தம்பி பஜூரோவைத் திருப்பி விட்டது?"; வந்தவர் தேடினால், ஒதுக்குப் புறமாக மணியரசன் தலையைச் சொறிந்து கொண்டு நிற்பான். அது மோட்டார் சைக்கிளானால், ஒரு '8' அடித்துவிட்டுத் திரும்பி நிற்கும். உள்ளே போனவர் வெளியே வந்தால், ஏதோ முக்கிய வேலையில் மூழ்கியிருப்பவன் போல தூரத்திலிருந்து ஓரக்கண்ணால் பார்ப்பான். முகாமிற்குப் புதிதாகக் கொண்டுவரப்படும் ஒரு பொருள், துண்டுகளாகப் பிரித்து மேசையில் வைக்கப்பட்டிருக்கும். யாருடைய வேலை இது என்று யாருமே கேட்பதில்லை.

மணியரசன் குறுகுறுத்தவன் தான். குளப்படிக்காரன் தான். ஆனால் எவருடைய கோபத்திற்கும் ஆளாகின்றவனல்ல.

ஒரு தடவை அவனோடு பழகியவர்களுக்கு, இன்னொரு தடவை அவனை நினைவுபடுத்தத் தேவையில்லை. எல்லோருடைய நினைவுகளிலும் நிலைத்துவிடும் வசீகரம் அவனிடமிருந்தது. மிகக் குறுகிய காலத் தொடர்பு சாதன வேலையில், அவன் சேர்த்து வைத்திருந்த முகம் தெரியாத நண்பர்கள் பலர். எந்த நிலையத்தில் தகவல் பரிவர்த்தனை வேலை செய்பவராக இருந்தாலும், அவனோடு கதைக்காமல் அவர்கள் அலைவரிசையை மூடிக் கொண்ட நாட்கள் மிகக் குறைவு. மணியரசா! உனது அன்பின் வீச்சுத் தூரம், தமிழீழத்தின் எல்லையைத் தொட்டிருந்ததடா!

மணியரசனுக்கு ஒரு பொழுது போக்கு, மற்றவர்களைக் கிண்டல் செய்து கொண்டிருப்பது. அவனிருக்குமிடத்தில் வாய்திறக்க, அநேகமானவர்களுக்குப் பயம். ட்ரக் ஓடும் ஐம்பது வயது ஐயாவிலிருந்து, புதிதாக இயக்கத்திற்கு வரும் சின்னப் பையன் வரை -வயது வேறுபாடின்றி -எல்லோருமே அவனுடைய அறுவைக்கு இலக்கு. ஆனாலும், மணியரசா! "இயக்கம் பொம்மர் வாங்கினா, அதை இறக்க எங்களிட்டை ஒரு 'ரன்வே' இருக்கு" என்று, மயிரில்லாத உன் முன் பக்கத் தலை அறுவைக்கு உள்ளாகும் போது கூட, மேல் மயிரைத் தட்டிவிட்டு 'உருமறைப்புச்' செய்துகொண்டு, புன்னகையோடு அந்தக் கிண்டலை ஏற்றுக் கொள்ளும் உனது நட்பின் பண்பு உயர்ந்தது.

* * * *

ஊரிலும், பள்ளிக்கூடத்திலும் 'கனியூட்' என்று செல்லமாக அழைக்கப்பட்ட வேதநாயகம் ராஜரூபன் தான் எங்கள் மணியரசன்.

குடும்பத்தில் கடைசித் தங்கச்சிக்கு நேரே மூத்த இவன், 7வது பிள்ளை.

மணற்காடு றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயத்தில் படிக்கும்போது, அதன் உதைபந்தாட்டக் குழுவொன்றில் சிறந்த விளையாட்டு வீரனாக இருந்ததுடன், அவன் படிப்பிலும் கெட்டிக்காரனாம்.

அப்பா தொழிலுக்குப் போகும் போது, இடைக்கிடை அவரோடு கடலுக்குப் போகிறவன், திறமையான நீச்சல்காரனாகவும் ஆகியிருந்தான்.

1991 இன் நடுப்பகுதியில் இவன் இயக்கத்திற்கு வரும்போது 8 ஆம் வகுப்போடு படிப்பை இடையில் நிறுத்திவிட்டுத்தான் வந்தான்.

அவன், எல்லாத் திறமைகளும் ஒருங்கிணைந்த போராளி. இந்த தேசம் அவனிடமிருந்து பெற்றுக்கொள்ள நிறையவே இருந்தது. அவற்றை வழங்கும் ஆற்றலையும் அவன் கொண்டிருந்தான். ஆனால், ஒரு கரும்புலித் தாக்குதல்தான் அவனுடைய பிரதான குறியாக இருந்தது. கடைசியிலும் அதைத்தான் அவன் செய்தான்.

கடற்புலிகளின் 1 வது பயிற்சி வகுப்பில் பயிற்சி எடுக்கும் போதே பயிற்சிகளில் ஆர்வம் நிறைந்தவனாகவும், பரீட்சைகளில் அதிக புள்ளி பெறுபவனாகவும் திகழ்ந்தான். சிறந்த ஒரு விடுதலை வீரனாகவும் முனைவிட்டான்.

அவனுடைய தெளிவான பேச்சு வன்மையும், விடயங்களைக் கிரகித்துக் கொள்ளும் வேகமும் தான் அவனை தகவல் பரிவர்த்தனை வேலைக்கு ஏற்றவனாக இனம் காட்டின. தகவல் தொடர்புச் சாதனம் கற்பிக்கும் பாடத்திட்டமானது பொதுவாக, 'இவ்வளவு காலப் பயிற்சி' என வரையறுக்கப்பட்டது. ஆனால், மணியரசன் அதனைக் கற்றுக் கொண்டுவிட்ட நாட்களை விரல் மடிப்பிற்குள் அடக்கிவிடலாம்.

இரண்டே வருட கால அவனுடைய போராட்ட வாழ்வின் மிகப் பெரும்பாலான நாட்கள், தொடர்பு சாதனம் இயக்கும் வேலையிலேயே அவனை ஈடுபடுத்தின. அந்தப் பணியின் முக்கியத்துவத்தையும் இன்றியமையாமையையும் அவன் புரிந்துணர்ந்த போதிலும், சண்டைக்குப் போக வேண்டும் என்ற ஆதங்கமே அவனிடம் மேலோங்கியிருந்தது. கங்கை அமரன் வன்னிக்குப் புறப்பட்டால், தானும் வரப்போவதாக நச்சரிப்பான். பிரத்தன் மாஸ்டர் கிளாலிக்கு வெளிக்கிட்டால், தன்னையும் கூட்டிச் செல்லுமாறு அடம்பிடிப்பான். தன்னோடு நிற்கும்போதே, சண்டைக்கு அனுப்பும்படி மணியரசன் தனக்கு எழுதும் கடிதங்களை வாசிக்க வேண்டிய வில்லங்கம் தளபதி சூசைக்கு இருந்தது.

அவனது ஆசைகள் ஓரளவு பூர்த்தியாகி வர -வடமராட்சியிலுள்ள தலைமைத் தளத்தில், பகல் முழுவதும் 'செற்' கதைத்துக் கொண்டிருப்பவன், இரவுகளில் -கிளாலியின் சண்டை முனைகளில் ஒரு எல்.எம்.ஜியுடன் வலம்வரத் துவங்கினான்.

தொடர்ச்சி 11ம் பக்கம் ....

# கடலோடு கரைந்த கடற் கரும்புலிகள்...

வாளியை எடுத்து, வரதனுக்குக் குளிக்க வார்க்கத் தொடங்கினான் அவன். சேரனிடம் இதைச் சொல்லும்போது வரதனின் கண்கள் பனித்திருந்தன.

வரதன் அமைதியானவன். அதிகம் பேசத் தெரியாதவன். கதைகளை விட செயல்களிலேயே அதிக ஈடுபாடும் நம்பிக்கையும் கொண்டவன். "கதைக்கும்போதெல்லாம் இயக்கத்திற்குப் பயன்படக்கூடியதாய் ஏதுங் கதையுங்ககோடா" என்று எங்களுக்குப் புத்தி சொல்பவன். அது, வெளியில் தெரியாமல் தனக்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்த ஓர் எரிமலை. அம்மா, அப்பாவைப் பிரிந்து -உறவுகளைப் பிரிந்து நீண்ட காலம் எங்கு இருக்கின்றார்களோ.....? ஆமிப் பிரச்சினைகளால் ஓடுப்பட்டுத் திரிகின்றார்களோ....? வீட்டுக்கு ஒரு கடிதம் எழுதிப் பார்ப்பம் என்ற ஆவல் வரதனுக்கு எழுந்தது. வரதன் கடிதம் எழுதினான். பதிலுக்காகக் காத்திருந்தான். அடுத்த தரம் எழுதினான்; காத்திருந்தான். பதிலில்லை. மூன்றாம் தரம் -பதிலில்லை. நான்காவது கடிதமும் போனது; பதில் வரவேயில்லை.

இடம்பெயர்ந்து வந்து கிளாலியில் இறங்கிய உறவினர்கள் சிலரை, எதிர்பாராமல் வரதன் சந்திக்க நேர்ந்தது. "ஒரு இரவு ஊருக்குள்ள ஆமி புகுந்து வெட்டியும் சுட்டும் நூற்றுக் கணக்கில சனங்களைக் கொண்டவங்கள்...... தம்பி..... தப்பியோடிவந்த எங்களுக்குள்ள உன்ர வீட்டுக்காரர் வரேல்லை..... என்ன நடந்ததோ....? கடவுளுக்குத்தான் தெரியும்...! வானத்தைப் பார்த்து கைகளை விரித்துச் சொல்லிவிட்டு, ஒரு பெரும் மூச்சோடு அவர்கள் போய்விட்டார்கள்.

காதுகளில் இடியென இறங்கிய செய்திகளால், அவன் துடிந்துப் போனான். ஏற்கனவே அவனுக்குள் வீசிக்கொண்டிருந்த புயல், ஆவேசம் கொண்டெழுந்தது. ஆனாலும், அது ஒரு வதந்தி மட்டுமே என்பது, கடைசிவரை அவனுக்குத் தெரியாமலே போய் விட்டது.

• • •

கிளாலியின் விரிந்த கடல்,
தமிழர்களின் இரத்தமே அலைகளாய் அசையும், இருபது மைல் நீளச் செந்நீர்ப்பரப்பு.

இரத்தப் பசி கொண்டு அலையும் சிங்களப் படை, உயிர் விழுங்கும் துப்பாக்கி வாய்களோடு காத்து நிற்கும் மரண வலயம். அந்த மரண வலயத்திலும் -கடல் அரண்களாய் கடற்புலிகள் காவல் நிற்க, எங்கள் மக்கள் துணிவுடன் பயணிக்கும், சூடா நாட்டுக்கான தனி ஒரு பாதை.

நாகதேவன்துறையில் பொருத்தப்பட்டிருக்கும் சக்தி வாய்ந்த ராடர்களின் திரைகளில், புள்ளிகளாய் அலையும் எங்கள் படகுகளை துல்லியமாக இனங்கண்டு தாக்கி, மூழ்கடிக்க விரைந்து வரும் எதிரிப் படகுகளை, உள்ளங்கை கையைக் கூடப் பார்க்க முடியாத கும்மிருட்டிலும் கூட, கண்களை மட்டுமே நம்பி எதிர்கொண்டு விரட்டி அடிக்கும் சாதனைக் களம்.

எதிரி தடை செய்த வலயத்தை, எதிரிக்குத் தடை செய்து வீர சாதனை படைக்கும் கடற்புலிகளின் போர்த் திறனையும், அதனைப் பிரமாண்டமான ஒரு வளர்ச்சி நிலையை நோக்கி, உயர்த்திச் செல்லும் தேசியத் தலைவர் பிரபாகரனின் முயற்சியையும், ஆற்றலையும் உலக அரங்கில் பறைசாற்றிக் கொண்டிருந்த போர் முனை.

கிளாலிக் கடலில் மக்கள் போக்குவரத்துச் செய்யத் துவங்கிய நாளில் இருந்து அங்கு காவல் பணியாற்றிக் கொண்டிருக்கும் கடற்புலிகளின் அணி, வரதனையும் மதனையும் கொண்டிருந்தது. அந்தக் கடற்களத்தில், புலிகள் எதிரியைச் சந்தித்த ஒவ்வொரு சண்டையிலும், இவர்களின் கைகளில் இருந்து துப்பாக்கிகள் கனன்றிருக்கின்றன.

விடிகாலைகளில், பயணம் போன எம்மக்கள் செத்த பிணங்களாய்க் கரையொதுங்கிய போதெல்லாம், அவர்களுக்குள் ஒரு நெருப்பு கொழுந்து விட்டெரியும்.

அவர்கள், துணிகரமான சண்டைக்காரர்கள். அவர்களுடைய வண்டிகளில், எதிரியின் படகுகளை மூக்குக்கு நேரே எதிர்கொண்டு அவனைத் திகைப்பில் ஆழ்த்துவார்கள். கண்ணைக் கட்டி இருளில் விட்டதுபோன்ற இருட்டிலும், எதிரியின் படகுகளை இனம் கண்டு -நல்ல வியூகங்களில் தளம்பலின்றி வண்டியைச் செலுத்தி -அவனைத் தாக்கித் திணறடிப்பார்கள். அந்த மயிர்க்கூச்செறியும் கணங்களில் எதிரி தலைதெறிக்க ஓட்டமெடுப்பான். அந்த நேரங்களில் அவர்கள் சொல்வார்கள்; "இப்ப மட்டும் ஒரு சக்கை வண்டி இருக்குமெண்டால், இவங்களின்ரை கதை இதிலேயே முடியும்."

அவர்கள் ஒரு கரும்புலித் தாக்குதலுக்காகக் காத்திருந்தார்கள். "எங்களின் மக்களை கொன்றொழித்தவர்களை இதே கடலில், வைத்துக் கொன்றொழிக்க வேண்டும்" என்ற வீர சபதம், அவர்களின் இதயங்களில் முழங்கிக் கொண்டிருந்தது. கரும்புலித் தாக்குதலை நடாத்தும் இரவை, அவர்கள் ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்திருந்தார்கள்.

"ஏன் கரும்புலியாகப் போகின்றீர்கள்?" என்பதற்கு, ஒரு தத்துவார்த்த விளக்கத்தை அளிக்கக் கூடிய அறிவை அவர்கள் பெற்றிருக்கவில்லையாயினும், அதன் தேவையை -அதன் முக்கியத்துவத்தை -அதன் பலத்தை -உளப்பூர்வமாகவும் தெளிவாகவும் உணர்ந்து கொண்டவர்களாக அவர்கள் இருந்தார்கள்.

வரதன் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பான். அருகில் போகின்ற நண்பனிடம், "தலைவர் சொன்னதையே நான் திரும்பத் திரும்ப நினைச்சுக் கொண்டிருக்கிறன். எனது சிந்தனையெல்லாம் அதிலேயே இருக்குது. அந்த ஒரு நொடிப் பொழுதுக்காக நான் எவ்வளவு காலமும் காத்துக் கொண்டிருப்பன். என்றோ ஒரு நாள் கிளாலிக் கடலில் ஒரு 'வோட்டர் ஜெட்' நொருங்கும்" என்பான்.

மதனும் அப்படித்தான். அவன் அடிக்கடி சொல்லுவான், "எங்கட எவ்வளவு சனங்களின்ரை இரத்தம் இந்தத் தண்ணியோடை கலந்தது. இதற்கெல்லாம் ஒரு நாளைக்குப் பாடம் படிப்பிச்சே ஆகோணும். அதை நான் சாதிச்சே தீருவன். அவனுகளையும் இந்தக் கடலிலேயே அழிக்க வேணும்."

மதன் மட்டக்களப்பைச் சேர்ந்தவன். சனிவாசன் சிவகுமார் என்பது இயற்பெயர். 1975 ஆம் ஆண்டு, செப்டெம்பர் திங்கள் ஏழாம் நாள் அந்த வீர மைந்தனைப் பெற்றாள் ஒரு வீரத்தாய். குடும்பத்தில் மூன்று அண்ணன்களுக்கும், ஒரு தங்கைக்கும் இடையில் அவன். மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் 9 ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்போது 1989 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஒரு நாள், பள்ளிக்கூடத்திற்கென்று புறப்பட்டுப் போனவன் திரும்பி வரவில்லை; "இயக்கத்துக்குத்தான் போயிருப்பான்...." என்ற வீட்டிலுள்ளவர்களின் ஊகிப்பும் பிழைத்துவிடவில்லை.

• • • •

கிளாலியின் கடற்போர் முனை.

ஏறக்குறைய 60 நாட்கள் அலைகள் போல அசைந்து கடந்துவிட்டன.

அந்த உயரிய சாதனையை நிகழ்த்த அவர்கள் கடலுக்குப் போய்த் திரும்பி வரவேண்டியிருந்தது. நாட் செல்லச் செல்ல அவர்களுடைய உறுதி இறுகிக் கொண்டு போனதேயன்றி, இளகியதில்லை.

ஒவ்வொரு தடவையும் சண்டை தொடங்கும். துப்பாக்கிக் குழாய்கள் சிவக்க எங்களது படகுகள் பகைவனை எதிர்கொள்ளும். 'சக்கை' வண்டி அவனை மின்னலென நெருங்கும். எதிரி ஓட்டமெடுப்பான். சக்கை வண்டி கலைக்க இடைவெளி குறுகும். எதிரியின் வேகம் கூடும். அதிகரித்த வேகத்தோடு சக்கை வண்டி அண்மிக்க, ஒரு அடி உயர நீரில் ஓடக்கூடிய தன் நவீன படகை எதிரி ஆழம் குறைந்த நீர்ப்பரப்பினூடு செலுத்துவான். சக்கைப் படகுகள் தரை தட்டும். தொடர்ந்தும் கலைக்க முடியாமல் கரும்புலிகள் திரும்ப வேண்டியிருக்கும்.

மறுநாள் -

முகாமின் ஒரு மூலையில் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு இருப்பார்கள். இரவு தங்களால் இடிக்க முடியாமல் போய்விட்டதே என்பதற்காக அவர்கள் கவலைப்பட்டுக்கொண்டிருப்பார்கள். 61 நாட்களும் இப்படித்தான் நகர்ந்தன.

• • • •

25-08-1993
வழமையான இரவு.
நிலவு உலா வராத இருண்ட வானம்.
சிலிர்ப்பூட்டும் குளிர்.
உடலுக்கு அசதியைத் தந்தாலும், உள்ளத்துக்கு உற்சாகமூட்டும் உவர்க்காற்று.

கடற்புலிகள் காவல் உலா வர மக்களின் பயணம் துவங்கிவிட்டது.

சக்கை நிரப்பிய 'புலேந்திரன்', 'குமரப்பா'வில் மதனும், வரதனும் தயாராக இருந்தார்கள்.

கடந்து போனவைகளைப் போல அல்லாமல் இந்த 62வது நாளின் இரவில், அவர்களின் முகங்களில் நம்பிக்கையின் தெறிப்பு இனம்புரியாத பூரிப்பு.

அருகில் நின்ற கண்ணாளனிடம் குப்பியைக் கழற்றிக் கொடுத்துவிட்டு மதன் சொன்னான், "இன்டைக்கு இடிச்சே தீருவன். திரும்பி வரமாட்டன்."

நேரம் நடு இரவைத் தாண்டியிருந்தது. நாகதேவன்துறைத் தளத்திலிருந்து அலைகளைக் கிழித்துக்கொண்டு முன்னேறினான் எதிரி. இன்று அவனது தாக்குதல் வடிவம் வித்தியாசமானதாக இருந்தது.

ஒவ்வொரு தடவையும் மாறுபட்டதாக இருக்கின்ற போதிலும், இன்று அவன் அமைத்து வந்த வியூகம் புதுவிதமானது. இரண்டு அணிகள், ஒன்று ஒருபுறத்தில் புலிகளைத் தடுக்க, மற்றையது மறுபுறத்தில் மக்களைத் தாக்கும்.

ஆனால், பகைவன் சற்றும் எதிர்பாராத விதமாக அவனை இருமுனைகளிலும் எதிர்கொண்டனர் கடற்புலிகள், துப்பாக்கி முனைகள் தீ உமிழ வானம் விழாக் கோலமானது.

சண்டை உக்கிரமடைந்து கொண்டிருந்த ஒரு கட்டத்தில், காத்திருந்த 'புலேந்திரன்' படகை 'வோக்கி' அழைத்தது. மதன் ஆவலோடு பதில் கொடுத்து, கட்டளைக்குக் காது கொடுத்தான்.

மக்களைத் தாக்கவந்த எதிரி, புலிகளிடம் சிக்கிப் போயுள்ள முதலாவது சண்டை முனையில், ஏற்கனவே விளங்கப்படுத்தப்பட்டிருந்த தாக்குதல் திட்டத்தின்படி -'வோட்டர் ஜெட்' படகொன்றைத் தாக்குமாறு வோக்கி கூறியது.

சுற்றியிருந்த தோழர்கள் கண்கலங்க, சிரித்த முகத்தோடு மதன் புறப்பட்டான். மின்னல் கீற்றென நெருங்கிய கரும்புலிப் படகைக் கண்டு எதிரி தப்பியோட முயல, அதற்கு அவகாசமில்லாமல், மதன் அதன் மையப் பகுதியோடு மோதினான். பிரகாசித்தெழுந்த ஒளி வெள்ளம் மறைந்து, இருளோடு கரும்புகை கரைந்து கொண்டிருக்கும்போது, இரண்டாகப் பிளந்து மூழ்கிக் கொண்டிருந்த 'P 115' இலக்க 'வோட்டர் ஜெட்'டிலிருந்து புலிகள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

தான் நேசித்த கடலோடும்...... காற்றோடும்...... எங்கள் மதனும்...... அவனது 'புலேந்திர'னும்.....

அந்தக் கடற்களம் நீண்டுகொண்டிருந்தது. கடற்புலிகள் கடலில் சந்தித்த முதலாவது பெருஞ்சமர் அதுவாகத்தான் இருக்க முடியும்.

புலிகளைத் தாக்க வந்த அணியை புலிகள் தாக்கிக் கொண்டிருந்த இரண்டாவது சண்டை முனையில் இருந்து 'குமரப்பா' படகிற்கு அழைப்பு வந்தது. காத்துக் கொண்டிருந்த வரதன், களத்திற்கு விரைந்தான்.


புலிகளின் சண்டைப் படகுகளால் வளைக்கப்பட்ட நிலையில், தப்ப வழியின்றி தளத்திற்குத் தகவல் அனுப்பிவிட்டு, உதவி வரும்வரை சண்டையிடத் தீர்மானித்துவிட்ட ஒரு வோட்டர் ஜெட் படகு, வரதனின் இலக்கு. 'வோக்கி' அவனுக்குத் தாக்குதல் வழிமுறையை வழங்கியது. உதவி கிடைக்குமுன் அதனை உடைக்க வேண்டும்.

இருள், ஆளை ஆள் பார்க்க முடியாத இருள். வளைத்து நிற்கும் புலிகளின் படகுகளை அவதானித்து -விலகி ஓடி, 'வோட்டர் ஜெட்'டை சரியாக இனம்கண்டு -அது அவனுடையதுதான் என்பதை உறுதிப்படுத்தி இடிக்க வேண்டும். தவறுதலாக எங்களுக்குள் முட்டுப்பட்டாலோ விளைவு விபரீதமானதாக மாறிவிடும்.

சரியான இலக்கை நோக்கி வரதன் நெருங்கினான் -அதிகரித்த வேகத்தோடு. திகைத்த எதிரி எதுவுமே செய்ய முடியாமல் நிற்க, அடுத்த கணப்பொழுதில்......! அந்தக் கண்ணிமைக்கும் நேரத்திற்குள்......! எதிரியின் படகு.... எங்கள் அன்பு வரதனும், 'குமரப்பா'வும் தான்......

நாகதேவன் துறையிலிருந்த கடற்படைத் தளத்தில் தகவல் தொடர்பு சாதனம், 'P 121' என்ற தங்கள் போர்ப்படகை அழைத்துக் கொண்டிருக்க மூழ்கிக் கொண்டிருந்த அந்தப் படகில் இருந்து, கடற்புலி வீரர்கள் ஆயுதங்களை எடுத்து முடித்து விட்டார்கள்.

ஒரே பாயில் படுத்து, ஒரே கோப்பையில் சாப்பிட்டு, ஆளுக்காள் தண்ணீர் ஊற்றி ஊத்தை தேய்த்து ஒன்றாகவே குளித்து - ஒரே இலட்சியத்தோடு வாழ்ந்த அந்த உயிர் நண்பர்கள் கிளாலிக் கடலில் நடந்த ஒவ்வொரு சண்டையின்போதும், ஒன்றாகவே நின்று, சிங்களப் பிணந்தின்னிகளை நெருப்பெனச் சுட்டெரித்தவர்கள். சாகும்போது கூட ஒன்றாகவே போனார்கள். எங்களுக்காக...... மக்களுக்காக......! ■




## கடலன்னையின்...

இறுதிக் காலத்தில், முழுமையாக கிளாலியில் மக்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொழுதுகளிலும், ஒரு கரும்புலித் தாக்குதலே மணியரசனுடைய பிரதான குறியாக இருந்தது. எங்களுக்குள் சுழன்று திரிந்த அந்த இனிய நண்பன், அதைத்தான் செய்து முடித்தான்.
அவனுடைய கடைசி நாட்களில் அவன் மிகுந்த உற்சாகமாக இருந்தான்.

தனது முகம் தெரியாத நண்பர்களிடம் வானலைகளினூடாக விடை பெற்றான். அந்தத் தொடர்பு சாதனத்திடமிருந்தும் விடை பெற்றான்.

கிளாலிக் கடலில், சிதைந்து போன நிலையிலும் -மதன் அதிசயமாய் மிதந்து வந்த போது, நாங்கள் பக்குவமாய் எடுத்து வந்து துயிலுமில்லத்தில் விதைக்கையில், கண்ணீரோடு மதனுக்கு மண் போட்டான். அந்த நேரத்தில் எனக்கு மண் போடும் பாக்கியம் ஒருவருக்கும் கிடைக்காது என்று நினைத்திருப்பானோ....?

தோரணம் கட்டி - பந்தல் போட்டு -மதனுக்கும் வரதனுக்கும் அஞ்சலி செய்தபோது வீதி வீதியாகத் திரிந்து பார்த்தான். இன்னும் நாலு நாளில் தனக்கும் இப்படித்தான் செய்வினம் என்று நினைத்திருப்பானோ......?

இப்போது அவன் போய் விட்டான். எங்களால் எட்ட முடியாத தொலைவுக்கு. எங்களைக் கிண்டல் செய்து கொண்டிருக்க அந்த அறுவைக்காரன் இப்போது இல்லை. இயக்கம் 'பொம்மர்' வாங்கினால் இறக்கி ஓட அந்த 'ரன்வே'யும் இப்போது இல்லை. ■

நன்றி:விடுதலைப்புலிகள்'

# "எழும்பு என்று யாரும் சொல்லாது - குந்த ஒரு குடிநிலம் வேண்டுமே"



எதிர்பார்த்தது போலவே நிகழ்ந்துவிட்டது. இவ்வருடம் மே மாதம் ஜேர்மனியில் 3 துருக்கிய பச்சிளம் பாலகரும், இரு துருக்கிய பெண்களும் தீ மூட்டி எரிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட போது அடுத்து தமிழீழத் தமிழர்கள் இவ்வன்முறைகட்குப் பலியாகக் கூடுமோ என்கிற அச்சம் பரவலாக எழுந்தது. ஏனென்றால், மிக நீண்ட காலமாக மிகக் கூடிய தொகையினராக வாழும் துருக்கியருக்கே இக்கதி என்றால், தமிழரின் கதி என்னாகுமோ என்கிற எண்ணம் தோன்றியது. இப்போது, மண்டை தீவைச் சேர்ந்த ராசராசேசுவரலிங்கம், அவர் மனைவி, இரு பிள்ளைகள் வீட்டோடு எரியூட்டப்பட்டுக் கொல்லப்பட்டு விட்டனர் என்றும், அதற்கு முன்னர் சுஜிதா புவனேஸ்வரன் என்கிற 13 வயதுச் சிறுமி, கடத்தப்பட்டு கொலையானாள் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. இச்சம்பவங்கள் ஜேர்மனியில் மட்டுமன்றி அண்மைக் காலமாக ஐரோப்பிய நாடுகள் எங்கும் வளர்ந்து வரும் நவீன இனவாதப் போக்கின் தன்மையை விளக்கி நிற்கின்றன. இனிமேல் வெளிநாட்டவர் ஐரோப்பிய நாடுகளில் படப்போகும் துன்பங்கள், அடையப்போகும் அவலங்களைப் புலப்படுத்தியும் நிற்கின்றன. 35 வருடங்களுக்கு மேலாக ஜேர்மனியில் உழைக்கும் துருக்கியர் மேல் நாளாந்தம் தொடுக்கப்படும் தாக்குதல்கள்; பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற முன்னணி ஐரோப்பிய நாடுகளில் வெளிநாட்டவர்மேல் பரவிவரும் வெறுப்பு, கசப்பு, காழ்ப்புணர்ச்சிகள்; பரவிவரும் இனவாத வன்முறைகளை தடுப்பதற்குப் பதிலாக தத்தம் நாடுகளுக்கு வருவோரைத் தடுக்கும் வகையில் புதிய சட்டங்கள் இந்நாடுகளால் இயற்றப்படல் என்பனவே இன்றைய ஒழுங்காகி விட்டன.

இப்புதிய தோற்றப்பாட்டின் முழுப் பரிமாணத்தையும் ஜேர்மனியிலேயே நாம் தெளிவாகக் காணமுடியும். இரண்டாம் உலகப் போரின் பின்னர் தண்டனையாகத் துண்டாடப்பட்ட ஜேர்மனியர் மத்தியில் தமது தேசியத் தன்மை சிதைக்கப்பட்டதாகத் தாம் மட்டுமே ஐரோப்பாவில் ஒரு நாடாக இருக்கும் தன்மையை இழந்ததாகக் கருதப்படும் மனநிலையை முன்னர் பயன்படுத்தி வெற்றி பெறமுடியாத நவ நாசிக்குழுக்கள் இப்போது அதிகரித்த செல்வாக்கினைப் பெறத் தொடங்கியிருப்பதே அதிர்ச்சியூட்டும் நிலையாகின்றது. முன்னர் கிழக்கு ஜேர்மனியில் பொதுவுடமைக் கட்சி ஆட்சியில் இந் நாசிக் கருத்துக்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டன. அல்லது மறைக்கப்பட்டன. மேற்கிலோ அப்போது வளர்ந்து வந்த பொருளாதாரச் செழிப்பை அனுபவித்த புதிய வர்க்கம் இப்பழைய கனவுகளை மறக்க முயன்றது. ஆனால், இப்போது நிலை, மாறிவிட்டது. கிழக்கும் மேற்கும் ஒன்றாகிவிட்டன. கிழக்கு ஜேர்மனியர் எதிர்பார்த்ததுபோல அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. செல்வச் செழிப்புள்ள வாழ்வு கிட்டவில்லை. இன்றும் 40 வீதமான உழைக்கும் வர்க்கத்தினர் வேலையற்று உள்ளனர். அது போலவே இன்று ஐரோப்பாவில் நிலவும் பொருளாதார மந்தம் ஜேர்மனியை முழுமையாகப் பாதிப்பதாய் நிகழ்காலப் பின்னடைவுகளை, இறந்தகாலக் கனவுகளைப் புதுப்பிப்பதன் மூலம், மாற்றீடு செய்யப்படும் முயற்சி செல்வாக்குப் பெறத் தொடங்குகிறது. எனவே ஜேர்மனிய வரலாற்றின் மாபெரும் கறையாகக் கருதப்படும் கிட்லரின் மூன்றாம் குடியரசுக் கட்டக் காலம் (Third Reich 1933 -45) இவர்கட்குப் பொற்காலமாகிறது. அக்கால கட்ட சுவஸ்திகா சின்னம், கிட்லரின் கட்சியின் 'வெளிநாட்டவரே வெளியேறுங்கள்' என்கிற யூதர் தொடர்பான கீதம், கிட்லர் பாணியிலான வணக்கமுறை இவர்களால் வரிக்கப்பட்டது மட்டுமன்றி இழந்துபோன போலந்து, ஆஸ்திரியாப் பகுதிகள் தொடர்பாகவும் கனவுகள் விரிகின்றன. இன்று இத்தகைய நவ நாசிகட்கு முழுமையாக ஜேர்மனியக் காவல்துறையினர் துணை நிற்பதும், இராணுவத்துக்குள்ளே இவர்கட்கு ஆதரவு பெருகி வருவதும் ஒன்றும் இரகசியமல்ல.

எனவே, இப்போது இத்தகைய தோல் தலையர் எனப்படும் மொட்டையடித்த இந் நவ நாசிக் குழுக்கள் எப்போதும் குடிவெறியில், கையில் மோசமான ஆயுதங்களோடு, குறிப்பாக துருக்கியர் மேல் தாக்குதல் தொடுப்பது இன்று நாளாந்த நிகழ்ச்சியாகி விட்டது. இன்று ஜேர்மனியின் மொத்த குடித்தொகையான 7 கோடி 70 இலட்சம் பேரில், 70 இலட்சம் பேர் வெளிநாட்டவராவர். இதிலும் 18 இலட்சம் பேர் துருக்கியராவர். இத்துருக்கியர் கதை வித்தியாசமானது. 1950 களின் பிற்பகுதிகளில் ஜேர்மனிக்கும் துருக்கிக்கும் ஏற்பட்ட உடன்பாடு ஒன்றின்படியே 'விருந்தாளித் தொழிலாளர்களாக' இவர்கள் ஜேர்மனி சென்ற ஆரம்பத்தில், ஜேர்மனியில் மிகக் கடுமையான உடல் உழைப்புப் பணிகள் யாவற்றையும் -தெருக் கூட்டுவதில் இருந்து சுரங்கங்களில் நிலக்கரி தோண்டுவது வரை செய்தனர். இன்று ஒரு புதிய துருக்கிய இளம் தலைமுறை உருவாகிவிட்ட நிலையில் இவர்கள் உயர் கல்வி கூடப் பெற உரிமை அற்று வாழ்கின்றனர். மொத்தக் குடித்தொகையில் 3 வீதமாக இருந்தபோதிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9 வீதத்தையும், வரி வருமானத்தில் 7 வீதத்தையும் அளிக்கும் இவர்கள் பங்கு எவ்வகையிலும் குறைத்து மதிப்பிட முடியாதது. ஆனால் இவையெல்லாம் இன்று கணக்கில் எடுக்கப்படவில்லை.

இத்தகைய மக்களை விட தனது ஜேர்மனிய இன வழித் தொடர்புடைய ஐரோப்பியருக்கே மிக முன்னுரிமை கொடுக்க ஜேர்மனி விரும்புகின்றது. கடந்த ஒன்றரை வருடமாக ஜேர்மனியில் 10 இலட்சம் ஐரோப்பிய அகதிகள் வந்து குவிந்துள்ளனர். இவர்களில் 2 இலட்சம் பேர் குரோசியர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கே இன்னொரு உண்மையும் சுட்டப்பட வேண்டும். அண்மைக் காலத்தில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சியின் பின் யூகோசிலேவியாவின் சீர்குலைவின் பின், ஜேர்மனி மிகக் கூடிய நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டது என்னவோ உண்மைதான். இவ்வாறான ஐரோப்பிய அகதிகளின் 79 வீதமானோரை ஜேர்மனியே தாங்கிக் கொண்டதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மூன்று வருடங்களில் மட்டும் மொத்தமாக 30 இலட்சம் வெளிநாட்டவர் ஜேர்மனியுள் புகுந்துவிட்டனர். எனவே இப்போது முன்னுரிமை என்றும், பொருளாதாரச் சுமையையும் காரணம் காட்டி ஜேர்மனி தன் நலத்தைப் பேண சட்டங்கள் இயற்றத் தொடங்கிவிட்டது. தனது மொத்த உற்பத்தி 2 வீதத்தால் குறைந்துவிட்டதாகவும் வேலையின்மை மேற்கில் 8 வீதமாக, கிழக்கில் 14 வீதத்திற்கு மேலாக அதிகரிக்கின்றது என்றும், ஜேர்மனி அலறுகின்றது. ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இவ்வாறே கூறுகின்றன.

ஆனால், இங்கே ஒரு மிகக் கசப்பான உண்மை ஒன்று மறைந்திருக்கின்றது. அதுதான் இழிவான இனவாத நிற வேற்றுமையைப் பின்பற்றும் போக்கு. பொருளாதாரச் சுமையே காரணம் என்றால், ஏன் வெள்ளை நிறத்தவர் அல்லாதோரே தாக்கப்படுகின்றனர் என்கின்ற கேள்வி எழுகின்றது. ஜேர்மனியிலோ, பிரித்தானியாவிலோ, பிரான்சிலோ அல்லது வேறெங்கிலோ ஒரு குரோசியன், போலந்துக்காரன், கங்கேரியன் தாக்கப்படவேயில்லையே. ஆனால் ஆசியர், அரபுக்கள், ஆபிரிக்க, கரிபியன் பகுதியினரே தொடர்ந்தும் தாக்கப்படுகின்றனர்.

**தமிழீழத்திலிருந்து**
**பாலகுமாரன்**

எனவே, இப்போது முகத்திரைகள் கிழிந்துவிட்டன. ஜேர்மனியின் பெருமைக்குரிய 1949 ஆம் ஆண்டு யாப்பில் மனிதத்தின் மேன்மையை உணர்த்தும், மனித உரிமைக்கான ஜேர்மனிய மக்களின் மதிப்பினைக் காட்டும் வரிகட்கு ஏற்ப, ஜேர்மனிய அடிப்படை சட்டவிதிகள் 16 வது பிரிவு, தஞ்சம் கோருவதற்கான தனிநபர் உரிமை காக்கப்படும் எனக்கூறியது. ஆனால், 1993 மே மாதம் வரைதான் இவ்வுரிமை பேணப்பட்டது. இப்பொழுது பெருத்த ஆதரவோடு நிறைவேற்றப்பட்ட சட்ட மாற்றம் அடைக்கலம் கோருவோரை திருப்பி அனுப்பும் உரிமையை அரசுக்கு வழங்கிவிட்டது. முன்னர் ஜேர்மனிய எல்லைகளைக் கள்ளமாகக் கடக்கும் எவரும் தஞ்சம், அடைக்கலம் என்கிற வார்த்தைகளை உச்சரிப்பதன் மூலம் தமது வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படும் வரை ஜேர்மனியில் தங்கியிருக்க முடிந்தது. இனி அது முடியாது. எனவே 16ம் பிரிவிற்கான மாற்றம் ஜேர்மனிய நவ நாசிகளின் வெற்றியாகிவிட்டது. இதனால், தாக்குதல்கள் அதிகரிக்குமேயன்றிக் குறையப் போவதில்லை. தேர்தல், பதவி போன்றவற்றிலேயே கவனம் செலுத்தும் ஜேர்மனிய அரசு, இரு நாசிக் குழுக்களை மட்டுமே தடை செய்தது. தடையும் பெருத்த பயனளிக்கவில்லை. ஏனென்றால் நாசிகளின் கருத்தையே மறைமுகமாகப் பிரதிபலிக்கும் குடியரசுக் கட்சியின் உதவி 1994 தேர்தலில் தனக்கு தேவைப்படும் என ஜேர்மனிய அதிபர் கோல் கருதுவது வெளிப்படையானது.

இது ஜேர்மனிக்குரிய கதை மட்டுமல்ல. பிரான்சிலும் இதே நிலை. ஒப்பீட்டு அளவில் பார்க்கும்பொழுது பிரான்ஸ் வெளிநாட்டவர்களுக்கு கூடிய பாதுகாப்பான பகுதியாக இதுவரை காலமும் கருதப்பட்டது. ஆனால், தற்போது பதவிக்கு வந்துள்ள புதிய கூட்டணி அரசு, அதற்கும் முற்றுப் புள்ளி வைக்கப் போகின்றது. ஏனெனில், இக்கட்சியின் வெற்றிக்கு வெளிநாட்டவரைக் கட்டுப்படுத்துவோம் என்ற கோசம் பெரிதும் காரணமாக இருந்தது. இப்போது பிரஞ்சுத் தேசியவாதம் என்பது அடிப்படையில் தெளிவாக மீள் வரையறுக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கை வலுப்பெறுகின்றது. எனவே இப்போது வெளிநாட்டுத் தம்பதிகளுக்கு பிரான்சில் பிறக்கும் பிள்ளைகள் பிரஞ்சுக் குடியுரிமை பெறுவதைக் கட்டுப்படுத்தும் சட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. பிரான்சியரும் குடிபுகுவோர் விடயத்தில் கவலைப்படுவது, இனவாதம் பேசும் தேசிய முன்னணிக்கு 12.5 வீத வாக்குகளை அவர்கள் அளித்ததன் மூலம் வெளிப்படுத்திவிட்டனர். இக்கட்சியின் தலைவரான லீபென் இன் (Jeen marie Lepen) இனவெறிப் பேச்சுக்களின் காரம் தாங்கமுடியாதவை. இப்போது சிராக் போன்ற பிரஞ்சுத் தலைவர்களே வெளிநாட்டவர் தொல்லை குறித்து மட்டுமன்றி, அவர்கள் சத்தம், மணம் பற்றியும் இழிவாகப் பேசுகின்றனர். இப்புதிய அரசின் ஆட்சியில் காவல்துறைக் கண்காணிப்பில் இருந்த 4 கறுப்பின வாலிபர்கள் கொல்லப்பட்டது. எதிர்காலத்திற்கு ஓர் முன்னோடிச் சம்பவமாகிவிட்டது. எனவே இப்போது பிரான்சின் உயர் விழுமியங்களாகக் கூறப்படும் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்பன புதைகுழிக்குள் போய்விட்டதாக ஆய்வாளர் ஒருவர் கூறுகின்றார்.

இவை எல்லாவற்றையும் விட மிக வேறுபட்ட நிலையை நாம் பிரித்தானியாவில் காணலாம். அங்குள்ள சமூக நிலையை உற்று நோக்குவோர் மிக அதிர்ச்சி அடைவர். இரு வேறுபட்ட சமூகங்கள் அங்குள்ளன. அங்கு கறுப்பின சமூகம் தனித்தும், தாழ்வடைந்தும் வெள்ளையர் சமூகத்தில் இருந்து தனியாக இருப்பதைக் காணலாம். ஜேர்மனியைப் போலல்லாது பிரித்தானியாவில் உள்ள பெரும்பான்மை வெளிநாட்டவர், முன்னாள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் -இன்னாள் பொது நலவாய நாடுகளைச் சேர்ந்தவர்கள். இதனால், வாக்களிப்பது உட்பட சகல அரசியல் உரிமைகளுக்கும் உரித்துடையவர்; பிரசா உரிமையை உடையவர். ஆனால், உண்மை நிலை வேறு. இத்தகைய மக்களை தம்மோடு சமமாக ஒன்றாகக் கருத பிரித்தானிய சமூக அமைப்பு இடம்கொடுக்கவில்லை. பிரித்தானிய சமூகம் மாறுபாடாத உயர்குடித் தன்மைகளை இறுக்கமாகப் பின்பற்றும் சமூகம். ஏற்றத்தாழ்வுகள் தாபன மயப்படுத்தப்பட்டுள்ளன. எனவே இன்று வெள்ளை இன அலுவலரால் அவர்களது அதே உரிமைகள் உள்ள ஆசிய, ஆபிரிக்க, கரிபியன் நாட்டவர் அவமானப்படுத்தப்படுவது, தாக்கப்படுவது நாளாந்த நிகழ்வாகிவிட்டது. இவர்கள் இழிந்தவர் என்ற எண்ணம் அங்கு சமூகப் பண்பாக உள்ளது. காவல்துறை [illegible] சமாகவே நடக்கின்றது. சமீபத்திய நீதிமன்றத் தீர்ப்புகள் வெளிநாட்டவரைக் கடுமையாகப் பாதிக்கின்றன. எனவே இங்கும் இழிவுபடுத்தப்படுவதே எம்மக்கட்கான அடையாளமாகிவிட்டது.

இவற்றினை எல்லாம் பார்க்கும்பொழுது, ஒரு விடயம் மட்டும் மிகத் தெளிவாகின்றது. சரியோ பிழையோ ஐரோப்பிய நாட்டவர் தமது நல்வாழ்வுக்காக மட்டுமே -தமது இருப்பை உறுதிப்படுத்த மட்டுமே விரும்பிச் செயற்படுவது தெளிவாகின்றது. இத்தகைய நிலையில் எம்மவர் அங்கு சென்றவர் என்ன செய்யப் போகின்றார்கள்? தமது உரிமைக்காக அங்கு போராடப் போகின்றார்களா? அல்லது வேறு எவராவது தமக்காகவும் சேர்ந்து போராடுவார்கள் என எண்ணி இருக்கப் போகின்றார்களா? எனினும் சிக்கல் இவர்கட்கு குந்த ஒரு குடிநிலம் வேண்டும் என இவர்கள் என்று உணர்வார்கள்? ("நிலம் வேண்டுமே நிலம் எனக்கு, உனக்கு, அவனுக்கு, நம் எல்லோர்க்கும் நிலம் -தாய் நிலம்". கருணாகரன் கவிதை)

■ நன்றி : ஈழநாதம்

---

### 3000 பனம் விதை நடுகை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினால், யாழ். கல்லுண்டாய் வெளிப்பகுதியில் அண்மையில் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளது. இப் பகுதி வீதியோரங்களில் யாழ்ப்பாணப் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் 3000 பனை விதைகளையும், கொத்துக்கட்டி மயானப் பகுதியில் மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் 3000 பனை விதைகளையும் நாட்டினர். ■

# சோமாலியா: ஜெனரல் அயிடீட் கொலையாளியா? கதாநாயகனா?

'உலகின் மிகவும் வேண்டப்படுகின்றவன்' என்று நாமம் சூட்டப்பட்டுள்ள சோமாலியாவின் ஜெனரல் முகமட் பாரா அயிடீட்டைக் கைது செய்வதே, ஐக்கிய நாடுகள் சபையின் தலையாய பணியாக அண்மைக் காலம் வரை கருதப்பட்டு வந்தது.

அயிடீட் கைது செய்யப்பட்டால், மனித இனத்துக்கெதிராக குற்றமிழைத்தான் என விசாரணைக் குட்படக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் படைகள் அநேகமாக தினமும் சோமாலியாவின் ஆயுதக் குழுக்களுடன் மோதலில் ஈடுபட்டு வந்திருந்தாலும், இக் குழுக்களின் வதிவிடங்கள் மீதும், ஆயுதக் களஞ்சியங்கள் மீதும் பல டசின் தடவைகள் தாக்குதல்களை நடாத்தியிருந்தாலும் அவர்களால் இதுவரை அயிடீட்டைக் கைது செய்ய முடியவில்லை.

வெற்றி வீரன் ஜோர்ஜ் புஸ்சினால் பெரும் ஆரவாரத்துடன், கனரக வாகனங்கள், ஆயுதங்களுடன் இறக்கப்பட்ட இப் பெருந்தொகையான வீரர்களை எதிர்கொள்ள சோமாலியாவின் எந்தவொரு ஆயுதக் குழுவிற்கும் துணிவிருக்கவில்லை. தம்மிடமிருந்த சக்திவாய்ந்த ஆயுதங்களை கிராமப்புற மறைவிடங்களில் தக்க வைத்துக் கொண்ட இவர்கள், உணவு விநியோகம் உள்ளூர் மட்டங்களுக்குச் செல்வதற்கு, முன்பு போல் தடையாக நிற்கவும் இல்லை. சகலதும் சுமூகமாக செல்வதை உணர்ந்த அமெரிக்கா தனது துருப்பினர் தொகையை 4,800 ஆகக் குறைத்துக் கொண்டது. அமெரிக்கத் துருப்பினரின் வெற்றிடத்தை நிரப்ப பல்வேறு நாடுகளிலிருந்தும் துருப்புக்கள் வரவழைக்கப்பட்டாலும், அவை அமெரிக்கத் துருப்புக்களின் பலத்துக்கு ஈடு கொடுப்பதாக இருக்கவில்லை.

இதேவேளை ஜெனரல் அயிடீட், வியாளராகவும், ஆயுத விநியோகஸ்தராகவும், உயர் ஆலோசகர்களில் ஒருவராகவும் இவர் விளங்கி வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றியினால் உந்தப்பட்ட அமெரிக்கத் துருப்புக்கள் ஐப்பசி 4 ஆம் திகதி மீண்டும் தாக்குதலில் ஈடுபட்டவராயினும் இம்முறை பலத்த உயிரிழப்புக்களுடன் தோல்வியைத் தழுவிக்கொண்டனர். RPG இனால் தாக்கப்பட்ட உலங்குவானூர்திகள் தரையில் மோதியதில் 12 அமெரிக்கத் துருப்புக்களும், ஒரு மலேசியத் துருப்பினனும் கொல்லப்பட்டனர். மேலும் 32 வயதுடைய மைக்கல் டுரோண்ட் என்பவர் உயிருடன் பிடிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் அதிசயிக்கத்தக்க வகையில் சோமாலிய நிகழ்வுகளின் போக்கை மாற்றியமைத்து விட்டது. கொல்லப்பட்ட ஒரு சில அமெரிக்கத் துருப்பினரின் அரை நிர்வாண உடல்கள் கயிறுகளால் கட்டப்பட்டு வீதிகளில் இழுத்துச் செல்லப்பட்ட காட்சியும், பிடிக்கப்பட்ட டுரோண்டின் ராண்டின் தொலைக்காட்சிப் பேட்டியும், அமெரிக்க மக்களிடையேயும், அரசியல்வாதிகள் இடையேயும்

திருப்பி அழைக்கப்படுவார்கள் என பில் கிளின்டன் வேறு வழியின்றி அறிவிக்க வேண்டியதாயிற்று.

அது மாத்திரமல்ல ஜெனரல் அயிடீட்டைத் தூக்திப் பிடிக்க வென அனுப்பப்பட்ட விசேட படைப்பிரிவினரையும், தான் மீள எடுத்துக் கொள்வதாக கிளின்டன் அறிவித்துள்ளதானது அயிடீட்டுக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதப்படுகிறது.

ஐ.நா. சபையும், அமெரிக்காவும் சோமாலியாவை ஒரு குடியேற்ற நாடாக மாற்ற முயன்று வருகின்றன என்பதே அயிடீட்டின் கருத்தாகும். அது மட்டுமல்ல சோமாலியாவிற்கான ஐ.நா. சபை அதிகாரி கோவேயும், அமெரிக்கத் துருப்புக்களும் தமது முஸ்லீம் நாட்டில், கிறிஸ்தவ மதத்தைப் பரப்பவே வந்துள்ளனர் எனப் பலர் மத்தியில் அபிப்பிராயம் நிலவுகிறது. சோமாலியாவானது முன்பு இத்தாலி, மற்றும் பிரித்தானியாவின் கீழ் குடியேற்ற நாடாக இருந்து வந்ததும் இந்தப் பயம் எழுவதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

இந்தப் பின்னணியில், ஒரு அந்

படைகளால், குறிப்பாக உலகின் மிகப்பெரும் வல்லரசான அமெரிக்காவின் துருப்புக்களினால் அயிடீட்டைப் பிடிக்க முடியவில்லை என்றால் அது அவருக்கு இருக்கும் பொது மக்களின் ஆதரவையே சுட்டிக்காட்டுகிறது.

உலகின் அமைதிகாக்கும் படையாக இருந்து வந்த ஐ.நா. படைகள், முதலில் அமைதியை ஏற்படுத்தும் படையாகவே சோமாலியாவில் இறங்கியது. ஆனால் 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' எனும் நிலையிலேயே அவர்கள் தற்பொழுது உள்ளனர்.

ஐ.நா. மற்றும் அமெரிக்கப் படைகள் முடிந்தவரை பாரபட்சம் இன்றி செயற்பட்டிருக்க வேண்டும். மாறாக அமெரிக்கப் படைகள் அயிடீட்டின் எதிரியான மொகமட் சுல்சீனை ஆதரித்தனர் என்றும், இதனால் தமக்குரிய கடமையினின்றும் தவறினர் என்றும் குறை கூறப்பட்டது. நடந்து முடிந்தவைகளை அவதானித்தால், அமெரிக்கா ஜெனரல் அயிடீட்டை தப்பாகக் கணித்துள்ளது என்றே கூறவேண்டியிருக்கிறது. வளைகுடாப் போரில் பலம் வாய்ந்த சதாம் குசேன்

சாள்ஸ் தேவசகாயம்

ஐ.நா. படைகளின் இக்கடினப் போக்குக்குக் காரணம், கடந்த ஆனி மாதத்தில் சோமாலிய ஆயுதக் குழுவினால் நடாத்தப்பட்ட தாக்குதலாகும். காவலுக்கு உட்படுத்தப்படாதிருந்த ஆயுதக் கிடங்கொன்றை, ஐ.நா. படையைச் சேர்ந்த பாகிஸ்தானிய வீரர்கள் பரிசோதனை செய்து கொண்டிருந்த போது, நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் 24 பேர் கொல்லப்பட்டனர்.

இத் தாக்குதல் பற்றி நடவடிக்கை எடுக்காவிட்டால், எதிர் காலத்தில் தமது படையினரின் பாதுகாப்புக்கு மேலும் குந்தகம் ஏற்பட்டுவிடும் என அஞ்சிய ஐ.நா. சபை, பாதுகாப்புச் சபையை அவசரமாகக் கூட்டி "இத் தாக்குதலுக்கு காரணகர்த்தாக்களாக விளங்கியவர்களைக் கைது செய்யவும், விசாரணைக்கு உட்படுத்தவும், தண்டனை கொடுக்கவும் அதிகாரம் வழங்குவதாக" பிரேரணை ஒன்றை நிறைவேற்றியது.

இதனைத் தொடர்ந்து சுமார் 10 நாட்களின் பின்னர், ஐ.நா. சபை செயலாளர் நாயகத்தின் சோமாலியாவுக்கான அதிகாரியாக விளங்கிய, இளைப்பாறிய அமெரிக்க அட்மிரலான ஜொனதன் கோவே, சோமாலியாவின் தலைநகரான மொகாடிசுவின் குண்டு துளைக்கப்பட்ட இடிபாடுகளுடன் விளங்கிய சுவர்களில், அயிடீட்டை கைது செய்ய தகவல் தருவோருக்கு 25,000 அமெரிக்க டொலர் சன்மானமாக வழங்கப்படும் என்ற விளம்பரச் சுவரொட்டிகளை ஒட்டினார். இதே அயிடீட்டின் ஆதரவாளர்கள்தான், கடந்த வருடம் டிசம்பர் 9 ஆம் திகதி அமெரிக்கத் துருப்புக்கள் மொகடிசுவின் கடற்கரையில் வந்திறங்கிய போது கை குலுக்கி வரவேற்றவர்கள். அமெரிக்கத் துருப்புக்கள் சோமாலியாவுக்கு வருவதை ஆதரிப்பதாக அறிக்கைவிட்டதும் இதே அயிடீட்தான். மேலும் அமெரிக்காவின் முன்னாள் ஸ்தானிகரின் தலைமையில் கூட்டப்பட்ட இரு சமாதான மாநாடுகளிலும் அயிடீட் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

உண்மையில் அமெரிக்கத் துருப்புக்கள் தரை இறங்கிய போது அவர்களின் மொத்த எண்ணிக்கை 28,000 ஆக விளங்கியது. வளைகுடா யுத்தத்தின்

ஐ.நா. சபை ஏனைய குழுக்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக குற்றம் சாட்டினார். ஐ.நா. சபை செயலாளர் நாயகம் போட்றஸ் காலி, மொகடிசுவுக்கு விஜயம் செய்த போது அயிடீட் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்து தமது அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டனர். உண்மையில் அயிடீட் குழுவினரே மொகடிசுவில் பலம் வாய்ந்த ஆயுதக் குழுவினராகத் திகழ்ந்து வந்தனர். விமானத்தளம், துறைமுகம் சார்ந்த முக்கிய நிலைகள் இவர்கள் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்து வந்துள்ளன.



ஐ.நா. படைகளுடனான சண்டையில், எறிகுண்டால் காயமுற்ற இளம் சோமாலிய இளைஞன்.

ஆனி மாதத்தில், பாகிஸ்தானிய துருப்புக்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என அயிடீட் கூறி வந்திருந்தாலும், அமெரிக்கா - ஐ.நா. சபை துருப்புக்கள் அதனை நம்பத்தயாராக இருக்கவில்லை.

தொடர்ந்து அயிடீட் வேட்டையில் ஈடுபட்ட ஐ.நா. மற்றும் அமெரிக்கத் துருப்பினருக்கு புரட்டாசி மாதத்தில் முதலாவது பெரும் வெற்றி கிடைத்தது. அயிடீட்டின் வலதுகரமாக விளங்கிய ஒஸ்மா அட்டோ என்பவர் உலங்குவானூர்தியில் இருந்து இறக்கப்பட்ட அமெரிக்கத் துருப்புக்களினால் செப்டம்பர் மாத இறுதியில் கைது செய்யப்பட்டார். அயிடீட்டின் நிதி உத

அதிர்ச்சி அலையை ஏற்படுத்தி விட்டது.

1982 இல் பெய்ருட்டில் அமெரிக்கத் துருப்புக்கள் தலையிட்டமையும், துருப்புக்கள் இருந்த கட்டிடம் வெடிகுண்டினால் தகர்க்கப்பட ஏராளமானோர் உயிரிழந்ததும் பல அமெரிக்க மக்கள் மனதில் நிழலாடத் தொடங்கின. பல அரசியல்வாதிகள் உட்பட பல்லாயிரக்கணக் [illegible] அமெரிக்கத் [illegible] பற்றி [illegible], அவர்கள் உடன டியாகத் திருப்பி அழைக்கப்படல்

வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

ஸைம் / CNN ஆல் ஐப்பசி 7 ஆம் திகதி எடுக்கப்பட்ட பொதுசன அபிப்பிராயக் கணக்கெடுப்பின் படி 36 வீதமானோர் மட்டுமே, அமெரிக்க துருப்புக்கள் சோமாலியாவில் நிலை கொண்டிருக்க ஆதரவு தெரிவித்துள்ளனர். தை மாதத்தில் கேட்கப்பட்ட இதே கேள்விக்கு 79 வீதமானோர் ஆதரவாக பதிலளித்திருந்ததும் இங்கு கவனிக்கத்தக்கதொன்றாகும்.

அமெரிக்க மக்கள், மற்றும் காங்கிரஸ் தலைவர்களின் ஆதங்கத்தைத் தணிக்கும் முகமாக, அமெரிக்கத் துருப்புக்கள் பங்குனி (1994) 31 ஆம் திகதிக்குள்

நிய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடும் வீரனுக்குப் பின்னால், அணிவகுப்பதில் பல சோமாலியர்களுக்கு தயக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. ஒரு சில இலட்சம் மக்களை மட்டுமே கொண்டுள்ள மொகடிசுவில் அயிடீட்டும், ஆதரவாளர்களும் குறிப்பிட்ட பகுதியிலேயே செறிந்துள்ளனர். இவ் வரையறுக்கப்பட்ட பகுதிக்குள்ளேயே ஐ.நா.

செய்யாததை இன்று குழுத் தலைவன் அயிடீட் செய்து கொண்டிருக்கிறார். ஆனி 17 இல் அயிடீட்டைப் பிடிக்கும் முயற்சியைத் தொடங்கி வைத்த அமெரிக்க முன்னாள் அட்மிரல் கோவேயே "அயிடீட் சோமாலியாவின் தனிப்பெரும் தலைவராகலாம்" என தற்போது கூறியுள்ளதில் இருந்து அறிந்து கொள்ளலாம். ■

நன்றி: 'உலகத்தமிழர்'

## தென்னிலங்கை பகுதி தெருக்களில் இளைஞர்களின் சடலம்

தென்னிலங்கையின் பல பாகங்களிலும் இனந்தெரியாத பல சடலங்கள் அண்மைக் காலங்களில், கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாகவும், இவை தொடர்பாக பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாகவும் 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இச்சடலங்களில்கண்கள் கட்டப்பட்டுள்ளதுடன், தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது. வேறு சில சடலங்கள் சிதைந்த நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான பல சடலங்கள் முகத்துவாரம், மீரிகம, வெலிவேரிய, நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் இவ்வாறான சடலங்கள் மோட்டார் வாகனங்களில் வருவோரால் போடப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ■

### மட்டு மாவட்டத்தில் பத்து பொதுமக்கள் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நான்கு முகாம்களில் இருந்து வெளியேறிய சிறீலங்கா இராணுவத்தினர், இரு கிராமங்களை சுற்றிவளைத்து, அங்கிருந்து பொதுமக்களை கைது செய்து முகாம்களுக்குக் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மட்டக்களப்பு [illegible], அடிச்சல், [illegible], 7ஆம் கிராமம் ஆகிய முகாம்களில் இருந்து வெளியேறிய சிறீலங்கா இராணுவத்தினரே இக் கைதுகளை நிகழ்த்தினர். ■

## அதிகளவு மாண..

ஞானம், கலை வர்த்தக முகாமைத்துவ கற்கை நெறிகளுக்கு மேலும் கூடுதலான மாணவர்களை அனுமதிக்கக் கூடிய நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் உள்ளது என்பதை நாம் அறிகின்றோம். ஆனால் துர் அதிர்ஷ்டவசமாக வெட்டுப் புள்ளிகளே இதற்குத் தடையாக இருக்கின்றது.

இறுதியாக எம்முடைய நிலை குறித்து அனுதாபம் கொண்டு வெவ்வேறு பீடங்களுக்கு கூடுதலான தமிழ் மாணவரை அனுமதிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு தயவாக உங்களை வேண்டிக் கொள்வதுடன் எமக்கு எதிர்காலத்திலே விசேட பரீட்சைகள் எதையும் நடாத்த வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறோம். க.பொ.த. உயர்தரத்திலே ஒரு பரீட்சையை நடத்த முடியாவிட்டால் முழு இலங்கைக்குமான பரீட்சையை ரத்துச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இதற்கு ஒரு முன்னுதாரணம் உண்டு என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். அதாவது 1989 இல் தெற்கில் கொந்தளிப்பு நிலை தோன்றிய போது இலங்கை பூராவும் எல்லாப் பரீட்சைகளும் ஒத்திப் போடப்பட்டன என்பதை நாம் நினைவு கூர விரும்புகின்றோம். ■

Tamileelam Archive

# காலத்தின் தேவைகள் உணர்ந்து பாடும் கவிஞர்

■ 'நாளை' வெளியீட்டு விழாவில் புதுவை

பாரதியாருக்கோ, காசி ஆனந்தனுக்கோ தமிழைப் பாடினார்கள் என்தனால் மட்டும் பெருமையில்லை. தாம் வாழ்ந்த வாழுகின்ற காலத்தின் தேவைகளை உணர்ந்து அதனைப் பாடினார்கள். அதனால் தான் அவர்களுக்குப் பெருமை. அது போலவே கவிஞர் நிலா தமிழின் தாசனும், தாம் வாழ்கின்ற காலத்தின் தேவைகளையே முதன்மைப்படுத்தி பாடி வருகின்றார். எனவே தான், அவரது நூலுக்கு வெளியீட்டுரை நிகழ்த்துவதையிட்டு நான் நிறைவடைகிறேன்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார். கவிஞர் நிலா தமிழின்தாசனின் 'நாளை' கவிதை நூலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்திய போது அவர் மேலும் கூறுகையில், திருக்கோணமலை எனக்குப் புகுந்த வீடு. ஆனால் கவிஞருக்கு அதுதான் பிறந்த வீடு. திருக்கோணமலை மண்ணிற்கே ஒரு பெருமை உண்டு. அங்கு ஒரு நாள் வாழ்ந்தால் கூட கவிதை பாடவரும். இன்றைய பசிக்கு உணவு தராமல் ஒதுங்கிவிட்டு நாளை பாயாசம் தருவதால் பயனில்லை. இதனை இந்த மண்ணில், வாழும் எழுத்தாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

'நாளை' நூலின் முதற் பிரதியை அரசியற்துறை நடுவப்பணியகத்தைச் சேர்ந்த தங்கன் அவர்களிடமிருந்து, தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் பெற்றுக் கொண்டார்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் ந.-இன்பன் தலைமையில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவை, திருமலைத் தொடர்பகப் பொறுப்பாளர் மூர்த்தி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் சி. ரவி வரவேற்புரை நிகழ்த்தினார். யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் இ. முருகையனின் சிறப்புரையும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கோ. பத்மநாதனின் மதிப்பீட்டுரையும் இடம்பெற்றது.

இந்த இலக்கியம் தமிழுக்கு வளம் சேர்க்கும் ஒரு கவிதைத் தொகுதியாகும் எனினும் அவர் எடுத்துக் கொண்ட கருப்பொருள் இன்றைய சமகாலத்தின் தேவையாகும் என்று பேராசிரியர் அ. சண்முகதாஸ் தமது உரையில் குறிப்பிட்டார். நூலாசிரியரின் பதிலுரை மற்றும் நன்றியுரையுடன் வைபவம் நிறைவெய்தியது. ■

## யுத்தமே சிறீ ....

ஜனாதிபதியின் புதிய உத்தரவின்படி சிறீலங்கா விமானப்படையும், சிறீலங்காக் கடற்படையும், சிறீலங்கா இராணுவத்தின் வட பிராந்தியத்தின் தலைமைகளும் ஜெரி டி சில்வாவுக்குக் கட்டுப்பட்டே செயற்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மணலாறு இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியும் மாற்றப்பட்டு, அந்த இடத்திற்கு சரத் முனசிங்கா நியமிக்கப்பட்டுள்ளார். இவ் இராணுவத் தலைமைகளின் மாற்றங்கள் யாழ் குடாநாட்டின் மீதான, புதிய இராணுவத் தாக்குதலுக்கான அறிகுறியாகக் கருதப்படுகின்றது.

இராணுவக் கட்டமைப்பு மாற்றங்கள், இராணுவ ஆயுத பலத்தைப் பெருக்குதல் என்பவற்றிலேயே முழுமூச்சாக நிற்கும் சிறீலங்கா ஜனாதிபதி விஜய துங்க, எப்படியாயினும் யுத்தத்தை நடாத்தி தன்னை சிங்கள பௌத்த வீரனாகப் பிரகடனப்படுத்த துடியாய்த் துடித்து வருகின்றார். தனது பௌத்த சிங்கள வெறித் தன்மையை மக்களுக்கு வெளிப்படுத்த பூநகரியில் விடுதலைப் புலிகளுடன் சிறந்த முறையில் போராடியதற்காக, லெப்டினன்ட் கேர்ணலாக இருந்த ரஞ்சன் சில்வாவுக்கு கேர்ணலாக பதவியுயர்வு அளித்துள்ளார்.

### அரசியல் தீர்வை நிராகரிக்கும் ஜனாதிபதி

மூன்று வருடங்களாக, 45 பேருடன் 47 கூட்டங்களை நடாத்திய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு, ஆறே ஆறு பக்க அறிக்கை ஒன்றுடன் தனது பணியை முடித்துக் கொண்டுள்ளது. தென் மாகாணத்துக்கு, என்ன அதிகாரப் பரவலாக்கத்தை சிறீலங்கா அரசாங்கம் கொடுக்க நினைக்கின்றதோ, அதே அதிகாரப் பரவலாக்கத்தைத் தான், வடக்கு -கிழக்கு பகுதிகளுக்கும் சிறீலங்கா அரசாங்கம் கொடுக்கும் என்பதே அப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சாராம்சம் ஆகும். சிறீலங்கா ஜனாதிபதி கூறுவதுபோல், வடக்கு -கிழக்கு மக்களுக்கு என குறிப்பிடத்தக்க பிரச்சினை ஏதுவும் இல்லை. தென் மாகாண மக்களுக்கு என்ன பிரச்சினை உண்டோ சப்பிரகமுவ மாகாண மக்களுக்கு என்ன பிரச்சினை உண்டோ, அதே பிரச்சினைதான் வடக்கு கிழக்கு மக்களுக்கும் என பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சும் வெளிப்படுத்தியுள்ளது. அதேவேளை சமஸ்ட்டி என்ற சொல்லையே பிரயோகிக்காத, சமஸ்ட்டி முறை ஒன்று பற்றியும் பாராளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கை பேசுகின்றது. 'இந்திய பாணியிலான அதிகாரப் பரவலாக்கம், ஆனால் சம்ஸ்ட்டி என்ற சொல்லே வராமல், ஐக்கிய சிறீலங்கா என்ற கட்டமைப்பு பேணப்படும்' என்பது உண்மையில் பாராளுமன்றத் தெரிவுக்குழு உலக மக்களை எவ்விதம் ஏமாற்ற விரும்புகிறது என்பதற்கு மிகச் சிறந்த சான்றாகும். இவ்விதம் அதிகாரமற்ற மாகாணசபை கூட, ஜனாதிபதியைப் பொறுத்தமட்டில் ஏற்புடைய ஒன்றாகத் தெரியவில்லை.

"மத்திய அரசு வகுக்கும் கொள்கைகளை, மாகாணசபைகள் அமுல் செய்ய வேண்டும். ஓர் அரசுக்குள் இன்னொரு அரசு இயங்க அனுமதியேன். மத்திய அரசுக்குச் சவாலாக அமையும் மாகாண சபைகளைக் கலைக்கத் தயங்கமாட்டேன்" எனச் சூளுரைத்துள்ள சிறீலங்கா ஜனாதிபதி, "நான் ஜனாதிபதி. எனக்கு மாகாணங்களின் எல்லைகளை மாற்றும் அதிகாரம் உண்டு. நான் விரும்பினால் வடக்கு -கிழக்கு மாகாணங்களின் எல்லைகளை மாற்றியமைக்க முடியும்" எனப் படு சர்வாதிகாரமாகப் பேசி வருகிறார்.

### எல்லை மாற்றும் சிறீலங்காவின் புதிய சதி

தமிழீழத் தாயகத்தினை வடக்கு, கிழக்கு எனப் பிரிக்கும் முயற்சி நடைமுறைச் சாத்தியமற்றது என்பதை உணரும் சிறீலங்கா, எல்லை மாற்றம் என்ற பெயரில் தமிழீழத் தாயகத்தின் பரப்பைக் குறுக்கவும், தமிழீழத்தின் எல்லைக் கிராமங்களின் ஊடாகத் துண்டு போடவும் திட்டம் தீட்டி வருவதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

அதேவேளை, சிறீலங்காவின் அடிவருடிகளான தமிழ்க் குழுக்களும், 'வடக்கு கிழக்குப் பிரிவினையை அனுமதியோம்; ஆனால் எல்லை மாற்றத்தை அமுல் செய்வதை ஆதரிப்போம்' எனப் புதிய கோசங்களை எழுப்பத் தொடங்கிவிட்டன. எல்லை மாற்றங்கள் இராணுவ முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டால் யுத்த சூழ்நிலை மேலும் அதிகமாகும் என அவதானிகள் கருதுகின்றனர். ■

## வழக்குத் தாக்....

போயுள்ளனர். சிறீலங்காப் பாதுகாப்புப் படைகள் திடீர் சுற்றிவளைப்புகள் மூலம் காலத்துக்கு காலம் கைதுகளை நடாத்துகின்றனர். ஆயினும் கைது செய்யப்பட்டவர்களில் விடுவிக்கப்பட்டவர்கள் தவிர, ஏனையோரின் விபரங்களையோ அவர்களுக்கு என்ன நடந்தது என்பதையோ சிறீலங்கா அரசாங்கம் வெளியிடுவதில்லை. சமீபத்தில் மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதி இராணுவ முகாம் ஒன்றுக்கு, மனித உரிமைக்குழு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டபோது, அங்கு இருபத்தொரு தமிழ் இளைஞர்கள் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக கடுங்காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த உண்மையை இவர்கள் கண்டுபிடித்துள்ளனர். நாற்பத்தி நான்கு தமிழ் இளைஞர்கள் இந்த இராணுவ முகாமில் வெளியுலகத் தொடர்பு ஏதுமின்றி காவலில் வைக்கப்பட்டு கடூழிய முறையில் வதைக்கப்பட்டனர் எனவும், இம்மனித உரிமைக்குழு விஜயம் செய்வதை இறுதி நேரத்தில் அறிந்து கொண்ட இராணுவத்தினர் அவசரம் அவசரமாக இருபத்தி மூன்று பேரை எங்கோ கொண்டு சென்று விட்டனர் எனவும் இம் மனித உரிமைக்குழு கண்டுபிடித்துள்ளது.

இந்த 23 பேரின் விபரங்களை அறிய அம்மனித உரிமைக்குழு, இலண்டனில் உள்ள தமிழ் அமைப்புக்களின் உதவியை நாடி உள்ளதாகத் தெரியவருகிறது.

### 5000 க்கு மேல் விதவைகள் 14,000க்கு மேல் ஆதரவற்ற குழந்தைகள்

இதற்கிடையே சிறீலங்கா அரசாங்கம், தென் தமிழீழ மக்கள் மேல் நடாத்திவரும் கண்மூடித்தனமான தாக்குதல்களால் கடந்த மூன்று வருடத்தில் 5.000க்கும் மேற்பட்ட பெண்கள் விதவைகளாகி உள்ளனர் எனவும், 14,000 க்கு மேற்பட்ட குழந்தைகள் ஆதரவற்றோர் ஆக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது. தென் தமிழீழ மக்கள் மேல் இராணுவ அழுத்தத்தைப் பிரயோகித்து, அவர்களது வாழ்வை, வளத்தை, உயிரை அழிப்பதன் மூலம் அவர்களுக்கும் வடதமிழீழ மக்களுக்கும் இடையே பகைமை உணர்வை தோற்றுவிக்க வேண்டும் என்பதே சிறலங்காவின் சதி நோக்கமாக இருக்கிறது. வட தமிழீழம் அரசியலில் விழிப்புணர்வு பெறுமுன்பே, தென் தமிழீழம் அரசியல் விழிப்புணர்வு பெற்ற வரலாற்றையும் எத்தனையோ இலட்சம் தென் தமிழீழ மக்கள் தமிழீழ விடுதலையை தம் உயிரிலும் மேலாக மதிப்பையும் சிறீலங்கா அரசு மறந்து வருகின்றது. தென் தமிழீழத்தில் சிறீலங்கா அரசாங்கம் செயும் ஒவ்வொரு தமிழின விரோத நடவடிக்கையும் தென் தமிழீழ மக்களிடை தமிழீழ தேச விடுதலையின் தேவையை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றது.

சமீபத்தில் இலண்டன் வந்த தென்தமிழீழத்தில் வாழும் பழமைவாதக் கருத்துடைய தமிழ்ப் பிரமுகர் கூட, தென் தமிழீழத்தில் விடுதலைப் புலிகளின் செல்வாக்கே மேலோங்கி நிற்கிறது எனக் கூறியுள்ளார். அத்துடன், ஒரு இயக்கம் எவ்வாறு வளர்கிறது என்பதற்கு, இவ்வியக்கம் முதல் வருடத்திலும் அடுத்த வருடங்களிலும் எவ்வாறு செயற்பட்டுள்ளது எனப் பார்ப்பதே சிறந்த முறை. அவ்வழியில் பார்க்கையில் தென் தமிழீழத்தில் விடுதலைப் புலிகள் இராணுவ பலத்திலும் சரி, நிர்வாக முறைகளிலும் சரி பிரமிக்கத் தக்க வளர்ச்சி பெற்று வருவதாகவும் தென் தமிழீழத்தின் அதிக பிரதேசம் புலிகளின் அரசு நோக்கிய அரசில் தான் இயங்குகின்றது எனவும் கூறியுள்ளார். முஸ்லீம் மக்களுக்கும் புலிகளுக்கும் இடையே சுமூகமான உறவு நிலையே காணப்படுவதாகவும், பல முஸ்லீம் கிராமங்கள் சிங்கள கொலை வெறிக்கு இலக்காகாதவாறு புலிகளாலேயே பாதுகாக்கப்பட்டு வருகின்றது எனவும் கூறியுள்ளார்.

அத்துடன் தென் தமிழீழத்தை, வட தமிழீழத்தில் இருந்து பிரிப்பது என்பது நடக்கமுடியாத ஒன்று என்றும் கூறிய அவர், தமிழர் தாயகக் கோட்பாடு ஒவ்வொரு தமிழனதும் உயிர் நாடி எனவும் கூறினார். ■

## உயிரிழப்புக் ....

என வாசுதேவ நாணயக்கார மேலும் கூறியுள்ளார்.

### சிங்களவரிடையே அரச விரோத உணர்வு

பூநகரிக் களத்தில் ஆயிரம் இராணுவத்தினர் வரை உயிரிழந்த நிலையில், சிறீலங்கா அரசாங்கம் சரியான புள்ளி விபரங்களை வெளியிடாது காட்டிவரும் தயக்கம், சிங்கள மக்களிடையே குறிப்பாக சிறீலங்கா இராணுவத்திலுள்ளவர்களின் தாய் தந்தையர்களிடம், என்றுமில்லாத அளவுக்கு அரச விரோத உணர்வை தோற்றுவித்துள்ளது.

தினமும் கொழும்பிலுள்ள கூட்டுப் படைத் தலைமையகத்தை முற்றுகையிடும் பெற்றோர்கள், தமது பிள்ளைகளை போர்க்களத்தில் இருந்து அழைத்துத் திரும்ப தங்களிடம் ஒப்படைக்குமாறு வற்புறுத்தி வருகின்றனர்.

### புலிகள் கருணை காட்டியதாகத் தகவல்

பூநகரிப் போர்க் களத்தில் காயமடைந்த சிறீலங்காவின் கடற்படையைச் சேர்ந்த ஒருவர் விடுதலைப் புலிகள் முகாம்களை முற்றுகையிட்டுத் தாக்குதலைத் தொடங்கியவுடன், சிங்களத்தில் "எம்மிடம் சரணடையுங்கள். நாம் உங்களை உங்கள் தாய்மாரிடம் சேர்ப்பிப்போம்" என அறிவித்ததாகவும், இதற்கு படையினர் செவி சாய்க்க மறுத்த நிலையிலேயே வேகமாகத் தாக்குதல்களைத் தொடங்கினர் எனத் தெரிவித்துள்ளார். புலிகளின் பிடியிலிருந்து தப்ப முடியாத இராணுவத்தினர் சிலர் தற்கொலை செய்துகொண்டதாகவும் இவர் கூறினார்.

### பிரிவுப் பொறுப்பாளரின் புரளிக் கதை

பூநகரித் தாக்குதலில் சிறீலங்கா இராணுவத்தின் பிரிவுப் பொறுப்பாளர்களுள் ஒருவராக இருந்த சொய்சா என்பவர், "பூநகரித் தாக்குதலில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் வெள்ளை இனத்தவர்களும் இணைந்து நின்று தாக்குதல் நடத்தினர். நான் இஸ்ரேலியர்களிடம் பயிற்சி பெற்றிருக்கிறேன். அவர்களின் நிறம், உடலமைப்பு என்பன எனக்குத் தெரியும். புலிகளுடன் காணப்பட்டவர்கள் இஸ்ரேலியர்களே" எனத் தெரிவித்தார். இந்தப் புரளிக் கதைக்கு வழமைபோல் சிறீலங்காவின் பத்திரிகைகளும் முக்கியத்துவம் அளித்துள்ளன. ஆயினும் சிறீலங்காவின் அமைச்சர் விமல் விக்கிரமசிங்க, "பூநகரித் தாக்குதலில் புலிகளுடன் வெளிநாட்டுக் கூலிப்படைகளும் ஈடுபட்டதாக வெளிவந்த செய்திகளுக்கு எவ்வித ஆதாரமுமில்லை. அந்தச் செய்தியில் உண்மையும் இல்லை" என சிறீலங்காப் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார். சிறீலங்கா இராணுவத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் எவ்வாறு, உண்மைக்கு மாறான கதைகளைப் பரப்பி வருகின்றனர் என்பதற்கு, சிறீலங்காவின் கப்டன் சொய்சாவின் சாட்சியம் தகுந்த சான்றாகத் திகழ்கின்றது. ■

# ஒரு தீவில் இருநாடு!

## - மற்றொரு சான்று

இலங்கைத் தீவில் சிறீலங்கா, தமிழீழம் என்று நாடுகள் தாமாகவே வலுப்பெற்று வருவதை அங்கு நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களும் வலியுறுத்தி வருகின்றன. பூநகரி யுத்தத்தில் சிறீலங்காப் படைக்கு ஏற்பட்ட இழப்புகளை சரிவர அறிய முடியாது தவிக்கும் சிறீலங்கா அரசு, தனது கணிப்புப்படி காணாமல் உள்ள 240 இராணுவத்தினர் புலிகள் வசம் இருக்கின்றார்களா என அறிவதற்கு சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியைப் பகிரங்கமாக நாடியுள்ளனர்.

இது சிறீலங்காவின் இறைமை, தமிழீழத்தில் முற்றாக இழக்கப்பட்டு விட்டதை பிரதி பலிக்கின்றது எனவும், ஒரு தீவில் இரு நாடுகள் என்பது நடைமுறையாகிவிட்டதால் தமிழீழ அரசான தமிழீழ விடுதலைப் புலிகளின் 'அரசு நோக்கிய அரசிடம்' சிறீலங்கா அரசாங்கம் சர்வதேச ஊடகத்தினூடாகத் தகவல் பெற முயற்சிக்கிறது என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ■

### முழுநேர ஆதரவாளர் வீரச்சாவு

சிறீலங்கா இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் இணைந்து, மட்டக்களப்பிலுள்ள பாபவற்கொடிச்சேனையில் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகளின் முழுநேர ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த எட்வேட் மாஸ்டர் என்னும் இவ்வாதரவாளர் மட்டக்களப்பு இருதயபுரத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ■

# ஆரையம்பதி கிராமத்தில் மட்டும் 350 தமிழர்கள் படுகொலை

■ இராணுவம், ரெலோ கூட்டு நடவடிக்கை

"இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகிய பின்னர், ஆரையம்பதியில் மட்டும் 350 அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இப்படுகொலைகளுக்கு சிறீலங்கா இராணுவமும், அவர்களுடன் இணைந்து செயற்படும் தமிழ்க்குழுக்களுமே காரணமாகும்." இவ்வாறு கொழும்பு தமிழ் வாரப் பத்திரிகை ஒன்றுக்கு ஆரையம்பதி வாசி ஒருவர் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட வாரப் பத்திரிகை அண்மையில், மட்டக்களப்பில் படையினரும், அவர்களோடு இணைந்து செயற்படும் ரெலோ கும்பலும் புரியும் கொடுமைகள் குறித்து இரண்டு பக்கக் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. இக்கட்டுரையில் கூறப்பட்டவற்றை மறுத்து இக்குழுவைச் சேர்ந்த எம்.பியான கருணாகரன் மறுப்பு, ஒன்றை இப்பத்திரிகைக்கு அனுப்பியிருந்தார்.

இவரின் மறுப்பு அறிக்கை முழுப் பொய் என்றும், கட்டுரையில் வெளியானவை உண்மைச் சம்பவங்களே என்றும் விபரித்து எழுதப்பட்ட கடிதம் இதுவாகும். அக்கடிதத்தின் விபரம் வருமாறு: எமது ஊரில் மட்டும் (ஆரையம்பதி) சுமார் 350 பேர் இவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். இது பற்றிய முழுத் தகவல்களையும் நீங்கள் நேரில் வந்தால், வீடு வீடாக அழைத்துச் சென்று உறுதிப்படுத்துவோம். ரெலோவைச் சேர்ந்த ஒருவர் மண்முனையில் இராணுவத்தினருடன் ஜீப்பில் சென்று கொண்டிருந்தபோது, கண்ணிவெடியில் கொல்லப்பட்டதற்காக ஆரையம்பதியைச் சுற்றியிருந்த 47 அப்பாவி இளைஞர்கள் ஆரையம்பதி முகாம் அருகே உள்ள சவக்காலையில் ரயர் போட்டு உயிருடன் எரிக்கப்பட்டனர். ரெலோ கும்பலைச் சேர்ந்த ராம், ராமன், அச்சுதன், வெள்ளை, அன்பன் ஆகியோரே இராணுவத்தினருடன் சேர்ந்து இக்கொடூரத்தைப் புரிந்தனர். இது நடந்தபோது கருணாகரன் எம்.பி. மட்டுக்களப்பில்தான் நின்றார். ஆரையம்பதி அதிரடிப்படை முகாமில் இப்போதும் ரெலோ குழுவினர் இருக்கின்றனர். இவர்களில் அன்பன் என்பவர் அதிரடிப்படையினருடன் வீடுகளுக்குச் சென்று இளைஞர்களையும், யுவதிகளையும் பிடித்து வருவார். அச்சுதன் அவர்களுடன் பேரம் பேசி பணம் பெற்று விடுதலை செய்வார் என இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ■

படையினரின் அறிவிப்பை அடுத்து

## இராணுவ முகாமிற்கு சென்ற பெண் ஒரு வாரமாகியும் திரும்பவில்லை

சிறீலங்கா இராணுவத்தினர் அறிவித்ததைத் தொடர்ந்து, இராணுவ முகாமுக்குச் சென்ற யுவதி ஒருவர் பல நாட்களாகியும், இதுவரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு கோப்பாவெளி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் பிரேமா என்ற யுவதியை முகாமுக்கு வருமாறு அறிவிப்பு ஒன்றை விடுத்தனர்.

இவர்கள் விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து அம்முகாமுக்குச் சென்ற மேற்படி பெண், இதுவரை வீடு திரும்பவில்லை எனத் தெரவிக்கப்படுகிறது.

இவர் தொடர்பாக உறவினர் மேற்படி முகாமுக்குச் சென்று விசாரித்தபோது, அப்படி எவரும் முகாமுக்கு வரவில்லை என இராணுவத்தினர் பதிலளித்தனராம். ■

## குடாநாட்டைப் ....

நோக்கம் விசாலமானது. இது ஒரு பெருந்திட்டம். பல கட்டங்களாகப் பல்லாயிரம் படைவீரர்கள் பங்குகொண்டு, பாரிய நிலப் பகுதியைக் கைப்பற்றும் ஒரு நாசகாரத் திட்டம். இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆனையிறவு, பூநகரி, காரைநகர், பலாலி ஆகிய தளங்களில் சுமார் இருபதாயிரம் படையினர் காத்துக் கொண்டிருந்தனர்.

கிளாலி மட்டும் ஓடிவந்து திரும்பிச் செல்ல 'யாழ்தேவி' வரவில்லை. அது சாவகச்சேரி, யாழ்நகர், ஊடாக தெல்லிப்பளை வரை செல்வதுதான் திட்டம்.

இதேபோன்று தான் கடந்த ஆண்டும் லெப்.ஜெனரல் கொப்பேகடுவ, அராலி வழியாக மானிப்பாயை அடைந்து, அங்கிருந்து யாழ். நகரைக் கைப்பற்றும் திட்டமொன்றை அமுல்படுத்த முயன்றார். அந்த இராணுவ நடவடிக்கை தொடங்க ஒரு நாள் இருக்க, அராலித் துறையில் நடந்த கண்ணிவெடியில் அவரும் அவரது குழுவினரும் கொல்லப்பட, அப்படையெடுப்புத் திட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. அப்படையெடுப்புத் திட்டத்திற்கு, 'ஒப்பரேசன் ஃபைனல் கவுண்ட் டவுண்' எனப் பெயரிட்டிருந்தனர்.

இப்போது கொப்பேகடுவவின் திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு கிளாலி, சாவகச்சேரிப் பகுதிகளையும் உள்ளடக்கி பாரிய திட்டமாக வரையப்பட்டிருந்தது என்பதுதான் உண்மை.

லெப்.ஜெனரல் கொப்பேகடுவ குழுவினரின் மரணத்துடன், தற்காலிகமாகக் கைவிடப்பட்டிருந்த படையெடுப்புத் திட்டத்தை, இப்போது புலோப்பளைச் சமரில் படையினர் சந்தித்த பேரிழப்புக் காரணமாக, மேலும் ஒரு முறை அரசு பிற்போட்டுள்ளது.

ஆனாலும், முன்னரைப் போல நீண்டகாலம் தாமதித்திருக்காது இம் முறை விரைவில் அடுத்த படையெடுப்பை வேறொரு முனையிலிருந்து தொடுக்க ஆயத்தங்களைச் செய்கின்றது.

இவ்விதமானதொரு பெரும் படையெடுப்பை விரைவில் செய்ய வேண்டிய தேவை சிறீலங்காவின் ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு உண்டு; படைத்துறைத் தலைமைக்கும் அது அவசியம்.

இராணுவ வழி முறைகள் மூலம் தான் இனப்பிரச்சினையை அணுக வேண்டும் என்ற கடும் போக்கைக் கூறி, சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்ற விஜேதுங்கா, இந்த இராணுவ நடவடிக்கையின் தோல்வியை ஏற்றுச் சும்மா இருப்பார் என்று கூற முடியாது. அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலும் வருகின்றது. அத்துடன், 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையில் பங்குகொள்ள வந்த சுமார் இருபதாயிரம் துருப்புக்கள், குடாநாட்டைச் சூழ உள்ள முகாம்களில் முடங்கிக் கிடக்கின்றனர்.

எனவே மிகவிரைவில் மீண்டுமொரு படையெடுப்பை குடாநாடு மீது நடாத்த வேண்டும் என்பதில், படைகளும் அரசும் உறுதியாகவே இருக்கின்றன. இந்த நிலைப்பாட்டிற்கு சிங்கள தேசமும் தனது முழு ஆதரவையும் தெரிவித்துக் கொண்டிருக்கின்றது. ■

நன்றி: 'விடுதலைப் புலிகள்'

(இக்கட்டுரை பூநகரித் தாக்குதலுக்கு முன்னர் எழுதப்பட்டது)

## இராணுவத் தீர்....

தலைவர் தனது செய்தியில் மேலும் தெரிவிக்கையில், "ஆறாயிரம் போராளிகள் இதுவரை உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்கள். இத்தியாக தெய்வங்களை நினைவுகூரும் மாவீரர் நாள் துக்க தினமோ அன்றி அழும் நாளோ அல்ல. இப்புனித நாள் எமது சுதந்திரப் போராட்டத்தை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு உறுதி பூணும் பெருநாள்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

1993 ஆம் ஆண்டுக்கான மாவீரர் நாள் கார்த்திகை 27 அதிகாலை, 00.02 நிமிடத்தில் தமிழ்த் தேசிய கீதம் இசைக்கப்பட்டு தமிழீழம் எங்கும் தீச்சுடர் ஏற்றும் வைபவத்துடன் ஆரம்பமானது. ஆலய மணிகள் ஒலிக்க, அசைவுகள் நிறுத்தப்பட்டு, கௌரவ மரியாதை அளிக்கப்பட்டு மாவீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

சிறீலங்கா விமானப்படை பல இடங்களில் குண்டு வீசிக் குழப்ப முயற்சித்தபோதிலும், மக்கள் எழுச்சியுடனும் மன உறுதியுடனும் மாவீரர் தின நிகழ்ச்சிகளில் பெருமளவில் பங்கு பற்றினர். ■

## பதவி உயர்வில் அரசியல் பொலிஸ் அதிகாரி கவலை

சிறீலங்காப் பொலிஸ் திணைக்களத்தில் பதவியுயர்வுகள் வழங்குவதில், அரசியல் பின்னணி இருப்பதாகப் பொலிஸ் சிரேட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் பின்னணியில் பதவி உயர்வுகள் வழங்கப்படுவதால், திறமையற்றவர்களுக்கு மேற்படி பதவிகள் வழங்கப்படுகின்றன. இதனால் திறமை வாய்ந்தவர்கள் குறிப்பிட்ட தமது சேவைக் காலத்திற்கு முன்னதாகவே, தமது பதவியை விட்டு ஓய்வு பெற்றுவிடுவதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

மனித உரிமையை மீறிய பலருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படுவதினால், பொலிஸ் திணைக்களத்தின் பெயருக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸ் சேவை அரசியலில் இருந்து விடுபட்டால் மாத்திரமே, திறமையாகச் செயற்பட முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். ■

## கடற்புலிகளின் ...

கும் நிலப்பகுதியிலிருந்து கணிசமான பகுதியை விட்டுப் பின்வாங்க வேண்டிவரும்.

'சமிந்ர பெர்னாண்டோ' என்ற சிங்கள விமர்சகர் செப்.5 'ஐலண்ட்' வார இதழில் இவ்வாறு எழுதுகின்றார்.

"விநியோக வசதிகளுக்காக, கடற்படையையே நம்பியிருக்கும் கரையோர இராணுவ முகாம்களை அப்புறப்படுத்தும் வகையில் அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதுதான், கடற்புலிகளின் பிரதான இலக்காக இருக்கின்றது. தொடர்ச்சியான முறையில் கடற்படை மீது அழிவுகளை ஏற்படுத்தினால், கரையோர இராணுவ முகாம்களை அகற்றுவதைத் தவிர அரசுக்கு மாற்றுவழி இல்லாது போகும் என புலிகளின் தலைமை நம்புகின்றது."

தமிழீழக் கடலிலே கடற்புலிகளின் மேலாதிக்கம் பெற்றால் அது கரையோரச் சிங்களப் படை முகாம்களுக்கு சாவு மணி அடிக்கும். அதனால் கணிசமான பகுதி நிலமும் சிங்களப் படைகளிடமிருந்து விடுவிக்கப்பட்டு விடும். அத்துடன் சிங்கள அரசு தமிழீழ மக்கள் மீது திணித்துள்ள சகலவிதமான பொருளாதாரத் தடைகளையும், மீன்பிடி மற்றும் போக்குவரத்துத் தடைகளையும் பிசுபிசுக்கச் செய்து விடும்.

இந்தப் பொற்காலத்தை தமிழீழ மக்களின் கைகளுக்கு விரைவாகக் கிடைக்கச் செய்யும் இலட்சியத்தோடு, கடற்கரும்புலிகளின் துணையுடன் கடற்புலிகள் அயராது பாடுபடுவர். ■

## சிறீலங்காக் .....

றன. இப் படகுகளின் பணி, சந்தேகத்திற்கிடமான கப்பல்களை அல்லது படகுகளைத் துரத்தி அடிப்பதும், இரவு நேரங்களில் ரோந்தில் ஈடுபடுவதும், வேவு வேலைகளில் ஈடுபடுவதும், பாரிய கப்பல்களுக்குப் பாதுகாப்பளிப்பதும் ஆகும். 41 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்ட இந்த வேகப் படகுகள், மணிக்கு 35 -40 கடல் மைல் வேகத்தில் ஓடக்கூடியவை. இதில் 20 மி.மீ. ஓவர்லிக்கன் ரக பீரங்கிகள் இரண்டும், 12.7 மி.மீ. ரக விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளும், மேலும் இயந்திரத் துப்பாக்கிகளும் உள்ளன. இப் படகில் 9 -12 மாலுமிகள் பணியாற்றுவர். 'லெப்ரினன்ட்' தரத்திலான அதிகாரி பொறுப்பாகச் செயற்படுவார். (தரைப்படையில் இப் பதவியை 'கப்டன்' தரத்திற்கு இணையானதாகச் சொல்லலாம்).

### 6. கரையோர ரோந்துப் படகுகள் (Inshore Patrol Craft)

இந்த வகைப் படகுகள் இருபத்தெட்டு சிங்களக் கடற்படையிடம் உண்டு. இதில் நீருந்து விசைப் படகுகளும் (Water Jet) அடங்கும். இந்த வகைப் படகுகளை சிறீலங்கா அரசு தானே தயாரித்துக் கொள்கின்றது. ஆழங்குறைந்த கடற்பகுதிகளில் கண்காணிப்புச் செய்ய, இவ்வகைப் படகுகள் பயன்படுத்தப்படும். 50 கலிபர் துப்பாக்கி ஒன்று பொருத்தப்பட்ட இப் படகுகளில், சாதாரண ரக சுரி குழல் துப்பாக்கிகளும் பயன்படுத்தப்படும். கிளாலி கடல் நீரேரியில், இவ்வகைப் படகுகளையே சிங்களக் கடற்படை பயன்படுத்துகின்றது.

தற்போது 'டெக்கா' ரக ராடர் ஒன்றும் இதில் பொருத்தப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள விசைப் படகுகள், கப்பல்கள் கடற்புலிகளின் வளர்ச்சிக்கெதிராகப் போரிடப் போதுமானவையல்ல என்பதைப் புரிந்த சிறீலங்காக் கடற்படையின் தலைமையலுவலகம் (Head Quarters), தற்போது பிரான்ஸ் நாட்டு உதவியுடன், மேலும் பல்வேறு போர்க் கப்பல்களையும், அவற்றிற்குரிய பயிற்சிகளையும் கடற்படைக்கு உடனடியாக வழங்குகின்றது. இதன் முதற் கட்டமாக பிரான்ஸ் நாட்டு யுத்தக் கப்பலான 'கொமாண்ட் போரே' கொழும்புத் துறைமுகத்தில் சென்ற மாதம் தரித்து நின்று இதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தற்போதைய யதார்த்த நிலைமையைப் புரிந்த சிறீலங்கா கடற்படை, தனது பலத்தை வடபகுதியில் ஒருங்கிணைக்க வேண்டியதோர் நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்பட்டுள்ளது என்பது வெளிப்படை. ஏற்கனவே வடபகுதிக் கடற்பிராந்தியத்தில் பின்வரும் தளங்கள், பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

01. காரைநகரில் உள்ள 'எலாற' கடற்படைத்தளம்.
02. காங்கேசன்துறையில் உள்ள 'காபர்வியூ கொட்டேல்'.
03. கடற்படைத் தொண்டர் படை அலுவலகம்.
04. நயினாதீவு கடற்படைத்தளம்.
05. நாகதேவன்துறை கடல் ரோந்துப் படைத்தளம்.

இவை மட்டுமன்றி சிறீலங்காக் கடற்படையின் மூன்று கண்காணிப்பு கட்டளைக் கப்பல்கள், வடபகுதிக் கடற் பிராந்தியத்திலேயே நிரந்தரமாகத் தரித்துள்ளன. அதே போல அதிவேக ரோந்துப் படகுகள், பீரங்கிப் படகுகள் என்பனவும் பெரும்பாலும் வடபிராந்திய கடல் பகுதிகளிலேயே ரோந்தில் ஈடுபடுகின்றன.

வடபகுதியைப் போன்று பலமுள்ளதாக இல்லாது மேற்குப் பிராந்தியக் கடற் பிராந்தியமானது கடற்படைச் சிப்பாய்களது நலன்களைப் பேணுவது மற்றும் கடற்படை தொடர்பான சகல நிர்வாக வேலைகளைக் கவனிப்பதற்கும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் கட்டளை அதிகாரியாக கப்டன் எ.எச்.என் ராசிக் தற்போது பணியாற்றுகிறார்.

இவ்வளவு பலத்தையும் ஒரே கட்டுப்பாட்டு மையத்தின் கீழ் வைத்திருக்கும் முகமாக சிறீலங்காக் கடற்படை, தற்போது காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையுடன் கூடிய துறைமுகத்தையே வடபகுதியின் பாரிய கடற்படைத் தளமாக அமைக்கப் போவதாகவும், காரைநகர் கடற்படைத் தளத்திலும் பார்க்க இதுவே பாரியதாக அமையும் எனவும், வடபகுதியில் கடற்புலிகட்கு எதிராகப் போரிட புதிய கடற்படைப் பணியாளர் 'கடற்சிங்கங்கள்' உருவாக்கப் போவதாகவும் அறிவித்துள்ளது. ■

நன்றி: 'விடுதலைப் புலிகள்'




# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் கண்காட்சி

(நல்லூரில்)









## மாவீரர் சக்தியால் மகத்தான சாதனைகள்

மாவீரர் செங்குருதி
வழிந்தோடும் மண்ணினிலே
மகத்தான சாதனைகள்
படைக்கின்றார் மாவீரர்!

தேரோடும் நல்லை வீதியிலே
சாதனைப் புகழ் கூறும்
பொருண்மிய மேம்பாட்டுக்
கழகத்துப் பொருட் காட்சி!

சாவினைத் தோள் சுமக்கும்
சரித்திர நாயகரின் வீரத்தால்
[illegible]
வாழ்ப்புகுப்பட்ட மக்கள் வெள்ளம்!

சாதனை விளக்கங்கள்
சத்தான திட்டங்கள்
விளக்கிடும் காட்சியறைகள்
என்னே கலையழகு பாருங்கள்!

கட்டும் சுதந்திர
வேட்கை தீரவில்லை
பொருளாதார தடையிட்டும்
மக்கள் சாதனைக்கு ஓய்வில்லை!

■ கரன்

அழிவுகளின் மத்தியிலும்
ஆக்கமான வேலைத் திட்டங்களில்...

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டுக் கழகம்


U.T.O
211 Katharine Road
London E6 1BU, UK
T/F 081-470 9593

L.T.T.E
Postbox 47, 7800 Struer
Denmark. Tel/Fax
97-841031

T.C.C
P.O.Box 834, Mulgrave North
Victoria 3170, Australia

T.C.G
Post Fach
Germany

T.C.C
Palermo, Italy

T.C.C
Groot Hertoginnelaan 108
2517 EL Den Haag Nederland

T.C.C
P.O.Box 1000 Vika
0110 Oslo - 1, Norway

W.T.C.C
SWITZERLAND

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France

T.C.C
Sweden

Printed by Observer Group Newspapers